www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

JUDE

பக்கம் 20

දිනමුරසු වාරමලර්

செப்.20–26,1998

ரூபா 11/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY முரசு 275



## செம்மணி நள்ளிரவுப் புகை?

## மக்கள் அச்சம்

## அகதி முகாமில் காணாமல் போனோர்

## வந்தாறுமூலை முதல் பொல்கொடை வரை

## காதல் மொழி 500 ரூபாய்

சூடு – சுவை – சுவாரசியம் அது தான் தினமுரசு

படிப்பகம்

www.padippakam.com

# முரசம்

## ஒற்றுமைப் பல்லவி

***அன்புள்ள உங்களுக்கு வணக்கம்.***

'எதிர்க்கட்சி
இனப்பிரச்சனைத் தீர்வுக்கு
ஒத்துழைக்க வேண்டும்!'
என்று ஆளும் தரப்பு கூறுவது
உதட்டளவிலான பேச்சு!

அதனையே முரசு
தொடர்ந்து கூறிவருகிறது!

இந்த ஒத்துழைப்பு பல்லவிக்கு
ஊதுகுழலாக மாறியுள்ள
தமிழ்க் கட்சிகளையும்
'முரசு' விமர்சித்து வருகிறது!

சமீபத்தில் ஜனாதிபதி
ஆற்றியுள்ள உரை
ஆளும் தரப்பின்
ஒத்துழைப்பு பல்லவியின்
உண்மையை உரைத்துவிட்டது!

"புலிகளுடன் இணைந்து
ஆட்சியைக் கவிழ்க்க
ஐ.தே.கட்சி சதி!"
என்றுள்ளார் ஜனாதிபதி!

மிகப் பாரதூரமான
ஒரு குற்றச்சாட்டு இது!

நாட்டின் ஜனாதிபதி
பிரதான எதிர்க்கட்சி மீது
அப்படியொரு குற்றச்சாட்டை
சுமத்துவது சாதாரணமானதல்ல!

அரசைப் பொறுத்தவரை
புலிகள்
தடை செய்யப்பட்ட அமைப்பு!
பயங்கரவாத இயக்கம்!

அதனுடன் உறவு
வைத்துக்கொண்டு சதி செய்வது
மாபெரும் தேசத்துரோகம்!

புலிகள் தங்கியிருந்தால்
அந்த வீட்டையே
இடித்துத் தள்ளுகிறார்கள்!

புலிகள் இயக்க உறுப்பினர்
என்ற சந்தேகத்தில் கைதானவரது
குடும்பத்தையும்
கைது செய்கிறார்கள்!

எனவே, புலிகளுடன்
ஐ.தே.கட்சி இணைந்து
சதி செய்கிறது என்றால்
அக் கட்சியையே
தடை செய்ய வேண்டும்!

அக் கட்சியின்
தலைவர்களையும்
சகல உறுப்பினர்களையும்
கம்பி எண்ண வைக்கவேண்டும்!

ஐ.தே.கட்சியின்
தலைமை அலுவலகத்தை
புல்டோசரால் இடித்து
கிளறிப்பார்த்திருக்க வேண்டும்!

குறைந்த பட்சம்
ஒரு ஆணைக்குழு நியமித்தாவது
தொடாபை ஆராய
விசாரணை நடத்தியிருக்கலாம்!

ஆனால், மேற்கண்ட எதுவும்
இதுவரை நடக்கவில்லையே!

பயங்கரமான குற்றச்சாட்டை
எடுத்து வீசிவிட்டு
படு சாதுவாக இருக்கிறது அரசு!

ஆக, ஜனாதிபதி வீசியது
அரசியல் குண்டு என்பது
அப்பட்டமாகத் தெரிகிறது!

ஜனாதிபதி கூறியது
உண்மையானால்,
ஐ.தே.கட்சியை இந்நேரம்
தேச விரோதக் கட்சியாக
தடை செய்திருக்க வேண்டும்!

மக்களும், பத்திரிகைகளும்
ஜனாதிபதியின்
குற்றச்சாட்டை
பெரிதாக எடுக்கவில்லை!

அந்தளவுக்கு இன்றைய
அரசியலின் சுயரூபத்தை
அனைவரும் அறிந்துள்ளனர்.

ஆனால், இனிமேல்
ஐ.தே.கட்சியின் ஒத்துழைப்பை
ஆளும் தரப்பு நாடுவது எப்படி?

ஆளும் தரப்பின் அணுகுமுறைகள்
எதிர்க்கட்சியை
எதிரிக்கட்சியாக எண்ணியே
வகுக்கப்பட்டு வருகின்றன!

இந்நிலையில்
எதிர்க்கட்சியை மட்டும்
குற்றம் சாட்டுவதில்
எவ்வித அர்த்தமுமில்லை!

எதிர்க்கட்சியிடம்
அரசு நாடி நிற்பது
எதனை?

தக்க யோசனைகளை
என்றால்,
'புலிகளுடன் அரசு
பேசவேண்டும்' என்பதும்
ஒரு யோசனைதானே!

தனது நலனுக்கு
ஏற்றதாக அந்த யோசனை
அமையவில்லை என்பதற்காக
எதிர்க்கட்சிமீது
சதிக் குற்றச்சாட்டு
சுமத்துவது என்ன நியாயம்?

ஆளும் கட்சி, எதிரணி
ஒற்றுமை முயற்சி
என்று கனவு காணும்
தமிழ்க் கட்சிகள்
இப்போதாவது கண்திறக்குமா?

எப்படித் திறக்கும்?
அவர்கள்தான் தூங்கவேயில்லையே!
தூங்குவது போல
நடிக்கின்றனர்!

▬ ▬

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை *என்றென்றும் அன்புடன்,*
*ஆசிரியர்*

# ஆன்மீகம்

## சரணாகதி

இறைவன் மீது நம்பிக்கை வைத்தல் என்பது எத்தகையது என்பதை மகாபாரதத்தில் வரும் ஒரு கட்டம் நமக்குப் புலப்படுத்துகிறது. ஆண்டவனே சகலவற்றுக்கும் பொறுப்பானவன் என்று அவனைச் சரணடைய வேண்டும். பூரண சரணாகதிதான் முழுப்பலனையும் தரவல்ல ஒரே வழி.

அத்தினாபுரத்தின் அவையில் பல நூறு பேர் முன்னிலையில் துரியோதனன், தன் தம்பி துச்சாதனனிடம் திரௌபதியின் துயிலை உரிந்து-பிறந்த மேனியினளாக்கும்படி கட்டளையிடுகிறான். பஞ்சபாண்டவர்களும் பீஷ்மரும் அதே சபையில் வாய்மூடி மௌனிகளாக அமர்ந்திருக்கின்றனர்.

திரௌபதியின் முந்தானையைப் பற்றி துச்சாதனன் இழுக்கிறான். அவையிலிருந்த அனைவரையும் திரௌபதி கூவி அழைத்து உதவி கோருகிறாள். எவரும் அசையவில்லை. தனது அண்ணனான கண்ணனையும் நினைத்துக் கதறுகிறாள். ஆனால் துணி அவளுடைய உடம்பிலிருந்து உருவப்பட்டுக் கொண்டே இருக்கிறது.

துணி தன் உடலை விட்டு முற்றாக உருவப்பட்டு விடாமல் தனது இருகைகளாலும் இறுகப்பற்றிக் கொண்டே அவள் கதறுகிறாள். எதுவும் நடக்கவில்லை.

இறுதியாகத்தான் தனது இருகைகளையும் துணியிலிருந்து அகற்றி தலைமேல் கரங்களைக் குவித்து "கண்ணா... கண்ணா..." என்று சரணாகதியடைகிறாள். அப்போதுதான் கண்ண பரமாத்மா உதவிக்கு வருகிறார். திரௌபதியின் மானத்தைக் காத்தருளுகிறார்.

ஞானேந்திரன்



## உமர் (ரலி)யின் தெய்வீக அன்பு

உலகம் உய்ய வேண்டுமானால் ஒவ்வொருவர் உள்ளத்திலும் தூய அன்பு பரிணமிக்க வேண்டும். எல்லோரும் நம் சகோதரர்கள் என்னும் பரந்த மனப்பான்மை ஒவ்வொருவர் உள்ளத்திலும் குடிகொள்ள வேண்டும். குறிப்பாக ஏழைகள் மீது அளவற்ற அன்பு வைக்க வேண்டும்.

ஒரு முறை உமர் (ரலி) அவர்கள் கலிபாவாக ஆட்சி செய்து கொண்டிருக்கும்பொழுது ஒருநாளிரவு அவர்களுக்கு உறக்கம் வரவில்லை. ஏழை மக்களின் குறைகளை நினைத்து நினைத்து அவர்களது உள்ளமும் உலைந்தபோது, உறக்கத்தை விட்டெழுந்து தெருவிலே சென்று கொண்டிருந்த வேளை ஒரு மாதைச் சுற்றி பல குழந்தைகள் பசியால் அலறிக் கொண்டிருந்த காட்சியைப் பார்த்துவிட்டு தன்னுடைய வீட்டுக்குச் சென்று உணவுப் பொருட்களை மூட்டையாகக் கட்டி தன் தோளிலேயே சுமந்து சென்று பசியாலும் வறுமையாலும் வாடி வதங்கிய குழந்தைகளுக்கு வாரி வழங்கினார்கள். இஃதல்லவோ உண்மையான அன்பு!

அன்பே மனிதனின் உயர் நிலை. அன்பில்லாதவன் தோலால் போர்த்தப்பட்ட வெறும் எலும்புக் கூடுதான் என்பதில் ஐயமில்லை. எனவே உங்கள் உள்ளமும் வாக்கும் ஒரே அன்பு மயமாகத் திகழ வேண்டும். அவ்விதமானால் உலகமும் உங்களை அன்பென்னும் கரங்களால் அணைத்து ஆதரித்து நிற்குமென்பது நிச்சயம்.

வை.எம்.தாஹிர்கரீம்- கல்முனை-6.

## கவிதைப் போட்டி இல.272


### பரிசுக்குரிய கவிதை

### ஏக்கம்

உயிருள்ள பொம்மைகளுக்கு
இல்லை அம்மா....!
உயிரற்ற பொம்மைக்கு
இரண்டு அம்மா.....!

பிரணவன் பிறேமாங்கதன்-
மட்/தாண்டவன்வெளி.

### இடம் உள்ளவரை இடம்பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்:



**உரிமை...**

வெள்ளை அப்பா
விட்டுப் போன பொம்மை-
அவளுக்கு மட்டுமா?
எனக்கும் தானே!

'கோவை அரசி'
யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம

**சமுதாயம்**

தேய்த்துக் கழுவினாலும்
திருந்தாது-நம்
சமுதாயம்!

எஸ்.பி.பாலமுருகன்-பதுளை.

**இது ஏன்?**

தமிழனே பொம்மையாக
ஆடுகின்றான் இந்த மண்ணில்;
ஏனிந்தப் பொம்மை என்று
கூறடி தோழி இன்று?

கவிஞன் 'திக்கவயல்'- மன்னார்.

**எங்கே?**

செம்மணிக் குழியிலா....
எங்களது அம்மாவும்....?

ப.ஜோதி- வவுனியா.

**நம்பிக்கை**

நாம் பிறந்த
காரணத்தை
நாமே அறியுமுன்னே
நாடி வந்த சொந்தமிதை
நலமாய் வைத்திருப்போம்....!
நாளைக்கு விடிவு வரும்
நாமிருப்போமோ?

ரோஜா ஆனந்தராஜா- பதுளை.

**இப்படியும்...!**

கனடா பொம்மையிது!
சுவிஸ் சோப் போட்டு,
கொழும்பில் குளிக்குது!

பூண்டுலோயா வில்லியம்.

**குருதிக் குளியல்?**

பொம்மை குளிப்பது
குளிர் நீரில்;
நம் தேசம் குளிப்பதோ
செந்நீரில்!

அ.சந்தியாகோ- அசோகா
வித்தியாலயம், கண்டி.

**அரிதாமோ?**

எறிகணையாம், பொறி வெடியாம்,
எல்லாம் போய் இப்போது
பொம்மையிலும் குண்டாமே!
இனி எமக்கு விளையாட
இது கூட அரிதாமோ?

தர்ஷிக்கா கனகசிங்கம்- கல்லடி,
மட்டக்களப்பு.

**சீவி(யம்)!**

சீவி சிங்காரித்து
சீவியம் நடத்தியதெல்லாம்
சிந்தனையில் வரும்போது-
சிந்தையே கலங்குதடி!

டி.ஜோர்ஜ்-லுனுகலை.

## கவிதைப் போட்டி இல.275



[illegible]
அதிகமில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பி வையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 26.09.1998

**முகவரி:** கவிதைப் போட்டி இல.275
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

# வாசகர்(ர்)சாலை



### அலசுவது இராஜதந்திரி

முரசில் தொண்டா-சந்திரசேகரன் இருவரைப் பற்றி எழுதியதைப் பார்த்து மலையக மக்களின் ஒடுக்குமுறைக்கும் ஏமாற்றுக்கும் முரசு தன் எதிர்ப்பைக் காட்டுவதைக் கண்டு உள்ளம் பூரிப்படைகின்றேன்.

தொழிற்சங்க சந்தாப் பணத்தை தொழிலாளர்களின் சம்பளத்தில் (செக்ரோலில்) எடுப்பதை நிறுத்தி தொழிலாளர்களின் கையில் நேரடியில் பெற்றுக் கொள்ளும் முறையை மீண்டும் ஆரம்பித்தால் சந்தாப்பண முதலாளி தலைவர்களை ஆட்டங்காணச் செய்யலாம். இதையே ஒரு சவாலாக ஏற்று அபிப்பிராய வாக்கெடுப்பை ஆரம்பியுங்கள்.... ஏமாற்று தொழிற்சங்க முகத்தில் கட்டாயம் கரியைப் பூசலாம். வாழ்க முரசு வளர்க அதன் பணி.

இரம்யவேலன், இரத்தினபுரி.

### பாலுக்கு பூனை காவல்

செம்மணிப் புதைகுழி விடயத்தில் இலங்கை ஜனாதிபதியிடம் கோரிக்கை, அரச படைகளது பாதுகாப்பு கோருவது போன்றவை பாலைக் காய்ச்சி பூனையைக் காவல் வைப்பது போன்றதே. இது பற்றி இராஜதந்திரியின் அலசல் எங்கள் உள்ளத்தில் எழுந்த கேள்விகளையும், அதிருப்திகளையும் பிரதிபலிப்பதாக இருந்தது.

சி.தவச்செல்வம், யாழ்ப்பாணம்.

இனிய முரசே!

'சதாம் உசேன்' கதை சூப்பரோ சூப்பர். ரசிகன் தரும் 'இலக்கிய நயம்' சுவைதான். 'முள் நிலவு' விறுவிறுப்போடு மெருகேறுகிறது. இதுபோல் 'கண்ணீரில் கரைந்த இரவுகள்', 'லேடீஸ் ஸ்பெஷல்' அனைத்தும் பாராட்டுக்குரியன. இத்தனை அம்சங்களையும் சுமந்து வரும் முரசுக்கு பாராட்டுக்கள்!

ஜே. நிலாந்தி,
மட்டக்குளி, கொழும்பு-15.

அன்பின் முரசே!

நீ தாங்கிவரும் அத்தனை அம்சங்களும் வெகு ஜோர். அதில் சுஜாதாவின் 'மேற்கே ஒரு குற்றம்' ஆரம்பமே அபாரம். 'முள் நிலவு' மனதை குத்திவிட்டது. வெற்றிவீரன் சதாமுக்கு ஒரு சபாஷ்!

எஸ். சுபைதீன், மருதமுனை.

### கிடைக்குமா?

முரசே!

செம்மணிப் புதைகுழிகள் இனித் தோண்டப்பட்டால்கூட முழு உண்மைகள் கிடைக்குமா? எமக்கு நம்பிக்கையில்லை. இராஜதந்திரியாரின் அலசல் துணிச்சலாக-உண்மைகளை கூறியது.

மு.பவானி, யாழ்ப்பாணம்.

கவியரசின் சுயசரிதையை முழுமையாக அறியத்துடிக்கும் என்னைப்போன்ற ஆயிரமாயிரம் வாசகர் நெஞ்சங்களில் தேனாய் இனிக்கிறது 'கவியரசுவின் சுயசரிதை'

மு.இ. நிசாத், கிண்ணியா.

அன்பின் முரசே!

இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாம் உசேன் அவர்களின் உண்மைக் கதையை தொடராக கொண்டுவரும் என் முரசுக்கு வாழ்த்துக்கள்! அதை தொடராக தொகுத்து தரும் ராஜையா அவர்களுக்கு சபாஷ்!

ஏ.சி.சமீம், ஏறாவூர்.

அன்பின் முரசுக்கு!

உமது அனைத்து அம்சங்களும் அருமையிலும் அருமை! குறிப்பாக இரும்பு மனிதர் சதாம் ஹுசைனின் உண்மைக் கதைத் தொடர் மிகவும் சிறப்பாக இருக்கிறது. பாராட்டுக்கள்! வாழ்க சதாம் ஹுசைன்!

ஸெய்ட் அப்ரிடி, காலி.

### எங்களுக்குப் புரிகிறது

"செம்மணியை தோண்டுங்கள் தோண்டுங்கள்" என்று இரண்டு மாதமாக சும்மா ஒரு சம்பிரதாயம்போல நினைத்து கோரிக்கை விட்டு வந்தன தமிழ்க் கட்சிகள். அரசு ஏன் இழுத்தடிக்கிறது என்பதைக்கூட கூர்ந்து நோக்காமல் பொறுப்பின்றி இருந்தன. தக்க சமயத்தில் முரசு தடயங்கள் தப்புமா? என்று கேள்வி தொடுத்தது. சந்தேகம்தான். புதைகுழிகள் இல்லையானால் துள்ளித் துள்ளி உடனடியாக தோண்டிக் காட்டியிருப்பார்கள். ஆகவே... எங்களால் ஊகிக்க முடிகிறது. தூங்குவது போல நடிப்பவர்களுக்கு புரியாது தான்.

பா.ஜெயம், மட்டக்களப்பு.

### நியாயமான சந்தேகம்

சர்வதேச நிபுணர்கள் உதவியுடன் செம்மணிப் புதைகுழியை உடன் தோண்ட அரசு மறுத்தது பலத்த சந்தேகங்களுக்கு உரியதே. இரண்டரை மாதத்தில் என்னவெல்லாம் நடந்ததோ என்று காணாமல் போனோரின் உறவினர் கவலைப்பட்டதில் நியாயம் இருக்கிறது.

க.சின்னத்துரை, கொழும்பு-14.

### பிராந்தியக் கட்சிகள்

முரசே!

தமிழ்க்கட்சிகள் பிராந்தியக் கட்சிகளாக மாறிவிட்டன என நீ கூறியது உண்மையே. யாருக்கு நிவாரண நிறுத்தம் இல்லை என்று கூறப்பட்டதும் அங்கு நடத்த இருந்த போராட்டத்தை மூன்று தமிழ்க் கட்சிகளும் நிறுத்தின. மட்டக்களப்பில் இருந்து மூன்று தமிழ்க் கட்சிகள் விடுத்த அறிக்கையிலும் வன்னி அபாயம் குறித்தோ, புத்தளம் முஸ்லிம் அகதிகள் குறித்தோ ஒரு வார்த்தையில்லை. அரசு திட்டமிட்டு தமிழ் மக்களுக்கு எதிரான அரசியல், இராணுவ வியூகத்தின் ஒரு பகுதியாக மேற்கொள்ளும் நடவடிக்கையை, பிராந்தியப் பிரச்சனைகள் போல இந்த தமிழ்க் கட்சிகள் அறிக்கை விட்டு குழப்புகின்றன.

என்.சிவராஜிதன், வவுனியா.

### தடயங்கள் மறையும்

செம்மணி புதைகுழிகளில் இருந்து தடயங்கள் மறையக்கூடும் என்பதை தமிழ்க் கட்சிகள் மட்டுமல்ல, அரசுக்கு தோதான மனித உரிமை ஆணைக்குழுவும் கூறவே இல்லையே. இப்படியான சந்தர்ப்பங்களில்தான் இவர்களது முகமூடிகள் கழன்று விழுகின்றன.

பி.உதயன், கோப்பாய்.

**மடல்கள் மற்றும் ஆக்கங்கள்- உட்பட சகல தொடர்புகளுக்கும்:**
**தினமுரசு வாரமலர்,**
**த.பெ.இல:-1772, கொழும்பு.**

### அறிவித்தல்

உங்கள் கரம் சேரும் முரசில் அச்சுப் பிழையோ, அல்லது ஏதாவது பக்கத்தில் அச்சாகத் தவறியோ இருந்தால், உங்கள் முகவரிடம் திருப்பிகொடுத்துவிட்டு, வேறு பிரதி வாங்கிக் கொள்ளுங்கள். 'முரசு' அச்சாகும் வேகத்தில் அரிதாக சில தாள்களில் தவறு நேர்ந்துவிடுகிறது. மாற்றித்தர மறுக்கும் முகவர்கள் பற்றி எம்மிடம் புகார் தரலாம். புகாருடன் குறிப்பிட்ட தாளையும் அனுப்ப வேண்டும். திருப்தியான சேவையே முரசின் மூச்சு.

-நிர்வாகி.


படிப்பகம்

www.padippakam.com

## அரசின் தந்திரோபாயம் தோல்வி!

# விடுதலைப் புலிகள் விவரிப்பு

## எதிர்க்கட்சி மாநாட்டுக்கும் சாட்டை!

"ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்க ஆட்சிப் பொறுப்பை ஏற்று நான்கு வருடங்கள் பூர்த்தியாகியுள்ளன. இக்கட்டத்தில் முன்னர் கூறியதற்கு மாறான கூற்றுக்களை வெளியிட்டு வருகிறார்." இவ்வாறு விடுதலைப் புலிகள் தமது பத்திரிகையில் தெரிவித்துள்ளனர்.

அப்பத்திரிகையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது: "யுத்தத்தை நிறுத்தி சமாதானம் மூலம் இனப்பிரச்சனைக்குத் தீர்வு காண்பேன்; யுத்தத்துக்குச் செலவிடும் நிதியை அபிவிருத்திக்குச் செலவிடுவேன்!" என்று நான்கு வருடங்களுக்கு முன்னர் கூறினார் ஜனாதிபதி சந்திரிக்கா.

'அபிவிருத்திப் பணிகள் அனைத்தையும் நிறுத்துங்கள். யுத்தத்துக்கு நிதி தேவைப்படுகிறது' என்பது அவரது தற்போதைய அறிவிப்பு.

ஜனாதிபதியின் அரசியல், இராணுவ, பொருளாதாரத் திட்டங்கள் அனைத்தும் தோல்வி கண்டதன் வெளிப்பாடே தற்போதைய அறிவிப்பாகும்.

விடுதலைப் புலிகளை இராணுவ ரீதியாகத் தோற்கடிக்காமல், தமிழ் மக்களை அரசியல் ரீதியாக ஏமாற்ற முடியாது என்பதாலேயே இராணுவ நடவடிக்கைகளை முடுக்கிவிட்டனர்.

**ஒவ்வொரு பணி**

இத்தீர்மானத்தை நிறைவேற்ற ஜனாதிபதி அரசியல், இராணுவ, பொருளாதார ரீதியான திட்டங்களை தீட்டி அதற்கான ஒவ்வொரு பணியை ஒவ்வொருவரிடம் ஒப்படைத்தார்.

பிரதி பாதுகாப்பு அமைச்சர் அநுருத்த ரத்வத்தையின் யுத்தக் கொள்கையையும், லக்ஷ்மன் கதிர்காமரின் பிரசாரத்தையும் புலிகள் சவாலாக எடுத்து முறியடித்தனர். ஜி.எல்.பீரிசின் தீர்வு திட்ட வித்தையை பௌத்த பிக்குகள் உட்பட பேரினவாதிகள் தோற்கடித்தனர். பொருளாதார திட்டங்களும் தோல்விகண்டன.

அரசியல், இராணுவ, பொருளாதார ரீதியாக தொடர் தோல்விகள் ஏற்பட்ட நிலையில்தான் சகல அபிவிருத்தித் திட்டங்களையும் நிறுத்த உத்தரவிட்டுள்ளார் சந்திரிக்கா.

இந்த உத்தரவு சிறீலங்கா ஜனாதிபதி சந்திரிக்காவின் சிந்தைக்கு கிடைத்துள்ள தோல்வியாகும். கெளுத்தி மீனை விழுங்கிய நாரையின் நிலையில் உள்ளது அரசாங்கம்." என்று புலிகள் விபரித்துள்ளனர்.

மாநாடு ஐக்கிய தேசியக் கட்சி கொழும்பில் நடத்தும் மாநாடு பற்றியும் புலிகளின் பத்திரிகை விமர்சித்துள்ளது.

"சுதந்திரமான தேர்தல் நடத்த வேண்டும் என்று சர்வகட்சி மாநாடு நடத்துகிறார் ரணில்.

இத்தனை வருட காலமும் கள்ள வாக்குகளின் கர்த்தாக்கள் எனப்படும் ஐ.தே.கட்சிக்கு சுந்திரமான தேர்தல் பற்றி பேசும் அவசியம் ஏன் வந்தது?" என்று கேள்வி எழுப்பியுள்ளது அப்பத்திரிகை. ■

## ஆயுதக் கொள்வனவு

### புலிகளின் தகவல்கள்

விடுதலைப் புலிகளிடம் தகவல்கள் செல்லாமல் தடுக்கவே செய்தித் தணிக்கை கொண்டுவரப்பட்டதாக அரசு தெரிவித்து வருகிறது.

பத்திரிகைச் செய்திகள் மூலம் புலிகள் தகவல்களை அறிவதாக அரசு கூறியது.

இலங்கையில் எந்தப் பத்திரிகையும் வெளியிடாத இலங்கை இராணுவச் செய்திகள் புலிகளின் பத்திரிகைகளில் வெளியாகி வருகின்றன.

'ஹொட் ஸ்பிரிங்' என்னும் புலிகளின் ஆங்கில சஞ்சிகையில் இலங்கை அரசு புதிதாக கொள்வனவு செய்யும் ஆயுததளபாடங்கள் பற்றிய தகவல்கள் வெளியாகி உள்ளன. இந்த ஆங்கில சஞ்சிகை வெளிநாட்டில் இருந்தே வெளியிடப்படுகிறது.

## யாழ் நகர குண்டுவெடிப்பு

### புலிகள் அறிவித்த செய்தி

யாழ் மாநகர சபைக் கட்டட குண்டுவெடிப்புத் தொடர்பாக புலிகள் இதுவரை உத்தியோகபூர்வமாக எதனையும் தெரிவிக்கவில்லை.

'புலிகளின் குரல்' வானொலியில் பின்வருமாறு கூறப்பட்டது:

"சிறீலங்கா இராணுவத்தின் உளவியல் யுத்தம் புரியும் அதிகாரியான பிரிகேடியர் சுசந்த மெண்டிஸ் குண்டுவெடிப்பில் கொல்லப்பட்டுள்ளார்."

யாழ் மேயர் சிவபாலன் பலியானது பற்றிக் குறிப்பிட்ட புலிகளின் குரல், 'தேவையற்ற தருணத்தில் கூட்டணியினர் தேர்தலில் போட்டியிட்டதாக....' அரசியல் விமர்சகர்கள் முன்னர் தெரிவித்த கருத்தை மேற்கோள் காட்டியது. ■

## தடைபல தாண்டும் பயணம்

### திட்டமிட்டு இரவும் தங்கவைப்பு!

(நமது நிருபர்)

வன்னியில் இருந்து இராணுவக் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு வரும் மக்கள் பல தடைகளைத் தாண்டவேண்டும்.

தமது பகுதியில் கிராம அதிகாரியிடமும், உதவி அரசாங்க அதிபரிடமும் இரண்டு விண்ணப்பப்படிவங்களில் கையொப்பம் பெற வேண்டும்.

உயிலங்குளம் தடை அரணில் ஒரு விண்ணப்பப்படிவத்தை படையினரிடம் கையளிக்க வேண்டும். பின்னர் அங்கிருந்து பூவரசங்குளத்திற்கு பஸ்சில் செல்லவேண்டும்.

பூவரசங்குளத்தில் இன்னொரு விண்ணப்பப்படிவத்தை ஒப்படைக்க வேண்டும்.

அங்கு சுமார் 20 பஸ்கள் வரை வந்து காத்து நிற்கும். மாலை ஐந்து மணிக்கு பூவரசங்குளத்திற்கு வந்தால் இரவு 9 மணிவரை அனுமதிக்காகக் காத்திருக்க வேண்டும்.

ஒன்பது மணியானதும் அனுமதி வழங்குவதை நிறுத்திவிடுவர். பின்னர் பயணிகள் பூவரசங்குளம் பாடசாலையில் தங்க வைக்கப்படுவர். இரவு நேரங்களில் இளம் பெண்களிடம் சில்மிஷங்கள் இடம்பெறுவதாகவும் கூறப்படுகிறது. சோதனைக்காக என்று இளம் பெண்கள் அழைத்துச் செல்லபடுவதாகவும் புகார்கள் கூறப்படுகின்றன.

மறுநாள் காலையில் பூவரசங்குளத்தில் அனுமதி பெற்ற பின்னர் பயணம் செய்து வவுனியா கோழிக்கூடு முகாமுக்குச் செல்ல வேண்டும். அங்கு கேற் பாஸ் பெறவேண்டும்.

அதன்பின்னர்தான் பொலிசில் 5 நாள் தங்குவதற்கான பாஸ் பெற்றுக்கொள்ள வேண்டும். ●

## கிளைமோர் தாக்குதல்

வல்வெட்டித்துறையில் 14.09.98 அன்று புலிகளால் கிளைமோர் தாக்குதல் நடத்தப்பட்டது.

இத்தாக்குதல் தொடர்பாக யாழ் படைவட்டாரங்கள் கூறியுள்ள செய்திப்படி சிப்பாய் ஒருவரும், பொதுமகன் ஒருவரும் காயமடைந்துள்ளனர். ●

## எச்சரிக்கை குண்டுடன் வந்தவர்!

### டபிள் ஏஜண்டாக செயற்பட்டவராம்

எச்சரிக்கை கொடுத்துவிட்டு வெடிக்கும் குண்டுடன் ஒருவர் தெகிவளையில் கைது செய்யப்பட்டதாக செய்திகள் வெளியாகின அல்லவா?

குறிப்பிட்ட குண்டுடன் கைதானவர் புலிகளால் பணம் கொடுத்து அமர்த்தப்பட்ட ஒருவர் என்று தெரியவருகிறது.

இவர் முன்னர் வவுனியாவில் சீருடையினருக்கும் புலிகள் தொடர்பான தகவல்களைக் கொடுத்து வந்தாராம். இவரது தகவல் காரணமாக சைக்கிள் குண்டொன்றும் மீட்கப்பட்டதாம்.

புலிகளின் தகவலை சீருடையினருக்கும், அவர்களது தகவலை புலிகளுக்கும் கூறுவார். இவ்வாறானவர்கள் 'டபிள் ஏஜண்ட்' என்று அழைக்கப்படுவர். இருபக்கமும் பரிச்சயமாக இருந்ததால் அதனைவைத்து வியாபார நடவடிக்கைகளில் பணம் சம்பாதித்தாராம்.

அவரிடம் குண்டைக் கொடுத்து கொழும்பில் சேர்க்குமாறு அனுப்பினர் புலிகள். அவர் எப்படியோ மாட்டிக்கொண்டதால் எச்சரிக்கைக் குண்டு விவகாரம் வெளியே தெரிந்துவிட்டது. குறிப்பிட்ட நபரின் பெயர் சத்தியலிங்கம் என்று கூறப்படுகிறது. இவரிடம் இருந்து கொழும்பில் வைத்து புலிகள் குண்டை பொறுப்பெடுக்க முன்னரே இவர் மாட்டிக் கொண்டார் என்று சந்தேகிக்கப்படுகிறது.

அவரிடம் தொடர்ந்து விசாரணை நடந்து வருகிறது. கல்கிசை பொலிசாரே அவரைக் கைது செய்திருந்தனர். ■

## துருவித் துருவி விசாரணை

யாழ் மாநகர சபை ஊழியர்கள் அனைவரும் துருவித்துருவி விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

குண்டுவெடிப்பின்போது உயிர்தப்பியவர்கள்,குறிப்பிட்ட நாளில் வேலைக்கு வராதவர்கள் அனைவரும் விசாரிக்கப்படுகின்றனர்.

மேயரின் மக்கள் தொடர்பு அதிகாரி தீவிர விசாரணைக்கு உள்ளானார். குண்டு வெடிப்பதற்கு சில நிமிடங்களுக்கு முன்னரே அவர் கட்டடத்தை விட்டு வெளியே போயிருந்தாராம்.

இவ்விடயம் பற்றி கேட்டபோது, கூட்டத்தினருக்கு தேநீர் வழங்கும் ஏற்பாட்டைக் கவனிக்கவே வெளியே சென்றதாக அந்த அதிகாரி கூறியுள்ளார். ■

## மாயமான செல்லுலர்

(கண்டி நிருபர்)

கண்டி கெலிஓயாவில் கடந்த சில நாட்களுக்கு முன்னர் அம்மிக்கல் ஒன்றின் கீழ் பதுக்கி வைக்கப்பட்டு பின்னர் பொலிஸாரினால் கண்டெடுக்கப்பட்ட செல்லுலர் தொலைபேசி இரண்டில் ஒன்று மாயமாய் மறைந்து விட்டதாம்.

A-130 என்ற ரகத்தைக் கொண்ட செல்லுலர் தொலைபேசியே இவ்வாறு காணாமல் போய் இருப்பதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

காணாமல் போன இந்த செலுலர் தொலைபேசிக் கருவியை ஜீ. சந்திரகாந்தன் என்பவர் விலைக்கு வாங்கியிருந்ததாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

சுமார் 120 கிலோ வெடிப் பொருட்களுடன் வீடு ஒன்றில் வைத்து கைதாகிய இரு புலிச் சந்தேகிகளில் ஒருவர் அதே இடத்தில் சயனைட் உட்கொண்டு இறந்ததுடன் மற்றவர் அதனை உட்கொண்ட நிலையில் பேராதனை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு குணமடைந்தார். இவர் மூலமாக பல தகவல்களை பொலிஸார் சேகரித்துள்ளனர். ●

## இறுதி அஞ்சலிக்கு மறுப்பு

### கூட்டணி எம்.பி.கள் நழுவல்

யாழ் மாநகர முதல்வர் சிவபாலனின் இறுதிச் சடங்கில் கலந்து கொள்ள கூட்டணி எம்.பி.கள் மறுத்துவிட்டனர்.

கூட்டணியின் தலைவர் மு.சிவசிதம்பரம் உடல் நிலை காரணமாக சென்னையில் ஓய்வெடுத்து வருகிறார். இந்நிலையில் கட்சியின் செயலதிபர் இரா.சம்பந்தனே இறுதிச் சடங்கு ஏற்பாடுகளை முன்னின்று கவனித்திருக்க வேண்டும். அவரோ ரசியாவில் இருந்து திரும்பிவராமல் நழுவிக்கொண்டார். கூட்டணியின் கிழக்கு மாகாண பாராளுமன்ற உறுப்பினர்களில் ஒருவரையாவது இறுதிச் சடங்கில் கலந்துகொள்ளச் செய்ய முயற்சிக்கப்பட்டது. அவர்கள் திட்டவட்டமாக மறுத்து விட்டதாகத் தெரிகிறது.

யாழ் மாநகர முதல்வரின் இறுதிச் சடங்கில் மாநகர சபை ஊழியர்கள் உட்பட சொற்ப எண்ணிக்கையான மக்களே கலந்து கொண்டனர். இறுதி ஊர்வலத்தில் ஐநூறு பேர் வரை பங்குகொண்டனர். ●

## நிபந்தனையின்றி புலிகளுடன் பேசுக!

### கூட்டணி எம்.பி. கூறுகிறார்

"எந்தவிதமான நிபந்தனையுமில்லாமல் எல்.ரி.ரி.ஈ. யுடன் அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும். அவர்கள்தான் இன்று தீர்க்கமான சக்திகளாக விளங்குகின்றனர். ஆகவே, அரசியல் தீர்வுக்கான எத்தகைய யோசனைகளிலும் அவர்கள் பங்குபற்ற வேண்டும்!"

மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினரும் கூட்டணி பாராளுமன்றக் குழுவின் தலைவருமான ஜோசப் பரராஜசிங்கம், 'சண்டே ஐலண்ட்' பத்திரிகைக்கு வழங்கிய பேட்டியிலேயே மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சி நடத்திய சர்வகட்சி மாநாட்டில் கூட்டணி பங்கேற்காது என்பதற்கான காரணத்தைத் திரு.பரராஜசிங்கம் கூறுகையில், "அம்மாநாடு எந்த வகையிலும் யுத்தத்தை நிறுத்திவைக்கப் போவதில்லை. நாட்டைப் பாதிக்கும் முக்கியமான விடயங்களில் பிரதான அரசியல் கட்சிகள் பொதுவான ஒரு முடிவுக்கு வரவேண்டிய காலகட்டம் இதுவாகும். ஆகவே இன்றுள்ள முக்கியமான பிரச்சனைக்குத் தீர்வு காண எல்.ரி.ரி.ஈ.யினருடன் பேச்சுவார்த்தையிலீடுபடுவதைத் தவிர வேறு வழியில்லை!" என்றார்.

யாழ்.மாநகர மேயர் சிவபாலன் குண்டுவெடிப்பில் பலியான பின்னர் ஜோசப் பரராஜசிங்கம் அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு அழுத்தம் திருத்தமாகக் கூறியிருக்கிறார். ■

## நிபந்தனையில் விடுதலை!

கடந்தவாரம் மீன்பிடிப் படகுடன் புலிகளால் பிடித்துச் செல்லப்பட்ட ஒட்டமாவடி மீனவரில் ஒருவர் 13.09.98 அன்று நிபந்தனையின் பேரில் புலிகளால் விடுவிக்கப்பட்டுள்ளார். பணம் பெற்று வந்து செலுத்திய பின்னரே மற்றைய மீனவர் படகுடன் விடுவிக்கப்படுவார் என்பதே அந்த நிபந்தனையாகும் என்று கூறப்பட்டுள்ளது. ●

## தமிழ் – முஸ்லிம் மோதலுக்குத் தூபம்!

### முஸ்லிம் இளைஞர் கடத்தல்!

மட்டக்களப்பு-காத்தான்குடியைச் சேர்ந்த உதுமா லெப்பை-சுபீர் (18) (றபாய்தீன்) என்பவர் கடந்த 10.09.98 அன்று காணாமல்போன சம்பவம் மட்டக்களப்பு, காத்தான்குடிப் பகுதித் தமிழ்-முஸ்லிம் மக்களிடத்தில் பெரும் கலக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

அதன் பின்னர் முஸ்லிம் பகுதியைச் சார்ந்த சிலரால் ஒரு துண்டுப்பிரசுரம் வெளியாகியிருந்தது. அதில்-"றபாய்தீன் ஆயுதம் தாங்கிய தமிழ் இளைஞர்களால் கடத்தப்பட்டிருக்கிறார். இதை முஸ்லிம்கள் மிக வேதனையுடன் நோக்குகிறோம். தமிழ்-முஸ்லிம் உறவு பாதுகாக்கப்படுவதோடு சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராக எமது ஐக்கியம் வலுவாக இருக்க வேண்டும். அதனால் கடத்தப்பட்டவரை விடுதலை செய்யுங்கள். அல்லது அவர் கொல்லப்பட்டிருந்தால் அவரது சடலத்தை ஒப்படைக்குமாறு மனிதாபிமானப் பார்வையுடன் கேட்கின்றோம். இவ்வேண்டுகோள் உதாசீனம் செய்யப்படும் பட்சத்தில் முஸ்லிம் மக்களின் நீளும் கரங்களை எம்மாலும் கட்டுப்படுத்த முடியாமல் போகும் என்பதையும் மிகுந்த வேதனையுடன் தெரிவித்துக் கொள்கிறோம்!" என்று குறிப்பிடப்பட்டிருந்தது.

இந்தத் துண்டுப்பிரசுரத்திற்குப் பதிலாகத் தமிழ் பகுதியிலிருந்தும் காரசாரமான பிரசுரம் முளைத்தது.

இவர் கடத்தப்பட்டதாகக் கூறப்படும் நாவற்குடா, பூநொச்சிமுனைத் தமிழ்ப் பகுதிகளெங்கும் படையினர் பொலிஸார் ஆகியோர் நிறுத்தப்பட்டு தேடுதல் நடத்தப்பட்டது.

**நிர்வாணமாக்கினர்**

இவ்வாறிருக்கும்போது, 12ஆம் திகதி காலை காணாமல் போயிருந்த அவ்விளைஞர் அவ்வூர் வீதியால் வந்து கொண்டிருந்ததைக் கண்ட தமிழ் மக்கள் உடனடியாக அவரை இராணுவத்தினரிடம் ஒப்படைத்தனராம். படையினர் அவரை காத்தான்குடி பொலிஸ் நிலையத்திற்கு அழைத்துச் சென்று ஒப்படைத்துள்ளனர்.

பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்ட அவர் நிர்வாணமாக்கப்பட்டு பலமாகத் தாக்கப்பட்ட நிலையில், அவரைப் பொலிஸ் பொறுப்பதிகாரி காத்தான்குடிப் பிரதான வீதிவழியாக ஊர்வலமாக எடுத்துச் சென்றிருக்கிறார். அப்போது அவர் அரைநிர்வாணியாக கச்சை கட்டிய நிலையில் ஊர் வலத்தில் அழைத்துச் செல்லப்பட்டிருக்கிறார்.

**மக்கள் எதிர்ப்பு**

ஊர்வலத்தில் செல்லும்போது "நான் விபச்சாரிகள் வீட்டிற்கும், சூதாடவுமே சென்றேன். நான் கடத்தப்படவில்லை," என்று உரத்துக்கூறுமாறு பொலிஸாரால் பணிக்கப்பட்டாராம்.

இந்த நடவடிக்கைக்கு பொது மக்கள் எதிர்ப்புக் காட்டினார்கள். அந்த வேளையில் பொலிஸார் துப்பாக்கிப் பிரயோகம் செய்து வீதியில் வந்த பொதுமக்களைக் கண்டபடி பலமாகத் தாக்கியிருக்கிறார்கள்.

சுமார் 40 பேரளவில் பொலிஸாரின் தாக்குதலுக்குள்ளாகியிருக்கிறார்கள். தாக்கப்பட்டவர்களில் பெண்களும், பாடசாலை மாணவ மாணவிகளும் அடங்குவர். ஒரு மாணவி பலத்த அடி காரணமாக நடுத்தெருவில் வீழ்ந்திருக்கிறார்.

இவ்வேளையில் நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்காக அழைக்கப்பட்டதாகக் கூறப்பட்ட மேலதிக மோட்டார் சைக்கிள் குழுவும் உள்ளூர் வீதிகளில் இறங்கிப் பொதுமக்களைத் தாக்குவதில் ஈடுபட்டதாக சம்பவத்தில் அகப்பட்டோர் தெரிவிக்கிறார்கள்.

பின்னர் பிரதியமைச்சர் ஹிஸ்புல்லாஹ் பாதுகாப்பு உயரதிகாரிகளுடன் தொடர்பு கொண்டு நடவடிக்கை எடுத்ததன் பேரில் மேலதிகத் துருப்பினர் ஸ்தலத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டனர். நிலைமை சுமுக நிலைக்குத் திரும்பியது. பொலிஸாரினால் ஊர்வலமாகக் கொண்டு செல்லப்பட்ட இளைஞரும் காத்தான்குடிப் பள்ளிவாசலில் வைத்து விடுவிக்கப்பட்டார்.

**நாடகம்**

இந்த இளைஞரின் கடத்தல் நாடகத்திலும் அதனைத் தொடர்ந்து இடம்பெற்ற சம்பவங்களின் பின்னாலும் தமிழ்-முஸ்லிம் சமூகங்களைக் குழப்பிவிடும் விஷமத்தனமான சதியொன்று இருப்பதாக நோக்காளர்கள் அபிப்பிராயப் படுகிறார்கள். அதற்கு துண்டுப்பிரசுரத்தில் "சிங்களப் பேரினவாதத்திற்கு எதிராகத் தமிழ்-முஸ்லிம் ஐக்கியம் வலுவாக இருக்க வேண்டும்" என்ற கோரிக்கையும் ஒரு காரணமாக இருக்கலாமென்றும் கூறப்படுகிறது.

இந்தச் சம்பவத்தின் பின்னர் சோதனைச் சாவடியைக் கடக்கும் முஸ்லிம்கள் தாக்கப்பட்டதுடன் கடுமையாக எச்சரிக்கவும் படுகின்றனர். அமைதியை நிலைநாட்ட பொலிஸார் விரும்பியிருந்தால் சாதகமான வழிகளைக் கையாண்டு நிலைமையைச் சீர்செய்திருக்கலாம் என்றும் கூறப்படுகிறது. கடத்தப்பட்ட நபரிடமிருந்து உண்மையை மறைப்பதற்காகவே இத்தகைய துரித கதி நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கலாமென்றும் சந்தேகிக்கப்படுகிறது.

இதனிடையே பொதுமக்கள்மீது தாக்குதல் நடத்திய காத்தான்குடிப் பொலிஸ் பொறுப்பதிகாரி உட்பட மேலும் 10 பொலிஸாருக்கு உடனடி இடமாற்ற உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக அறிவிக்கப்படுகிறது.

ஏற்கெனவே கிழக்கில் அக்கரைப்பற்று, ஓட்டமாவடி, ஏறாவூர், காத்தான்குடி போன்ற முஸ்லிம் பகுதிகளில் பொலிஸ்-பொதுமக்கள் மோதலும் கலகமும் வெடித்திருக்கின்றன என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. ●

## யாழ் செல்ல இரு மாதங்கள்!

### மணமகள் யாழில்! தோழி கொழும்பில்!

யாழ்ப்பாணம் செல்வதற்கு உள்ள தடைகள், தொல்லைகள் நீங்கிவிட்டன என்று தொல்லை தவிர்ப்புக் குழுவின் பெயரில் செய்திகள் வந்தன அல்லவா?

திருமலை எம்.பி. சம்பந்தன் கேட்டுக் கொண்டதால், ஞாயிற்றுக்கிழமையும் கிளியரன்ஸ் வழங்க நடவடிக்கை என்றும் செய்திகள் வெளியாகின. அந்தச் செய்தி வெளியான பின்னர் சனிக்கிழமைகூட பாதுகாப்பு அமைச்சில் கிளியரன்ஸ் வழங்க யாரும் இல்லாமல் போய்விட்டனர்.

யாழ்ப்பாணத்திற்கு திருமணம் ஒன்றுக்கு செல்வதற்காக விண்ணபித்த குடும்பத்தினர் இரண்டுமாத காலமாக அனுமதிக்காகக் காத்திருந்தனர்.

காத்திருந்த கண்கள் பூத்த நிலையில் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவருடன் தொடர்பு கொண்டனர்.

சனிக்கிழமையன்று அந்த எம்.பி. கிளியரன்ஸ் அதிகாரிகளை தொடர்பு கொள்ள முயன்றாராம். அனைவரும் விடுப்பில் சென்றுவிட்டதாகக் கூறப்பட்டதாம்.

இறுதியில் தாமதமாக அனுமதி கிடைத்ததாம். அதனால் திருமண வீட்டில் மணமகளது தோழியாக இருக்க வேண்டியவருக்கும் திருமணத்தன்று செல்ல முடியவில்லை. ●


படிப்பகம்

www.padippakam.com

# விஞ்ஞான முறையிலான விசாரணை தேவை!

## எப்படி இறந்தனர் என்றும் அறியலாம்!

கிருஷாந்தி, அவரின் குடும்பத்தினர் ஆகியோரின் சடலங்களை செம்மணியில் கண்டெடுத்த இடத்துக்கருகில் இராணுவத்தினரால் பல நூற்றுக்கணக்கான சடலங்கள் புதைக்கப்பட்டுள்ளதாக, கிருஷாந்தி குமாரசுவாமி கொலை வழக்கின் தீர்ப்பின் இறுதியில் இரு குற்றவாளிகளின் கூற்றின் உண்மையைக் கண்டறிய நடவடிக்கை எடுப்பது அத்தியாவசியமாகிறது. 1996ம் ஆண்டு நடுப்பகுதியில் இராணுவத்தினர் யாழ்ப்பாணத்தை கைப்பற்றிய பின்னர் நூற்றுக்கணக்கானவர்கள் காணாமல் போயுள்ளனர் என்றும் அவர்களில் பலரின் தற்போதைய கதி பற்றி விவரமேதுமில்லை என்றும் தெரிவிக்கப்படும் செய்திகளின் அடிப்படையில் இக்கூற்றுகள் பரிசீலிக்கப்பட வேண்டும் என்று 'ஜனநாயக உரிமைகளைப்பாதுகாப்பதற்கான இயக்கம்' கோரியுள்ளது.

### ஆதாரங்கள்

தனி ஒருவரின் புதை குழியைத் தோண்டி எடுப்பதைவிட ஓரிடத்தில் பல சடலங்கள் ஒன்றாகச் சேர்ந்து புதைக்கப்பட்ட இடத்திலிருந்து தோண்டி எடுப்பது தொழில் நுட்ப பிரச்சனைகள் பலவற்றை உருவாக்கும்.

முக்கிய ஆதாரங்கள் மீட்க முடியாத அழிவுக்குப் பாத்திரமாகும் அபாயத்தை தவிர்க்கும் விதத்தில், சடலங்களைத் தோண்டி எடுப்பதை தேவையான திறமையுடன் மேற்கொண்டால், இறந்தவர்கள் எப்படி இறந்தார்கள்? அவர்கள் யார்? அவர்கள் அங்கு காணப்படுவதன் காரணம் என்ன? முதலிய எண்ணற்ற தகவல்களை அறிந்து கொள்ளலாம்.

சட்டத்திற்கு புறம்பான முறையிலும், தன்னிச்சையான முறையிலும், அற்ப காலத்திலும் மரணத்தை நிறைவேற்றுதலை தடுப்பது தொடர்பாகவும், புலன் விசாரணை செய்வது தொடர்பாகவும் விவரங்கள் அடங்கிய கைநூல் ஒன்றை ஐக்கிய நாடுகள் சபை வெளியிட்டிருப்பது சர்வதேச சமூகம் இந்தப் பிரச்சனைக்கு எவ்வளவு முக்கியத்துவமளிக்கிறது என்பதைக் காட்டுகிறது. சடலங்களை தோண்டி எடுத்தல், சடலங்களையும் எலும்புக்கூடுகளையும் பகுப்பாய்வு செய்தல் முதலியவை சம்பந்தமான குறிப்புக்கள் அடங்கிய பகுதி எமது அலுவலகத்தில் பார்வைக்கு உண்டு.

### சர்வதேச நிபுணர்கள்

சர்வதேச நிபுணர்கள் நீதித்துறைக்குரிய மனிதவர்க்கவியல் துறையில் சமீப வருடங்களில் பாரிய முன்னேற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. ஆர்ஜென்டினா, எல்சல்வதோர், குவதமாலா, குர்திஸ்தான், ஈராக் முன்னைய யுகோஸ்லேவியா, எதியோப்பியா முதலிய நாடுகளில், சர்வதேச நிபுணர் குழுக்களின் உதவியுடன், பெரும் தொகையான சடலங்கள் புதைக்கப்பட்ட இடங்கள் தோண்டப்பட்டிருக்கின்றன.

சடலங்களை தோண்டி எடுக்கும் செயல் முறையில் உதவுவதற்கும், எதிர்காலத்தில் இவ்வேலையை உள்ளூர் ஊழியர்களே செய்வதற்கு, அவர்களுக்கு பயிற்சியளிப்பதற்கும் ஐ.நா.வும் அரச சார்பற்ற நிறுவனங்களும் ஊழியர்களை தந்துதவ தயாராகவுள்ளனர்.

சூரியகந்தை அனுபவத்திற்குப்பின், வெளிநாட்டைச் சேர்ந்த பல நீதித்துறை மனிதவர்க்கவியல் நிபுணர்கள் பயிற்சிப் பட்டறைகளை நடத்தியுள்ளனர். இவ்விடயம் தொடர்பாக என்ன அடிப்படைச் செயல் முறைகள் பின்பற்றப்பட வேண்டுமென்பதை அறிந்து கொள்ள எமது விஞ்ஞானிகளுக்கு இப்பயிற்சிப் பட்டறைகள் வாய்ப்பை அளித்தன.

கிருஷாந்தி குமாரசுவாமி வழக்கின் குற்றவாளிகள் தெரிவித்த குற்றச்சாட்டுக்கள் தொடர்பாக, கவனமானதொரு புலன் விசாரணை தொடங்கப்படவேண்டும். குற்றச்சாட்டில் குறிப்பிடப்பட்டிருக்கும் புதைத்த இடத்தை எவ்விதமான பரிசோதனைக்கும் உட்படுத்துவதெனில் அப்பரிசோதனை நவீன விஞ்ஞான ரீதியில் அமைந்த செயல் முறைகளின்படி நடத்தப்பட வேண்டும். அப்பரிசோதனை அவசியமேற்பட்டால் எமது விஞ்ஞானிகளின் உதவியுடனும், ஐ.நா. அல்லது வேறு சர்வதேச நிபுணத்துவ உதவியுடனும் நடத்தப்பட வேண்டுமென்றும், ஐ.உ.பா. இயக்கம் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறது." என்றும் அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

# நள்ளிரவில் சோதனை தட்டப்படும் கதவுகள்

மட்டக்களப்பு- வாழைச்சேனைப் பிரதேச செயலாளர் திரு.கே. கதிர்காமநாதன், அப்பகுதிப் பொதுமக்களும் மற்றும் கிராம சேவகர்களும் எதிர்நோக்கும் நெருக்கடிகள் குறித்து வாழைச்சேனை பிரிகேடியர் வி.ஆர். சில்வாவிடம் முறைப்பாடு தெரிவித்தார். இச்சந்திப்பு சமீபத்தில் இடம்பெற்றது. பொலிஸ் நிலையத்தில் மேற்கொள்ளவேண்டிய பல்வேறு தேவைகளின் நிமித்தம் கிராம சேவையாளர்கள், பொதுமக்களுக்கு அறிக்கைகளையும், சிபார்சுகளையும் எழுத்து மூலமாகச் செய்தனுப்புகின்றனர்.

இவ்வாறு கிராம சேவகர்களின் அறிக்கைகளுடன் பொதுமக்கள் பொலிஸ் நிலையம் செல்லும்போது, பின்னர் கிராம சேவகர்களும் அழைக்கப்பட்டு வாய்மொழிமூல அறிக்கை பெறப்படுகிறது. இந்நடவடிக்கை தேவையற்ற தொல்லையை ஏற்படுத்துவதோடு சுதந்திரமான கடமைகளுக்கு இடைஞ்சலாகவுமுள்ளது. அத்துடன் பொதுமக்கள் தினமான புதன் கிழமைகளிலும் கிராம சேவகர்கள் படைமுகாம்களுக்கு அழைக்கப்படுகிறார்கள். இதனால் கிராம சேவகர்களிடம் அலுவல் முடிப்பதற்காக நாளெல்லாம் காத்திருக்கும் பொதுமக்கள் ஏமாற்றத்துடன் திரும்புகின்றனர்.

### நள்ளிரவு பதற்றம்

நள்ளிரவில் வீடு வீடாகச் சென்று தட்டி எழுப்பி பொதுமக்களிடம் விசாரணைகள் இடம்பெறுகிறது. நள்ளிரவு வேளை என்பதால் யார்- எதற்காக வருகிறார்கள்? என்ற பயம் மக்களை வாட்டுகிறது. இவ்வாறான ஒரு சம்பவம் கடந்த 19.08.98 அன்று வாழைச்சேனையில் நடந்தது. துறைமுகத்திலுள்ள படையினரே இந்த நடவடிக்கையில் இறங்கினார்கள்.

'அப்பகுதியில் வசிக்கும் மக்கள் எல்லோரும் பொலிஸுக்கு சென்று பதிந்து கொள்ள வேண்டும்' என்று அறிவிக்கப்பட்டது.

நடுச்சாமத்தில் சென்று எல்லோரையும் தட்டி எழுப்பிப் பதற்றத்தை ஏற்படுத்த வேண்டுமா? பொலிஸில் பதிவு செய்ய வேண்டும் என்ற அறிவித்தலை வழங்க பல வழிமுறைகள் இருக்க இவ்வாறு நடந்து கொள்கின்றனர்.

# மாநகரில் கடை உடைப்பு!

(நமது நிருபர்)

மட்டக்களப்பு மாநகரில் உள்ள கடையொன்று கும்பல் ஒன்றினால் உடைக்கப்பட்டது.

இக்கடையை வாடகைக்கு எடுத்திருந்தவருக்கும், கடை உரிமையாளருக்கும் இடையே ஏற்பட்ட பிரச்சனையின் எதிரொலியாகவே கடை உடைக்கப்பட்டது.

வாடகைக்கு இருந்தவரை அகற்றுவதற்காக மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினரான பிரபாகரன் என்பவரோடு பேரம் பேசப்பட்டதாம்.

ஒரு மூடை சீனி, ஒரு மூடை அரிசி, பருப்பு 15 கிலோ, விலை உயர்ந்த மதுபானம் என்பன பரிமாற்றப்பட்டனவாம்.

இதனையடுத்து அடியாட்களை அனுப்பி கடையை உடைத்த மாநகரசபை உறுப்பினர், கடை உடைப்பு நடக்கும்போது மதுபோதையில் நின்று 'நன்றாக உடையுங்கள்' என்று உற்சாகம் கொடுத்தாராம்.

இக்கடை உடைப்பை வெற்றிகரமாக முடித்தமைக்காக மாநகரசபை உறுப்பினருக்கு ஒரு தொகைப் பணமும் கொடுக்கப்பட்டதாம்.

ஏற்கனவே பொதுக் காணியில் உரிமை கொண்டாடியது உட்பட பல புகார்கள் குறிப்பிட்ட உறுப்பினர்மீது உள்ளன. இவர் முன்னர் ஈரோஸ் இயக்க உறுப்பினராக இருந்தவர்.

# இவர்கள் புறக்கணிக்கப்படலாமா?

பயிலுநர் ஆசிரியர்களாக 01.01.1990ல் நியமிக்கப்பட்ட 35,000 பேர்களின் நிலை முழு நாடும் அறிந்ததே. இவர்களின் துயரம் எப்படிப்பட்டது என்று முரசுகூட செய்தி வெளியிட்டிருந்தது.

இவ்வாசிரியர்கள் தொலைக்கல்வி மூலம் பயிற்சிபெற்று 1996ஆம் ஆண்டு முதல் பயிற்றப்பட்ட ஆசிரியர் சான்றிதழ்களும் பெற்றுள்ளனர். ஆனால் பல பகுதிகளில் இதுவரை பயிற்றப்பட்ட ஆசிரியர்களுக்குரிய சம்பளம் கொடுக்கப்படவில்லை. அதிலும் பல தேசியப் பாடசாலைகளில் கடமையாற்றுபவர்களுக்கு மாத்திரம் சம்பளம் அதிகரித்துக் கொடுக்கப்பட்டுள்ளது. ஏன் இந்தப் பாரபட்சம்? மாகாண சபைகளுக்குக்கீழ் சிறு பாடசாலைகளில் சேவை புரிபவர்கள் ஆசிரியர்கள் இல்லையா? சேனையூர்- அ.அச்சுதன்.


AFTER A/L WHAT NEXT ?
COMPUTER DIPLOMA & CERTIFICATE COURSES
கலைப்பிரிவில் சேவையில் ஐந்தாம் ஆண்டு நிறைவையொட்டி A/L மாணவர்களுக்கு அனைத்து பாடநெறிகளிலும் 20% கட்டணக் கழிவை வழங்குகின்றோம்.

COMPUTER COURSES
Diploma in Microsoft Office '97 (Through Windows 98) காலம் 3 மாதம்
Diploma in Desktop Publishing (Through Windows 95) காலம் 3 மாதம்
Dip. in Computer Programming காலம் 4 மாதம்
Adv.Dip.in Information Technology (Through Windows 98) காலம் 5 மாதம்
Visual Basic Programming (Through Windows 98) காலம் 3 மாதம்
Diploma in Computer Studies
Group & Individual Classes

ASIAN COMPUTER SYSTEMS
250 First Floor, George R. De. Silva Mw, Colombo 13. Tel : 075-338726, 451090
SHAKTHI INSTITUTE No : 333, Galle Road, Colombo 4. Tel : 587099,078-49234



வத்தளையில் புதிய கணனி வகுப்புகள் (A/L முடித்த மாணவர்களுக்காகவும்) (Page Maker, Corel Draw, MS Excel, MS Access, MS Word, Word perfect, Lotus 1-2-3, dBase III +, Diploma in Desk Top Publishing, Diploma in Windows) திங்கள், புதன், வெள்ளி, ஆகிய நாட்களில் ஆரம்பமாகின்றன. தமிழ், ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன. அத்துடன் Type Setting செய்து கொடுக்கப்படும்.
D.S. COMPUTER STUDIES
6A, HEKITTA ROAD, WATTALA. TEL: 075-349247




மலையாள மாந்திரிகம்

மலையாள மாந்திரிகத்தை இலங்கையில் திட்டவட்டமாக கற்றவர் பி.கே.சாமி அவர்களே. இதை ஒட்டி எத்தனை எத்தனையோ விருதுகள் பெற்றுள்ளார். இச்சேவையில் கெடுதலுக்கு இடமில்லை. நன்மைக்கே இடம். நிச்சயமாக ஒருவரை விரும்பினால் திருமணம் செய்வதென்று முடிவெடுத்தால் பரிபூரண உதவி செய்வார். காதலர்களை சேர்த்து வைப்பது, பிரிந்த காதலை ஒன்று சேர்ப்பது, பிரிந்தவரை அழைத்து எடுப்பது, திருமண தோஷத்திற்கு சாந்தி பரிகாரம் செய்வது. பிறந்த திகதி, மாதத்தை வைத்து வாடிக்கையாளரை கண்ட மாத்திரத்தில் இது தான் இவர்களின் பிரச்சனை என்று கூறுவதுடன் கணவன் மனைவி பிரச்சனை, தொழில் முன்னேற்றம், வெளிநாட்டுப் பிரயாண தடைநீங்க, இன்னும் மாந்திரிக வேலைகளுக்கும் ஜாதக வேலைகளுக்கும் வெளிநாட்டிலும் உள் நாட்டிலும் 33 வருட உண்மை சேவை புரிவதாலும் வாடிக்கையாளர் மனதை கோணாது செயல்படுவதாலும் இந் நிறுவனம் வரையறுக்கப்பட்ட நிறுவனமாக விஸ்தரிக்கப்பட்டுள்ளது. கடல் கடந்து செயல்படக்கூடிய எத்தனை எத்தனையோ வசிய யந்திரங்கள் உண்டு.
தேவையான வெளிநாட்டவர்கள் உங்கள் ஆடர்களை இலங்கை நேரப்படி காலை 9 மணி முதல் இரவு 9 மணி வரையே தொலைபேசி அல்லது பெக்ஸ் ஆடர்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.
தேவைகளுக்கு உலக மாந்திரிக சக்கரவர்த்தி
P.K. SAAMI J.D.G.A.N&JP
SRI DURGAADEVI MANTHIRIKA UCHCHADA PEEDAM
NO. 162, KOTAHENA STREET, MAY FIELD ROAD, COLOMBO-13.
வெளிநாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி Fax-00941342464. Tel-00941431137.
உள்நாட்டவர்கள் தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் 342463-344831



செல்வி செ.மஞ்சு
20வது பிறந்தநாள் வாழ்த்து
குருணாகலைச் சேர்ந்த செல்வி செ.மஞ்சு அவர்கள் இம்மாதம் 18ம் திகதி அன்று தனது 20வது பிறந்தநாளை தனது இல்லத்தில் இனிதே கொண்டாடினார்.
கோணேசரின் அருளால் பல்கலையும் பெற்றுப் பல்லாண்டுகாலம் வாழ்கவென அவரை அன்புடன் வாழ்த்துகிறேன்.
ச.விக்னேஸ்வரன், திருகோணமலை.




கலை அலங்கார வகுப்புக்கள்
* சிகை அலங்காரம்
* அழகுக்கலை
* மணப்பெண் அலங்காரம்
* 4 மாத கற்கைநெறி
ஆரம்பம்: 27-09-98
FASNAZ BEAUTY SALON
142,டபிள்யூ. ஏ.சில்வா மாவத்தை. கொழும்பு-06.
தொலைபேசி: 589457



விளம்பரப் பகுதி

School of Home Science
CHINESE COOKERY, CAKE MIXING, CAKE ICING, PASTRY+ BREAD MAKING & FABRIC PAINTING
Classes Con'ucted.
By Diploma Holder.
Zulfikah Hameed
Tel: 683005

ஹோமியோபதி
தமிழ்நாட்டின் பிரபல ஹோமியோபதி சிகிச்சைநிபுணர்
Dr.R. தியாகராஜன்
D.H.M.S, AMRSH (Lond)
நாட்பட்ட தீராத வியாதிகளுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்கிறார்.
ஹோட்டல் கிறீன்லண்ட்ஸ்
தொலைபேசி : 585592 - 581986
18.9.98 - 22.9.98
இந்திய தொலைபேசி . 0091-431 - 432946
0091-431 - 432046
வெளிநாடுகளில் இருப்பவர்களுக்கும் சிகிச்சை அளிக்கப்படும்.



RAJA VAJEEKARANA (Rasayana) LEGIUM
ராஜா வஜீகரண (ரசாயன) லேகியம்
(முஸ்லீம் முறைப்படி ஆட்டு மாமிசத்தில் பக்குவமாய் தயாரிக்கப்பட்டது)

சலாமிசிரி, பதாம் பருப்பு போன்ற விலையுயர்ந்த மருந்துகள் சேர்த்து தயாரானது. உல்லாச வாழ்விற்கு உறுணையானதுஸ்திரீ புருஷர்களின் பலவீனங்களைப் போக்கி தளர்ந்த நரம்புகளுக்கு முறுக்கேற்றி சுறுசுறுப்பையும் தேக காந்தியையும் உண்டாக்க வல்லது. உடல் பூரிக்கும். எலும்பும் தோலுமானவர்களின் சரீரத்தை ஆச்சரியப்படத்தக்க வகையில் புஷ்டியாக்கும். கணைச் சூடு தணியும். மூலச் சூட்டைப் போக்கும். இருமல் மார்பு இடுப்புவலி. கால் கை நடுக்கம் மற்றும் சகல பலவீனங்களுக்கும் சிறந்த ரசாயனம் இதுவே. உடல் பருத்தவர்களுக்கும், நீரிழிவு, பிளட் பிரஷர் உள்ளவர்களுக்கும், சிறுவர் சிறுமியருக்கும் சிறந்தது.
நாள்பட்ட பீனிசம், இளைப்பு இருமல் மூலரோகங்கள் உள்ளவர்களும் பயமின்றி பலனடையலாம், பத்தியமில்லை.
500 gram 300/= 250 gram 150/=
வி. பி. பி. ஆடர்கள் கவனிக்கப்படும்.
Ayur Dr. K. ASivasubramaniam
முருகானந்த வைத்தியசாலை
G/02. கொழும்பு மத்திய சுப்பர் மார்கெட், மீன்கடை மேல் (நிலமாடி) கொழும்பு - 11



மனோதத்துவ வைத்தியம்
வவுனியாவிலும் சந்திக்கலாம்
இளைஞர்களே! உங்கள் அடிமனதில் ஆழப்பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை மனோதத்துவ சிகிச்சை மூலம்மாற்றி வெற்றிப் பாதையில் வீறுநடை போட பிரபல மனோதத்துவ நிபுணர் டாக்டர் ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள். இளம் சமுதாயத்தினரை வாட்டும் உடல் மெலிவு, கனவில் சக்தி இழத்தல், ஞாபக மறதி, பயம், நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், நித்திரையின்மை போன்ற தன்னம்பிக்கை இழக்கக் காரணமான தவறுகளை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி புத்துயிர் பெற்று நீங்களே உங்களை வெல்லுங்கள்.
SEXUAL DISORDERS
தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணம் என்பதை 90 நிமிடத்தில், தான் வீரியம் உள்ள ஆண்மகனாகி விட்டேன், என்னால் முடியும், என்று அடிமனதில் பதிய வைத்த பின்னரே பணம் பெறப்படும்.
வெளிநாட்டில் வசிப்போருக்கு விஷேட ஏற்பாடுகள்
உங்களின் தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகளை தீர்க்க வழியின்றி தவிக்கத் தேவையில்லை. வெட்கத்தை விட்டு முழுவிபரங்களையும் கடிதமூலம் விளக்கி எழுதவும். எமது கேள்விகளுக்கு பதில் தெரிந்தபின் பதிவு தபாலமூலம் தாழ்வு மனப்பான்மை நீங்க மனோதத்துவ சிகிச்சையும், உடல் குறைபாடுகளுக்கு மருந்தும் அளித்து பூரண சுகமடையலாம். பல நூற்றுக்கணக்கான இளைஞர்கள் ஆச்சரியப்படும்வகையில் சுகமாகியுள்ளனர். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) பதில் பெற முத்திரை செலவு அனுப்பவும்.
மட்டக்களப்பு விலாசத்திற்கு மட்டும் கடிதத் தொடர்பு கொள்ளவும்
மனநிலை பதிப்புக்கள், மனநோய்கள், 'ஹிஸ்டீரியா'- ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளனர். மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளை போதல், கிரந்தி நோய்க்கும் குழந்தைப்பேறு இன்மைக்கும் தீர்க்க முடியாத வியாதிக்கும் மருந்து உண்டு. பலர் நீரிழிவு நோயில் இருந்து முற்றாகக் குணம் அடைந்துள்ளனர். விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்.
BATTICALOA RESIDENT. T.P: 065-24019
கொழும்பில் செப்டம்பர் 20 முதல் 28 வரை
DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
BEAUTY LODGE, 67A, WOLFENDHAL STREET, COLOMBO-13
T.P. 338165, 338166 (5 லாம்புச்சந்தியில் இருந்து 100 யார் தூரத்தில் உம்பிச்சி பிளேஸ் பள்ளி வாசலுக்கு முன்னால் உள்ளது)
கொழும்பு நாட்களில் மட்டும் செல்டெல் No-072-609388
கல்முனையில் அக்டோபர் 3,4 திகதிகளில்
T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 065- 29329
வவுனியாவில் அக்டோபர் 12,13 திகதிகளில்
(Vanni Inn) 2ஆம் குறுக்குத் தெரு ஞான வைரவர் கோவில் ஒழுங்கை வவுனியாவில் சந்திக்கலாம். T.P.024-22074
மற்றைய நாட்களில்
DR.P.ARUMUGAM S.A.M.P., NO.33. Tissa Weerasingam sq., Boundary Road, Batticaloa
RESIDENT T.P:- 065-24019



கண்டி, பம்பலப்பிட்டி கிளைகளில்
குறகிய கால பாடநெறிகள் ஒவ்வொரு மாத முதல் வாரத்திலும் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
ORGAN Anton Dias Sat/Sun-
FRENCH Miss Prem Tue/Wed 3 p.m
GERMAN D.Ranjithan Mon/Wed 9.00
SP.ENGLISH K.JEYAKUMAR SAT/SUN 5.30p.m
SP.ENGLISH Bishrul Hafi FRI 5-7p.m
BUS.MANAGEMENT D.Ranjithan Sat/Sun 9.00
RUSSIAN D.Ranjithan Mon/Wed 10.00
TOEFL/SAT Jeyakumar Fri 9a.m
SINHALA Parameswaran Wed 5-7p.m
N.C.E K.JEYAKUMAR Fri 5-7p.m
A.A.T./I.A.B K.Rabindran Sun 4-6p.m
A.A.T./I.A.B./CIMA/IFA Saravanabavan Sat / Thu - 9
Screen Printing S.T.Ravi Sat 10.30a.m
SHORT HAND & TYPING (தமிழ், ஆங்கில மொழி மூலம்) Mon-Fri 9.00, Sat/Sun-10.00 Miss.Vajanthy Electronic Typing பயிற்சியும் உண்டு
STENO/SECRETARIAL COURSE Miss.Vaijamthy K.JEYAKUMAR Tue, Thu - 11.30 am
FABRIC PAINTING NIB PAINTING Miss.Fayasa Tue, 10.30 am
BEED ONAMENTS WOOL KNITING Miss.Ganga Tue, 10.30 am
CUSTUME JEWELLERY FLOWER MAKING PAN CLAY Miss.Fayasa Tue, 10.30 am
தையல் Embrodery & Patch Work Miss.Fayasa Fri, 2.30 p.m
HAIR STYLE BRIDIAL DRESSING Makup, Bleaching Mrs.Wahitha Thu, 11.30 a.m
COOKERY CAKE MAKING & ICING Miss.Rizana Cader Thu, 11.30 a m
A/L கலை வர்த்தக பிரிவிற்கான தமிழ், Hindusium, இந்து நாகரீகம், புவியியல், பொருளியல் வணிகக்கல்வி, கணக்கியல் என்பனவும்
G.A.Q. 99 தமிழ் Sat 8.30a.m H.C Sat 10.30a.m G.E.O. Sat 3.00p.m Econ Sat 9.00a.m Pol.Sci Sat 1.30p.m
B.A Geo Sat 3.30p.m Econ Sat 9.00a.m Pol.Sci Sat 1.30p.m
COMPUTER COURSES
Diploma in Computer Fri 2.30 p.m
Ms Office & Windows Sat 8.30 a.m
Advanced Pascal & Clipper Wed 2.30 p.m
Type Setting Mon, Wed 10.30 a.m
Power Point Tue, Thu 10.30 a.m
Corel DRAW Mon, Wed 11.30 1.m
விரும்பியோருக்கு இரவு நேர வகுப்புகள் ஒழுங்கு செய்து கொடுக்கப்படும்
EPI
316, Galle Road, Colombo04.
Tel: 590210
83, Katugastota Road, Kandy.




படிப்பகம்

எக்ஸ்ரே ரிப்போர்ட்

நாரதர்

# எதிர்பாராத இடத்தில் எதிர்பாராத நேரத்தில்

**11.09.98** அன்று யாழ் நகரமே அதிர்ந்து போனது. யாழ் மாநகர முதல்வரை புலிகள் குறிவைப்பார்கள் என்பது எதிர்பார்க்கப்பட்டதுதான்.

அந்தக் குறியோடு சேர்த்து பெரும் தலைகள் பலவும் உருண்டதுதான் நாடெங்கும் அதிர்வைக் கொடுத்திருக்கிறது.

இத்தாக்குதல் தொடர்பான விபரங்களை துருவ முன்னர், பதினைந்து ஆண்டுகள் பின்னோக்கிச் சென்றுவிட்டு திரும்பவேண்டும்.

1983 ஏப்ரல் மாதம் 2ம் திகதி யாழ் அரச செயலக கட்டடத்தில் பாதுகாப்பு மாநாடு ஒன்றை கூட்டியிருந்தார் யாழ் அரச அதிபர்.

வடமாகாணத்தில் பாதுகாப்பையும் அமைதியையும் ஏற்படுத்துவதற்கான வழிவகைகளை ஆராய்வதற்காகவே அம்மாநாடு கூட்டப்பட்டது.

யாழ் மாவட்ட அமைச்சராக இருந்த விஜயக்கோன் தலைமையில் இராணுவ, பொலிஸ் உயரதிகாரிகளும், கூட்டணி தலைவர் அமிர்தலிங்கம் உட்பட வேறு சில கூட்டணி எம்.பிகளும் கலந்துகொள்ள இருந்தனர்.

மாநாடு ஆரம்பமாவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்பாக கூட்டம் நடைபெறவிருந்த மண்டபத்தில் வெடித்தது குண்டு. மாநாட்டு மண்டபம் இடிந்தது.

இந்த நடவடிக்கை புலிகளால்தான் மேற்கொள்ளப்பட்டது.

அப்போது அமிர்தலிங்கத்தை பலியாக்க புலிகள் விரும்பவில்லை. எச்சரித்தால் போதும் என்றே நினைத்தனர். அதனால்தான் கூட்டம் நடக்கும்போது குண்டு வெடிப்பு நடத்தாமல், முன்கூட்டியே மாநாட்டு மண்டபத்தில் வெடிக்கவைத்தனர்.

அந்த தாக்குதல் தொடர்பாக புலிகள் பின்வருமாறு கூறியிருந்தனர்: "மாநாட்டின் நோக்கம் விடுதலைப் புலிகளை ஒழித்துக்கட்டும் செயல் திட்டம் ஒன்றை உருவாக்குவதேயாகும். அரச பயங்கரவாதிகளும், அரசியல் சந்தர்ப்பவாதிகளும் கலந்துகொள்ளும் உயர்மட்ட மாநாடு அதுவாகும். இந்த நாசகார நோக்கம் கொண்ட மாநாடுகளோ, திட்டங்களாலோ எமது இயக்கத்தின் புரட்சிகர ஆயுதப் போராட்டத்தை அழித்துவிட முடியாது என்பதை சிங்கள இனவாத அரசுக்கும், அதன் ஏஜண்டுகளுக்கும் (கூட்டணி) உணர்த்தவே இத் தாக்குதல் நடத்த முடிவு செய்தோம்."



அத்தாக்குதல் நடைபெற்று பதினைந்து வருடங்களின் பின்னர் இன்னொரு பாதுகாப்பு மாநாடு புலிகளால் தாக்கப்பட்டுள்ளது.

அன்று மாநாட்டு மண்டபம் மட்டுமே இடிந்தது. இப்போது கூட்டம் நடந்த கட்டடத்தோடு, கூட்டத்தில் கலந்துகொண்டோர் அனைவரையும் கூண்டோடு கொண்டுபோய்விட்டது.

போக்குவரத்து விதிகளைப் பற்றி ஆராய்வதற்கே மாநகர மேயர் சிவபாலன் கூட்டத்தை கூட்டியதாக இப்போது கூறப்பட்டாலும், இராணுவ உயரதிகாரிகள் கலந்துகொண்டமையால் போக்குவரத்து விதிகளுக்கு அப்பால் பாதுகாப்பு தொடர்பான கலந்துரையாடல்களும் அடங்கிய மாநாடுதான் நடந்திருக்கிறது.

கிளைமோர் பாணியில் கூரைக்கும் சீலிங் பலகைக்கும் இடையே பொருத்தப்பட்ட குண்டுதான் வெடித்திருக்கிறது.

இதனையடுத்து பல்வேறு ஊகங்கள் கிளம்பின.

ஆறுமாதம் முன்பாகவே குறிப்பிட்ட குண்டு பொருத்தப்பட்டுவிட்டது. அருமையான குறி கிடைத்ததும் வெடிக்க வைக்கப்பட்டுள்ளது என்பது ஒரு ஊகம். இந்த ஊகத்தை பாதுகாப்பு தரப்பினரே பெரிதாக்கி உள்ளனர். அவர்கள் மூலம்தான் கிளம்பியும் உள்ளது.

அவ்வாறு கூறுவது தமது பாதுகாப்பில் உள்ள ஓட்டைகளை மறைக்கும் என்பதும் அந்த ஊகத்தை கிளப்ப முக்கியமான காரணம்.

ஆனால் அது நடைமுறை சாத்தியமே இல்லாத ஊகமாகும். கண்ணிவெடி என்றால் நிலத்திற்குள் மறைந்து கிடக்கும். வெளியே தெரியாது.

கிளைமோர் குண்டு அப்படியல்ல. பார்த்ததும் உடனே தெரிந்துவிடும். உருமறைப்பு செய்யப்பட்டு பொருத்தப்பட்டதாக கூறுவது தமாஷ். எப்படித்தான் பொருத்தினாலும் வித்தியாசமாக கண்களுக்குத் தெரியும்.

இதுவரை எங்கும் புலிகள் மேற்கொள்ளாத புதிய முறையில் குண்டு பொருத்தப்பட்டிருக்கிறது. பாதையிலும், மண்டபத்துக்குள்ளும் புலிகளின் தாக்குதலை எதிர்பார்த்து உஷாராக இருக்க, குண்டு யாரும் எதிர்பாராத இடத்தில் கூரைக்குள் ஒளிந்திருந்தது.

இந்த புதிய உபாயம் மாட்டுப்படுவதை புலிகள் விரும்பமாட்டார்கள். எனவே நீண்ட காலம் கிளைமோர் குண்டை கூரையில் வைத்திருக்கும் விதமான திட்டத்தை தீட்டியிருக்க முடியாது.

கடந்த ஏப்ரல் மாதம் கட்டட திருத்த வேலைகள் நடந்தபோது பொருத்தப்பட்ட குண்டே இது என்று பாதுகாப்பு தரப்பு கூறுகிறது. அது பலவீனமான ஊகம்.

கடந்த நான்கு மாதத்தில் மண்டப கூரைக்கும் சீலிங்குக்கும் இடையே பலதடவை எலக்ரீஷியன்கள் சென்று வந்துள்ளனர்.

மேயரின் அறைக்கு மேலேயும் சில திருத்த வேலைகள் சமீபத்திலும் நடந்துள்ளன.

அதுதவிர கிளைமோரில் வயர்கள் காணப்பட்டுள்ளன. அதனை பாதுகாப்பு தரப்பு குண்டு வெடிப்பின் பின்னர் கண்டுபிடித்துள்ளது. எனவே ரிமோட் கொண்ரோல் மூலம் வெடிக்கவைக்கப்படவில்லை. வயரை இழுத்து அதில் சுவிட்சை பொருத்திவைத்து அமுக்கியுள்ளனர்.

பல மாதங்களாக வயர் தொங்கிக்கொண்டிருந்தால் யார் கண்ணிலாவது பட்டிருக்கும். ஏன் இந்த வயர் தேவையில்லாமல் கிடக்கிறது என்று எலக்ரீஷியன்கள்கூட அகற்ற முனைந்திருப்பர்.

எனவே பல மாதங்களின் முன்னர் குண்டு பொருத்தப்பட்டிருக்கலாம் என்பது பாதுகாப்பு தரப்பினர் தங்கள் தரப்பு மரியாதையைக் காப்பாற்ற கூறும் ஊகம்.

பாதுகாப்பு அரண்கள், சுற்றிவளைப்புக்கள், கண்காணிப்புக்கள் மத்தியில் குண்டு கொண்டு வரப்பட்டு பொருத்தப்பட்டிருப்பது படையினருக்கும் ஒரு சவால்தான்.

உண்மையில் நடந்தது என்ன?

முன்னாள் யாழ் மேயர் சரோஜினி பாதுகாப்பு இல்லாமல் இருந்ததால்தான் கொல்லப்பட்டார். எந்தப் பாதுகாப்பும் இல்லாமல் இருந்த பெண்மணியை சுட்டுவிட்டனர் என்று கூட்டணியினர் திரும்பத் திரும்பக் கூறினர். அதனை ஒரு சவாலாக அப்போதே புலிகள் எடுத்துக் கொண்டனர்.

புதிய மேயர் சிவபாலனும் உயிர் தமிழுக்கு உடல் மண்ணுக்கு என்று பேசிக்கொண்டுதான் பதவி ஏற்றார். பாதுகாப்பு இருந்தால் யாழில் உயிரபாயம் இருக்காது என்ற நம்பிக்கையில்தான் சிவபாலன் பதவி ஏற்றிருந்தார்.

இன்றைய நிலையில் மாநகர சபையால் எதனையும் சாதிக்கமுடியாது என்பது யாருக்குத்தான் தெரியாது. எனவே உயிரை துச்சமாக மதித்து மேயர் பதவி ஏற்றது மக்களுக்கு சேவை புரிவதற்கு என்று கூறுவது மிகையான புகழாரம்.

மேயர் பதவியில் உள்ள ஆசை தவிர வேறு எதனையும் காரணம் கூறமுடியாது.

இராணுவம் இருக்கையில் அங்கு அபிவிருத்தி செய்ய முடியாது என்று சிவபாலனே கூறியிருந்தார்.

அதே சிவபாலன் யாழில் உள்ள இராணுவத் தலைமையை நச்சரித்து யாழ்ப்பாணத்தில் தமது கட்சி அலுவலகத்திற்கு பலத்த இராணுவப் பாதுகாப்பையும் பெற்றிருந்தார்.

இதற்கெல்லாம் சிகரம் வைத்தது மாதிரி ஒரு செய்திதான் புலிகளை ஆத்திரமூட்டியதாம்.

ஜனாதிபதி சந்திரிக்காவை கொழும்பில் நேரில் சந்தித்து மேலதிக பாதுகாப்புக் கோரினார் சிவபாலன்.

உடனடியாக ஜனாதிபதி பாதுகாப்பை அதிகப்படுத்த உத்தரவிட்டார். அச் செய்தியை பத்திரிகைகளும் பெரிதாக பிரசுரித்தன.

அச் செய்தியைப் பார்த்த பின்னர்தான் யாழ் மேயர் சிவபாலனை தீர்த்துக்கட்டும் திட்டம் விரைவுபடுத்தப்பட்டதாம்.

என்றோ ஒருநாள் யாழ் மேயருக்கு புலிகள் குறிவைத்தே இருப்பர். அதனை இத்தனை விரைவாக மாற்றியதற்கு சிவபாலனின் பாதுகாப்பு வியூகங்களும் ஒரு காரணம்.

முன்னாள் யாழ் மேயர் சரோஜினி யோகேஸ்வரனுக்கு புலிகளது எச்சரிக்கை தெரிவிக்கப்பட்டிருந்தது. ஆனால் சிவபாலனுக்கு எவ்வித எச்சரிக்கையும் புலிகளால் விடுக்கப்படவில்லை.

சரோஜினி கொல்லப்பட்ட பின்னரும் பதவி ஏற்கும் ஒருவருக்கு எச்சரிக்கையை எழுத்தில் அல்லாமல், செயல்மூலமே காண்பிக்க புலிகள் தீர்மானித்தனர். அதனால்தான் புலிகளின் கோபத்துக்கான எவ்வித அறிகுறியும் காண்பிக்கப்படவில்லை.

உயிர் தமிழுக்கு, உடல் மண்ணுக்கு என்று முதலில் சவாலாக பேசினாலும், பின்னர் புலிகளை சாந்தப்படுத்தவும் சிவபாலன் தவறவில்லை.

புலிகளுடன் அரசு பேசவேண்டும் என்றொரு தீர்மானத்தை சிவபாலன் கொண்டுவந்தார். ஈ.பி.ஆர்.எல்.எ.்ப். அதனை எதிர்த்ததால் மாநகரசபையில் அத்தீர்மானம் நிறைவேறவில்லை.

அப்படியிருந்தும் குறிப்பிட்ட தீர்மானம் நிறைவேற்றப்பட்டதாக பத்திரிகைகளுக்கு செய்தி கொடுத்தார் சிவபாலன். புலிகளை சாந்தப்படுத்த ஒரு பொய் சொல்லவும் தயங்கவில்லை.

இனப்பிரச்சனைக்கு இராணுவத் தீர்வு காண்பதற்கும், புலிகளை ஒழித்துக் கட்டவும் அரசு வகுத்துள்ள திட்டத்தின் ஒரு கட்டம்தான் யாழ் உள்ளூராட்சித் தேர்தல் என்று புலிகள் கூறிவிட்டனர்.

யாழில் இராணுவ நிர்வாகம் இன்னமும் தொடர்ந்து கொண்டிருக்கும்போது, யாழ் மேயர் என்ற பதவி யாழ் நிலவரத்தை நேர்மாறாக சித்தரிக்க துணைபோகிறது என்பதும் புலிகளின் அப்பிப்பிராயம்.

எனவே, உதட்டளவில் புலிகளுக்கு அனுசரணையாக பேசினாலும்கூட, தம்மை ஒழித்துக் கட்டும் திட்டத்துக்கும், இராணுவத் தீர்வு முயற்சிகளுக்குமே துணைபோவதாகவே யாழ் உள்ளூராட்சி சபைகளில் பங்குகொள்வோர் பற்றி புலிகள் கோபம் கொண்டுள்ளனர்.

சிறிய தலைகளை பின்னர் பார்த்துக் கொள்ளலாம். முதலில் பெரிய தலையை கவனிப்போம் என்றுதான் அடுத்தடுத்து இரண்டு மேயர்களுக்கு குறிவைக்கப்பட்டது.

பாதுகாப்பு வியூகத்தில் இருக்கும் சிவபாலனை, தமது தரப்புக்கு எவ்வித இழப்பும் இல்லாமல் தீர்த்துக்கட்டக்கூடிய திட்டம் தீட்டினர் புலிகள்.

நல்லூரில் யாழ் மாநகர சபை இயங்கும் முன்னைநாள் கல்யாணமண்டபத்தின் ஒவ்வோர் அங்குலமும், அதன் கட்டட அமைப்பும் புலிகளுக்கு நன்கு பரிச்சயமானவை.

மண்டபக் கூரைக்கு அஸ்பெஸ்டாஸ் சீற் போடப்பட்டுள்ளது. அதன் கீழே சீலிங் அடிக்கப்பட்டிருக்கிறது. கூரையில் உள்ள சீற்றை கழட்டாமலேயே கூரைக்கும், சீலிங்குக்கும் இடைப்பட்ட பகுதிக்கு சென்றுவர வழியும் இருக்கிறது. அந்த வழியால்தான் வயறிங் வேலைகள் போன்றவற்றை செய்பவர்கள் அடிக்கடி சென்று வருவர்.

(பல மாதங்களுக்கு முன்னர் குண்டு பொருத்தப்பட்டிருந்தால் அவர்கள் கண்ணில் பட்டிருக்கும்)

எவ்வித சிரமமும் இல்லாமல் கூரையில் கிளைமோர் குண்டு பொருத்திவிட லாம் என்பது புலிகளுக்கு தெரியும். பத்து நிமிடம்கூட ஆகாது பொருத்தி முடிக்க.

அதன்படி கிளைமோர் குண்டு கொண்டு வரப்பட்டு, கல்யாண மண்டபத்துக்கு பின்புறமுள்ள பகுதி ஒன்றில் மறைத்து வைக்கப்பட்டது. அடுத்த மாநகரசபை கூட்டம் எப்போது என்று தெரிந்தது கொண்டு அதற்கு ஏற்ற வகையில் கூரையில் குண்டை பொருத்துவதே திட்டம்.

இம்மாதம் 9ம் 10ம் 11ம் திகதிகளில் மாநகரசபைக் கூட்டம் நடத்துவதற்கு ஏற்பாடு செய்யுமாறு தன் மக்கள் தொடர்பு அதிகாரிக்கு பணித்தார் யாழ் மேயர்.

**1983 இல் மண்டபம் தகர்ந்தது! அது புலிகளின் எச்சரிக்கை! 1998 இல் மண்டபத்தோடு உயிர்களும் அழிந்தன! இது எச்சரிக்கையை மீறியதற்காக புலிகளின் அடி!**

அதிலும் 10ம் திகதி விசேஷ கூட்டம் நடத்த ஏற்பாடாகியது. அந்த கூட்டம் முன்னாள் மேயர் சரோஜினிக்கு அஞ்சலி செலுத்தும் கூட்டம்.

இத் தகவல் புலிகளுக்கு ஒருவாரத்தின் முன்னரே எட்டியிருக்கிறது.

முன்னாள் மேயருக்கு அஞ்சலி தெரிவிக்கும் கூட்டத்தில் வைத்தே இந்நாள் மேயரின் கணக்கையும் முடிக்க நாள் குறித்தனர்.

கிளைமோர் குண்டு கூரைக்குள் பொருத்தப்பட்டது.

மாநகர சபைக்கு பகலில் ஒரு காவ லாளி. இரவில் ஒரு காவலாளி. மற்றப்படி பொலிஸ் பாதுகாப்பு எதுவும் கிடையாது.

காவலாளி அங்கேயே தூங்கினாரோ, வீட்டுக்கு போய் தூங்கினாரா தெரியாது. இரவோடு இரவாக காவலாளிக்கும் தெரியாமல் குண்டு பொருத்தப்பட்டுவிட்டது.

காவலாளி விழிப்பாக இருந்திருந்தால் கூட அவருக்கு தெரியாமல் கூரைக்கு செல்வதோ பொருத்திவிட்டு போவதோ சிரமம் இல்லை.

9ம் திகதி நடக்க இருந்த மாநகரசபை நிதிக்குழுக்கூட்டம் என்ன கரணத்தினாலோ ஒத்திவைக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து 10ம் 11ம் திகதிகளில் நடக்க இருந்த விசேஷ கூட்டம், மாதாந்த கூட்டம் என்பவையும் ஒத்திவைக்கப்பட்டது.

முன்னாள் மேயர் சரோஜினியின் உருவப் படம் தயாராகவில்லை. அதனால்தான் அஞ்சலிக் கூட்டம் ஒத்திவைக்கப்பட்டதாக மாநகரசபை உறுப்பினர்கள் சிலரிடம் கூறியிருக்கிறார் சிவபாலன்.

அஞ்சலிக்கூட்டம் மட்டுமன்றி மாதாந்த கூட்டமும் ஒத்திவைக்கப்பட்டதால் ஏமாற்றமடைந்த புலிகளுக்கு, பழம் நழுவிப் பாலில் விழுந்தது போன்ற செய்தி ஒன்று கிடைத்தது.

பாதுகாப்புக் கூட்டம் ஒன்று நடக்க உள்ளது. இம்முறை மாநகரசபையில்தான் கூட்டம் நடக்கப்போகிறது. பொலிஸ், இராணுவ அதிகாரிகளும் பங்கு கொள்வர் என்பதுதான் செய்தி.

அப்படியோரு கூட்டம் நடக்கும் என்பது புலிகளே எதிர்பார்க்காத ஒன்று. ஏனெனில் முன்பு பல தடவை இராணுவ முகாம்களுக்கு சென்றுதான் படை உயரதிகாரிகளை மேயர் சிவபாலன் சந்தித்தார்.

அதுமட்டுமல்லாமல் குறிப்பிட்ட கூட்டத்தில் எந்தெந்த அதிகாரிகள் பங்கு கொள்வர் என்பது இறுதி நேரம்வரை மேயருக்கே ஊர்ஜிதமாகத் தெரியாதாம்.

குண்டு வெடிப்பதற்கு முதல் நாள் மாலையில்தான் மாநகரசபையில் இராம கிருஷ்ணன் மிஷன் துறவிகளை மேயர் வரவேற்றார். அவர்களை வரவேற்க மேயருடன் மாநகரசபை உறுப்பினர்கள் சிலரும் காத்திருந்தனர்.

"நாளை பாதுகாப்பு பிரிவுடன் கூட்டம் இருக்கிறது. பொலிஸ் அதிகாரிகள் வருவார்கள். இராணுவத்தரப்புக்கும் தகவல் கொடுத்திருக்கிறேன். அநேகமாக அவர்களும் வரக்கூடும். ஜனாதிபதி நேரடியாக உத்தரவிட்டபின்னர் நல்ல மரியாதை தருகிறார்கள். எனக்கு இப்போதுதான் சல்யூட் போடுகிறார்கள்!" என்று பேசிக் கொண்டிருந்தாராம் மேயர் சிவபாலன்.

எனவே, பிரிகேடியர் மெண்டிஸ் கலந்து கொள்வார் என்பது முன்கூட்டியே எதிர்பார்க்கப்பட்ட ஒன்றல்ல.

கிளைமோர் குண்டு கூரையைப் பிய்த்துக் கொண்டு வெடித்திருக்கிறது. புலிகளுக்கு அதிஷ்டமும் கூரையைப் பிய்த்துக் கொண்டுதான் கொட்டியிருக்கிறது.

அஞ்சலிக் கூட்டத்தில் குண்டு வெடித்திருந்தால் மாநகர முதல்வர் உட்பட சபை உறுப்பினர்கள்தான் பலியாகி இருப்பர். ஆனால் பிரிகேடியர் மெண்டிஸ் மாட்டிக் கொண்டது அதனைவிட புலிகளுக்கு முக்கியத்துவம் வாய்ந்தது.

ஏற்கனவே புலிகள் வைத்த குறி ஒன்றில் பிரிகேடியர் மெண்டிஸ் தப்பியிருந்தார்.

மாநகர சபைக் கட்டடத்தின் ஒரு பகுதியில் வெளிப்புறமாக நின்று குண்டில் பொருத்தப்பட்ட வயரில் இருந்த சுவிட்சை அமுக்கித்தான் வெடிக்கவைத்துள்ளனர்.

குண்டுவெடித்தால் எந்தளவு தூரத்திற்கு பாதிப்பு ஏற்படும் என்று தெரிந்து, தனக்கு பாதகம் ஏற்படாத தூரத்தில் நின்று சுவிட்சை அமுக்கியுள்ளார் ஒருவர். அவர் புலியா? புலியின் ஆதரவாளரா? என்பது விசாரணையாளர் கண்டுபிடிக்க வேண்டியது.

எப்படியோ, புலிகள் தூணிலும் இருப்பர் துரும்பிலும் இருப்பர் என்பது போன்ற பிரமை ஏற்பட்டுவிட்டது. இனிமேல் கூட்டங்கள் நடத்த முன்பாக தூணில் இருந்து துரும்பு வரை சோதித்தாக வேண்டும்.

யாழ் மாநகர மேயருக்கான நாற்காலியில் யார் அமர்ந்தாலும் அவர்களுக்கு ஜனாதிபதிக்கு வழங்குவதைவிட அதிக பாதுகாப்பு தரவேண்டி யிருக்கும். ஆனால் யாழ் மண் புலிகளுக்கு பரிட்சயமானது. அங்கு பாதுகாப்பு எந்தளவுக்கு உத்தரவாதம் என்பது கேள்விக்குரியதே!



## அதிரடி அய்யாத்துரை

***முன்னாள் மாநகர முதல்வர்*** *பலியானதற்குக் காரணம் தமிழ்க் கட்சிகளில் ஒன்றுதான் என்று அவரது கட்சியினரே கூறினவையல்லோ? அப்படியானால் இந்நாள் முதல்வர் பலியானதற்கு யார் காரணம்? 'ஹமாஸ்' இயக்கமாக இருக்குமோ?!*

***பி.பி.சிக்கு*** *காரசாரமாக பேட்டி கொடுத்தார் கூட்டான கட்சியின் ஆவரங்காலின் அந்தக்காலத் தூண்! முக்கிய பிரமுகர்கள்கூட அப்படி உறைப்பாகப் பேட்டி கொடுக்கவில்லை. "சமாதானத்தை குழப்புகினம். ஆனால் சபை நடத்தியே காட்டுவோம்!" என்று சவாலும் விட்டார். அந்த நேரத்தில் அவர் நின்ற நிலை உஷார் நிலையாம்! அப்படியிருந்தும் படு நிதானம். தப்பித்தவறிக்கூட ரெண்டு எழுத்தாரின் பெயரை உச்சரிக்கவில்லைப் பார்த்தியளோ? 'ஸ்டெடி' எண்டு சொல்லுறது அதைத்தான்!*

***யாழ் குடாநாட்டு*** *மினிச் சபைகளை இனிமேல் கொரில்லாச் சபைகள் என்றுதான் அழைக்க வேண்டும். எங்கு கூடும், எப்போது கூடும் என்ற விபரங்கள் யாவும் உயர் இரகசியமாக வைக்கப்படுமாம். திடீர் அறிவிப்புடன் திடீர் என்று, திடீர் இடத்தில் கூடுமாம். இப்படியெல்லாம் கூடி எதனைச் சாதிக்கப் போகிறார்கள்? அதிகாரத்தரப்பாரின் நலனை காத்த குட்டித் தேர்தலால் இதுவரை சனத்துக்கு கிடைத்த பலன் என்ன? பதுங்கிப் பதுங்கி சபை கூடவும், முழி பிதுங்கவும் விட்டுப்போட்டு நைசாக ஒதுங்கி நிற்கினம் அதிகாரத்தரப்பார்.*

***திருவானமலையில்*** *சந்தை விவகாரத்தில் கறுப்பு நாள் அனுஷ்டிக்க நகரத் தலைவர் அழைப்பு விடுத்தவர். தன் சொல்லுக்கு உள்ள செல்வாக்கு தெரிந்ததால் ஞாயிற்றுக்கிழமையாய் பார்த்து கடையடைப்பும், ஹர்த்தாலும் நடத்தச் சொன்னது குட் டெக்னிக்! அரசாங்கமே ஞாயிறு கடை பூட்டச் சொல்லுது. இவர் ஏன் மேலதிகமாக சொல்லித்திரியுறார்? என்று கேட்டு குழம்பிப் போச்சினமாம் கடைக்காரர்கள். அடுத்த போராட்டம் என்ன போயா தினத்திலயோ?*

***மாநகர முதல்வரின்*** *மரணச் சடங்கில் இரண்டாயிரம்பேர்தான் கலந்துகொண்டவை. முன்னாள் முதல்வருக்கு இருந்ததைவிட சனம்கூடத்தான் என்றார் ஒரு பிரமுகர். அல்பிரட் துரையப்பாவின் மரணச்சடங்கில் முப்பதாயிரத்துக்கு மேற்பட்ட மக்கள் கலந்து கொண்டனர். அழுது அரற்றினர். அதைக் கேலி செய்த ஆட்கள் யாரென்று யாரென்பது யாவரும் அறிந்ததே!*

***கூட்டான கட்சித் தலைவரை*** *பூரண ஓய்வெடுக்குமாறு வைத்தியர்கள் பணித்துவிட்டனராம். அதன் பொருட்டு அயலகத்தில் உள்ள குடும்பத்தினரிடம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். என்னதான் அவரை விமர்சனம் பண்ணினாலும், அவர் பூரண ஆயுளுடன் இருக்க வேண்டும் என்பதுதான் அடியேனின் ஆசை.*

***பச்சைக் கட்சியின்*** *மாநாட்டில் தமிழ்க் கட்சித் தலைவர்கள் எவரும் தலைகாட்டவில்லை. பிரதிநிதிகளை அனுப்பினார்களாம். மேடத்தின் கோபத்தை ஏன் சம்பாதிக்கப்போகினம்? இதே பச்சைக்கட்சி அதிகாரம் உள்ளபோது பாட்டுக் கச்சேரிக்கு அழைப்பு விடுத்தால்கூட தலைவர்கள்தான் முன்வரிசையில் முறுவலோடு அமர்ந்திருப் பினம். இதுதான் (டா) அரசியல்!*

***"ரெண்டு எழுத்தாரோடு*** *சவால் வேண்டாம்!" என்று படிச்சுப் படிச்சு சொல்லியும் கேட்கவில்லை. அடுத்தும் அப்படிச் செய்யவேண்டாம். புதிய ஆளைத் தெரிவு செய்யவேண்டாம்!" என்று தலைமைக்கு கூறியிருப்பதாக கிழக்கின் கூட்டான கட்சி பிரதிநிதி ஒருவர் கூறினார். சங்கதியுள்ளவர்தான் சவாலுக்குச் சவால் என்று முன்னணியில் நிற்கிறார் என்றும் குறைபட்டுக் கொண்டார் அந்தப் பிரதிநிதி.*

***யாழ் சென்றுவந்த*** *பத்திரிகையாளர் ஒருவர் மிகப் பாதிக்கப்பட்டிருந்தார். கவலையோடு காணப்பட்டவர் ஒரு கேள்வியும் கேட்டார்: "முதல்வரது ஆசனத்தை பார்த்தியளோ? என்ன மாதிரித் தெரியுது?" என்றார். எனக்குப் புரிவில்லை. அவரே சொன்னார்: "அமெரிக்காவில் மரணதண்டனை கொடுக்கப் பாவிக்கும் மின்சாரக் கதிரை மாதிரியல்லோ செய்திருக்கினம்!" என்றார். கேலியில்லை. உண்மையாகவே கவலைப்பட்டார் மனுசன். அவருக்கு சகுனங்களில் நம்பிக்கை!*

***குண்டு கிண்டு*** *வெடித்தால், அது எங்கு வெடிக்குதோ அங்கு பணியாற்றும் தமிழ் ஆட்கள் சாவதைவிட சாகாமல் இருப்பதுதான் நரக வேதனை. செத்தவை சொர்க்கத்துக்கு போகினமோ இல்லையோ, உயிரோடு இருப்பவர்கள் நிச்சயமாக நரகத்துக்கு அனுப்பப்பட்டுவிடுவார்கள்.*

***கூட்டான கட்சியின்*** *செயலதிபர் பிறநாட்டில் இருக்கிறார். தங்கமானவர் இறந்த செய்தி அறிந்தும்கூட புறப்பட்டு அயலகம் போனவர் அவர். முதல் நாளே அயலகம் போனதுமாதிரி செய்திகள் வரச் செய்ததும் அவரே! மாநகர முன்னாள் முதல்வர் பலியானபோதும் கட்சித் தலைவர் என்ற கோதாவில் யாழ் வருமாறு கேட்டனர். முடியாது என்று விட்டாராம். இந்நாள் முதல்வர் விவகாரத்திலும் பிறநாட்டில் இருந்துகொண்டு வரமறுத்துவிட்டார். இரகசியமாக ரெண்டு எழுத்தாருக்கு எதிராக பேசவதேயல்லாமல், பகிரங்கமாக தலைகாட்டமாட்டார் போலக்கிடக்கு!*

***'பச்சை அணி மாநாட்டில்*** *கலந்துகொள்ள வேண்டாம்' என்று அதிகாரத் தரப்பார் அன்புக் கட்டளையிட்டனராம். பச்சை அணி மாநாட்டின் முன்னர் நடந்த கூட்டம் அதற்காகத்தான் கூட்டப்பட்டதாம். பார்த்தியளோ இரு தரப்பின் ஏட்டிக்குப் போட்டியை? ஒற்றுமை, புரிந்துணர்வு எல்லாம் பாச்சா!*

**இந்தவாரப் பொன்மொழி**

**"தவறைத் திருத்தாமல் அதனை ஒப்புக்கொள்வது ஓட்டையை அடைக்காமல் கப்பலில் ஏறும் நீரை இறைப்பதாகும்!"**

www.padippakam.com

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

**அரசியல் தொடர்**

**அற்புதன் எழுதுவது**

# அகதிமுகாம்களில் மனிதவேட்டை

வன்னியில் மாங்குளம் முகாம் பால்ராஜ் தலைமையில் புலிகள் நடத்திய தாக்குதல் வெற்றிகரமாக முடிந்திருந்தது.

முகாமில் இடிபாடுகளுக்கிடையே கைப்பற்றப்பட்ட ஆயுதங்களை கணக்கிட்ட புலிகளுக்கு திருப்தி ஏற்படவில்லை.

ஒருபகுதி ஆயுதங்கள் முகாமில் எங்கோ மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று சந்தேகித்தனர்.

முகாம் தாக்குதலின்போது தப்பிச் சென்ற படையினரை தேடியழிக்கும் நடவடிக்கையும் நடந்து கொண்டிருந்தது.

மாங்குளத்திலிருந்து தப்பிய படையினருக்கு வவுனியாவுக்கு தப்பிச் செல்வதற்கான திசையறி கருவியாக மாறியது லக்சபானா மின்சார லைன். அந்த லைனை வைத்தே பாதை கண்டுபிடித்து வவுனியாவுக்கு சென்றனர்.

அந்த விடயம் புலிகளுக்கு தெரியவந்து விட்டது. சேமமடுப் பகுதியில் வந்து மிதந்து தான் படையினர் வவுனியா செல்ல வேண்டும்.

சேமமடுப் பகுதியில் புலிகளின் அணி ஒன்று காத்திருந்தது. அவர்களது கண்ணில் பட்டனர் ஐந்து இராணுவத்தினர்.

ஆயுதங்களோடு வந்த அவர்களை மறித்த புலிகள் கைகளை தலைக்குமேலாக உயர்த்துமாறு கூறினார்கள்.

புலிகளிடம் மாட்டினால் சித்திரவதை செய்வார்கள் என்று நினைத்த ஒரு இராணுவவீரர் சடுதியாக ஒரு காரியம் செய்தார்.

கைக்குண்டின் கிளிப்பை உருவி எறிந்து விட்டு கைக்குண்டை வயிற்றோடு அணைத்தபடி தரையில் குப்புறப்படுத்துவிட்டார்.

கைக்குண்டு வெடித்து அவர் பலியானதுடன், அருகில் நின்ற புலி ஒருவரும் பலியானார்.

ஏனைய புலிகள் தரையோடு படுத்து நிலை எடுத்தனர். அந்த சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நான்கு இராணுவத்தினரும் தப்பிச்சென்று விட்டனர்.

### அதிகாரி கைது

பன்றிக்கெய்த குளம் என்ற இடத்திலுள்ள பாடசாலை ஒன்றில் புகையிலை சிப்பங்கள் அடுக்கிவைக்கப்பட்டிருந்தன.

மாங்குளம் சமரில் சிக்கி கால் இழந்த அதிகாரி ஒருவரும், அவருக்கு பாதுகாப்பாக படையினர் சிலரும் அப்பாடசாலைக்குள் பதுங்கி இருந்தனர்.

தேடுதல் நடத்திய புலிகள் அவர்களைக் கைது செய்தனர். அதிகாரியிடம் ஆயுதங்கள் பற்றிய தகவல்களைக் கேட்டனர்.




தன்னை சுட்டுக் கொன்றுவிடுமாறு அந்த அதிகாரி புலிகளிடம் கோரினார்.

மாங்குளம் முகாமுக்குள் இருந்த கிணறு ஒன்றுக்குள் ஆயுதங்களை தூக்கிப் போட்டுவிட்டு, அவை தெரியாமல் இருக்க பலியான படையினரின் உடல்களையும் மேலே போட்டுள்ளதாக அந்த அதிகாரி தகவல் கொடுத்தார். ஆயுதங்கள் புலிகளால் கைப்பற்றப்பட்டன.

பின்னர் அவரை சிகிச்சை கொடுக்க புலிகள் அழைத்துச் சென்றனர். சிகிச்சை பயனற்றுப்போனதால் அதிகாரி மரணமானார்.

### இராணுவ நகர்வு

மாங்குளம் முகாம் தாக்கப்பட்டதும் வவுனியாவில் இருந்து இராணுவம் நகர்ந்து




பூந்தோட்டம் அருகே முகாம் ஒன்றை அமைத்திருந்தது.

மாங்குளத்தில் இருந்து தப்பி வரும் படையினருக்கு உதவுவதற்கே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இந்த முகாம் அமைப்பதற்காக வந்த இராணுவத்தினரால் 9 வீடுகள் இடிந்து தரைமட்டமாக்கப்பட்டன.

சிவபாதம், ஜனார்த்தனி, கனகசபாபதி, சற்குணதாஸ், சோதிமதி, உதயகுமார், நடராசா, சிவலோகநாதன், சந்திரன் ஆகியோரே தங்கள் வீடுகளை இழந்தனர்.

பூந்தோட்ட இராணுவ முகாமின் காரியாலயம் பூந்தோட்டம் பாடசாலைக்கு முன்பாக பகலில் இயங்கியது. இரவு நேரத்தில் கன்னிச்சாமி என்பவரது வீட்டில்தான் முக்கிய அதிகாரி தங்குவார். அதுபற்றிய பல்வேறு வதந்திகளும் பரவியிருந்தன.

இக்காலகட்டத்தில் நடந்த இன்னொரு சம்பவமும் மக்களை அச்சுறுத்தியது.

வவுனியா புளியடிப் பிள்ளையார் கோவிலடியில் பொலிஸ் காவலரண் புலிகளால் தாக்கப்பட்டது. நாலு பொலிசார் பலியாகினர்.

இதனையடுத்து அப்பகுதியில் சிவசோதி என்பவரும், அவரது குடும்பமும் இரவோடு இரவாக காணாமல் போனது.

சிவசோதி அவர் மனைவி உட்பட ஐந்துபேர் காணாமல் போயினர்.

விடிந்து பார்த்தபோது அவர்கள் படுத்திருந்த பாய் அப்படியே கிடந்தது. தலையணைக்கு கீழே சிவசோதியின் மனைவி கழற்றி வைத்திருந்த நகை அப்படியே இருந்தது. தூங்கச் செல்ல முன்பாக நகையை கழற்றி வைத்துவிட்டு தூங்குவது அவர் வழக்கம்.

குடும்பத்தோடு அவர்களை காணாமல் போகச் செய்தது யார்? என்பதை பொதுமக்கள் ஊகித்துக் கொண்டாலும் பயம் காரணமாக வெளியே சொல்லவில்லை.

### கிழக்கில் அநியாயம்

இரண்டாம் ஈழப்போர் மூண்டபின்னர் ஏற்பட்ட அனர்த்தங்களால் தங்கள் வீடுவாசல்களை விட்டு வந்த அம்பாறை மாவட்ட தமிழர்கள் பலர் பொத்துவில் அகதி முகாமில் தங்கியிருந்தனர்.

1990 ஆகஸ்ட்மாதம் இரண்டாம் திகதி பொத்துவில் அகதி முகாம் திடீரென்று பாதுகாப்பு படையினரால் முற்றுகையிடப்பட்டது.

பொலிசாரும், விசேஷ அதிரடிப் படையினரும் இணைந்தே முற்றுகை நடத்தினர்.

முகாமிலிருந்தோர் அஞ்சி நடுங்கினார்கள். குழந்தைகள் பயத்தில் வீறிட்டு அழுதன.

முகாமில் முதியவர்கள், குழந்தைகள், பெண்கள் உட்பட 150பேர்வரை தங்கியிருந்தனர்.

அத்தனைபேரையும் முகாமுக்கு அழைத்துச் சென்றனர். அதில் 30 பேரை மட்டும் விசாரித்துவிட்டு விடுதலை செய்தனர்.

அந்த முப்பது பேரில் படையினருக்கு தகவல் கொடுப்போர் சிலரும் இருந்தனர்.

மீதி 120 பேரும் முகாமில் வைத்து விசாரிக்கப்பட்டனர். இரவிரவாக அவர்களது கூக்குரல்கள் கேட்டவண்ணம் இருந்தன என்று உறவினர்கள் கூறினார்கள்.

இக்கைதுகள் நடந்த இரண்டாவது நாள்; கைதானவர்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த பகுதியில் இருந்து பெரும் புகை கிளம்பியதாகவும், கொல்லப்பட்டவர்களின் உடல்கள் எரிக்கப்பட்டனவா? அல்லது உயிரோடு எரிக்கப்பட்டனரா? என்ற கேள்விகளுக்கு இதுவரை விடை கிட்டவில்லை.

இந்த நெஞ்சை உலுக்கும் மனித வேட்டை நடந்தும் பிரேமதாசா அரசு நீதி விசாரணை நடத்த முன்வரவில்லை.

யாரும் தம்மால் தடுத்துவைக்கப்படவில்லை என்று கைவிரித்தது விசேஷ அதிரடிப்படை.

### வந்தாறுமூலையில்

பொத்துவிலில் படுகொலை வேட்டை நடந்த ஒரு மாதத்தின் பின்னர் இன்னொரு கொடூர வேட்டை வந்தாறுமூலையில் நடந்தது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் வந்தாறுமூலையில் உள்ள கிழக்கு மாகாண பல்கலைக்கழக அகதி முகாமிலும் தமிழ் அகதிகள் தங்கியிருந்தனர்.

1990 செப்டம்பர் 5ம் திகதி புழுதியைக் கிளப்பியபடி விரைந்து வந்த இராணுவ ஜீப் வண்டிகள் அகதிமுகாமின் முன்னால் நின்றன.

சீருடைகளுடனும், சீருடைகள் இன்றியும் ஆயுதங்களுடன் இராணுவத்தினர் வரிசையாக ஜீப்புக்களில் இருந்து உதிர்ந்தனர்.

வரும்போதே வேட்டைக்கான திட்டத்தோடு வந்ததால், இரண்டு பஸ்வண்டிகளும் அவர்கள் பின்னாலேயே வந்து தரித்து நின்றன.

இராணுவத்தினரோடு முகமூடிகள் அணிந்த தலையாட்டிகளும் வந்திருந்தனர்.

இராணுவத்தினருக்கு தலைமை தாங்கியவர் கப்டன் முனாஸ்.

ஆண்கள் தனியாகவும், பெண்கள் தனியாகவும் நிற்குமாறு கட்டளையிட்டனர்.

அதன்படி வரிசையாக நின்ற ஆண்களை முன்னால் வருமாறு கட்டளையிட்டனர். அவர்கள் நடந்து செல்லும்போது முகமூடிகள் தலையை ஆட்டியவர்கள் உட்பட 158 பேர் கைது செய்யப்பட்டனர்.

தங்கள் கணவர்மாரை கைதுசெய்ய வேண்டாம் என்று மனைவிமார் கதறியழுதனர். விழுந்து புரண்டு மன்றாடினார்கள்.

கைது செய்யப்பட்டவர்களின் கைகள் பின்புறமாக கட்டப்பட்டன. அதனைப் பார்த்ததும் அகதி முகாமில் இருந்த உறவினர்கள் மரண ஓலம் எழுப்பினார்கள். மார்பில் அடித்து அரற்றினார்கள்.

எதனையும் காதில் வாங்காமல் அத்தனை பேரையும் பஸ் வண்டிகளில் திணித்துக் கொண்டு சென்றனர்.

"விசாரணை நடத்திவிட்டு உடனே திருப்பி அனுப்பிவிடுவோம்" என்று போகும்போது கூறி விட்டுப்போகவும் மறக்கவில்லை.


புலிகளின் தளபதி பால்ராஜ்

அப்படிக் கொண்டு செல்லப்பட்டவர்களில் பதினொரு வயதுச் சிறுவனும் இருந்தான். அந்தச் சிறுவனையாவது விடுங்கள் என்று கெஞ்சினார்கள். அதற்கும் செவிசாய்க்கவில்லை.

### மறுப்பு வந்தது

செப்டம்பர் 07ம் திகதி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன மாலைச் செய்தியில் "சந்தேகத்தின்பேரில் 148 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்" என்று அறிவித்தது.

## சுற்றிவளைக்கப்பட்ட கிராமம்

ஆனால் அதன்பின்னர் பாதுகாப்பு அமைச்சு விடுத்த அறிக்கையில் 05.09.90ல் 32 பேர் மட்டுமே கைது செய்யப்பட்டதாகவும், 24 மணி நேரத்திற்குள் அவர்களும் விடுதலை செய்யப்பட்டதாகவும் கூறப்பட்டது.

பதினொரு வயதான வி.விஜயரத்னம், எஸ்.சுதாகரன் (16) ஆகியோரது பெயர்களும் விடுதலையானவர்கள் பட்டியலில் அரசால் வெளியானது. ஆனால் அவர்கள் இருவரும் வீடு திரும்பவே இல்லை.

158 பேரும் சித்திரவதையின் பின்னர் படுகொலை செய்யப்பட்டனர்.

இந்த படுகொலை வேட்டைக்கு பொறுப்பான நான்குபேர் பின்னர் அடையாளம் காணப்பட்டனர்.

செங்கலடி இராணுவ முகாமைச் சேர்ந்த கப்டன் களு ஆராய்ச்சி, மட்டுநகர் புலனாய்வு பிரிவைச் சேர்ந்த டயஸ் ரிச்சேர்ட், வாழைச்சேனை இராணுவ முகாம் கொமாண்டர் மேஜர் மஜீத், மட்டுநகர் முகாமைச் சேர்ந்த மேஜர் மொஹான் சில்வா ஆகியோரே இனம் காணப்பட்டனர்.

இவர்களில் டயஸ் ரிச்சேர்ட் தன்னை ஒரு முஸ்லிமாக காண்பிப்பதற்காக தன் பெயரை கப்டன் முனாஸ் என்று கூறிக்கொண்டு பிரபலமானவர்.

பொத்துவில் அகதி முகாம், வந்தாறுமூலை அகதிமுகாம் படுகொலைகளை மூடி மறைக்கவே அரசு முயற்சித்தது.

சர்வதேச மன்னிப்புச் சபை உட்பட பல அமைப்புக்கள் அரசை கடுமையாக விமர்சித்தன.

அதனால் வேறு வழியின்றி வந்தாறுமூலை அகதி முகாம் தொடர்பான விசாரணைகள் நடந்தன.

அப்போது பிரேமதாசா அரசுக்கு மனித உரிமைகள் பணிக்குழு என்ற அமைப்பு இருந்தது.

(அந்தக் குழுவை கலைத்து விட்டே மனித உரிமை ஆணைக்குழு என்ற பெயரில் அமைப்பை நிறுவியது சந்திரிக்கா அரசு.)

மனித உரிமைகள் பணிக்குழு சற்றுச் சுதந்திரமாக செயற்பட்டது. கிழக்கில் பல படுகொலை வேட்டைகள் நிகழ்ந்தமையால் ஒரு சிலவற்றிலாவது உண்மையைக் கூறியாகவும் வேண்டுமே. அதனால் மனித உரிமைகள் பணிக்குழுவினர் வந்தாறுமூலையில் காணாமல் போனோரின் உறவினர்களிடம் வாக்குமூலங்களை பதிவு செய்தனர்.

மனித உரிமைகள் பணிக்குழுவின் தலைவர் ஜே.எல்.ஏ.சோசாவின் கையொப்பமுடன் மூன்று பக்க அறிக்கை ஒன்று அரசுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

இதிலும் ஒரு வேடிக்கை என்ன தெரியுமா? சம்பவம் நடந்தது 1990 செப்டம்பரில். அது தொடர்பான மூன்று பக்க அறிக்கை வெளியிட நான்கு ஆண்டுகள் தேவைப்பட்டன. 1994 ஆகஸ்ட் மாதத்தில் தான் மனித உரிமை பணிக்குழுவின் அறிக்கை வெளியானது.

ஆட்சிமாற்றம் நிகழவிருந்த சந்தர்ப்பத்தில்தான் கடந்தகால ஆட்சியில் நடந்த படுகொலைகள் பற்றிய அறிக்கையை துணிந்து வெளியிட முடிந்தது.

அந்த அறிக்கையிலும் கப்டன் முனாஸ் உட்பட இராணுவத்தினர் பலர் சம்பவத்தை நேரில் கண்ட பல்கலைக்கழக அதிகாரிகளால் அடையாளம் காணப்பட்டனர் என்பதும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அந்த அறிக்கை பத்திரிகைகளிலும் வெளியாகியது. காணாமல்போன 158 பேரின் குடும்பத்தினருக்கு மரண அத்தாட்சிப்பத்திரம் வழங்கி உரிய நஷ்டஈடு கொடுக்குமாறு சிபாரிசு செய்யப்பட்டது.

இன்றுவரை அந்த அறிக்கை குப்பைக்கூடையில்தான் இருக்கிறது.

1994ல் பொதுஜன முன்னணி அரசாங்கம் பதவிக்கு வந்த புதிதில் தென்னிலங்கையில் பொல்கொட வாவி உட்பட பல இடங்களில் தமிழர்களது உடல்கள் வீசியெறியப்பட்டு கிடந்தன.

அந்த விடயம் புதிய அரசுக்கு தலைவலியாக மாறியது அதனால் தீவிரமாக ஆராய்ந்தபோது திடுக்கிடும் விபரங்கள் வெளியாகின.

கொழும்பு புல்லர்ஸ் வீதியில் இருந்த விசேஷ அதிரடிப்படை முகாமில் வைத்தே கொலைகள் நிகழ்ந்தன. சந்தேகத்தில் கைதானவர்கள் கொல்லப்பட்டு ஆறுகளில் வீசியெறியப்பட்ட உண்மை அம்பலமானது.

இப் படுகொலைகளுக்காக கைது செய்யப்பட்டவர்களில் முக்கியமானவர் கப்டன் முனாஸ்.

வந்தாறு மூலையில் தொடங்கி பொல்கொட ஆறுவரை அவரது கைகள் நீண்டுள்ளன என்பது உறுதியானது.

ஆனால் நீதிமட்டும் கிட்டவில்லை.

பொல்கொட வாவி விவகாரத்தில் கைதான கப்டன் முனாஸ் உட்பட அனைவரும் விடுதலையாகிவிட்டனர்.

மனித உரிமைகள் பணிக்குழுவும் இந்த ஆட்சியில் கலைக்கப்பட்டு, மனித உரிமை ஆணைக்குழு கொண்டுவரப்பட்டது.

அந்தப் பணிக்குழுவாயினும் காணாமல் போனோரின் உறவினர்களிடம் வாக்குமூலங்களாயினும் பெற்றிருந்தது.

இன்றைய ஆணைக்குழுவால் அதுகூட முடியாமல் உள்ளது.

### செப்டம்பர் 09

மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள சத்துருக் கொண்டான் கிராமம் 1990 செப்டம்பர் 09ம் திகதி சுற்றிவளைக்கப்பட்டது.

சீருடையுடனும், சிவில் உடையுடனும் சென்றவர்கள் மாலை 5.30 மணியளவில் கிராமத்தை சுற்றிவளைத்தனர்.

வீடுகளில் உள்ள அனைவரையும் உடனடியாக வீதிகளுக்கு வருமாறு கட்டளையிடப்பட்டது. கட்டளையை மீறுபவர்கள் வீடுகளுக்குள் வைத்தே சுட்டுக்கொல்லப்படுவார்கள் என்று எச்சரிக்கப்பட்டனர்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

## அலசுவது– இராஜதந்திரி

செம்மணி புதைகுழிகளை தோண்டுங்கள் என்று கேட்பதும், இதோ தோண்டுகிறோம் என்று கூறப்படுவதுமாக மூன்று மாதங்கள் உருண்டோடிவிட்டன.

மூன்று மாதங்களுக்குள் செம்மணியில் புதைகுழிகள் இருப்பதாகக் கூறப்படும் பகுதியில் பல மர்மமான சம்பவங்கள் நடந்திருப்பதாக சில தகவல்கள் கூறுகின்றன.

கோப்பாய் பகுதியில் இருந்து முரசுக்கு பல கடிதங்கள் வந்துள்ளன. செம்மணிப் பகுதிக்கு மிக அருகில் உள்ளதே கோப்பாயாகும்.

செம்மணிப் பகுதியில் பொதுமக்கள் நடமாட்டத்துக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. ஆனால் பாதுகாப்புக்கு எவ்விதமான ஏற்பாடும் செய்யப்படவில்லை.

தெரிவித்த, சர்வதேச நிபுணர்குழுவுடன் கூடிய விசாரணையை கோரத்தவறியுள்ள தமிழ்க் கட்சிகள், அரசிடமே தொடர்ந்தும் கோரிக்கை விடுத்து வருகின்றன.

சூரியக்கந்தைப் புதைகுழியை தோண்டும்போது குறுக்கிடாத சட்ட விதிகளும், மரபுகளும், தாமதங்களும் செம்மணிப் புதைகுழி விவகாரத்தில் மட்டும் ஏன் குறுக்கிடுகின்றன என்று சாதாரண மக்களே கேட்கின்றனர்.

இவ்வாறான பின்னணியில்தான் முரசுக்கு கிடைத்துள்ள தகவல்களும் அதிர்ச்சிதரத்தக்கதாக அமைந்துள்ளன.

யாழ் குடாநாட்டில் செயற்பட்டுவரும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் வெளியிட்டுள்ள அறிக்கையிலும் சந்தேகங்கள் தெரிவிக்கப்பட்டுள்ளன.

கொல்லப்பட்டுவிட்டதாக சர்வதேச மன்னிப்புச் சபை கூறியதை அடித்து மறுத்து ஆட்சேபம் தெரிவித்தவர்கள் ஆட்சியாளர்கள்.

இந்நிலையில் எலும்புக்கூடுகள் மீட்கப்பட்டால் அரசின் 'இமேஜ்' சிதைந்துபோகும்.

அதுமட்டுமல்லாமல், புதைகுழி விவகாரத்தில் ராஜபக்ஷ கூறியது உண்மை என்பது உலகுக்கு தெரிந்துவிட்டால், மேற்கொண்டு அவர் கூறப்போகும் தகவல்களுக்கும் மதிப்பளித்து நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும்.

பல உயர் அதிகாரிகள்மீது குற்றம் கூறப்படலாம். அந்த அதிகாரிகள் அரசின் யுத்த வெற்றி கனவுக்கு அவசியம் தேவைப்படுகிறவர்களாகவும் இருக்கக்கூடும்.

# வாகன வெளிச்சங்கள் நள்ளிரவில் புகை!

கொழும்பில் பத்திரிகையாளர் மாநாட்டில் அமைச்சர் மங்கள சமரவீர, 'செம்மணி பகுதிக்கு பாதுகாப்பு வழங்கப்பட்டுள்ளதாக' தெரிவித்தார். அவ்வாறு அவர் கூறி கிட்டத்தட்ட ஒரு மாதகாலமாகியும் பாதுகாப்பு வழங்கப்படவில்லை.

முக்கியமான விவகாரங்கள் அமைச்சர்கள் மற்றும் தமிழ்க் கட்சிகள் கூறும் உத்தரவாதங்களை கொட்டை எழுத்தில் வெளியிடும் பத்திரிகைகள், அந்த உத்தரவாதங்கள் நடைமுறைக்கு வருகிறதா என்பதையும் கண்காணித்து மக்களுக்கு உண்மையைக் கூறவேண்டும். இல்லையெனில் குறிப்பிட்ட சாரார் மக்களை திசைதிருப்ப பத்திரிகைகளும் துணை போவதாகவே அமையும்.

### முரசுக்கு வந்த கடிதங்களில் ஒன்று

"....செம்மணிப் பகுதியில் உப்பளத்தில் இரவு நேரக் கடமையில் இருந்த காவலாளிகள் இரவுக் கடமைக்கு வரக்கூடாதென்று கேட்கப்பட்டனர். புதைகுழிகள் இரவோடு இரவாக தோண்டப்பட்டு, எலும்புக் கூடுகள் எரிக்கப்பட்டுவிட்டன.

இனி வருபவர்கள் வந்து கற்பனைக்கு தோண்டுவதும், அரசுக்கு சாதகமான அறிக்கை விடுவதும்தான் நடக்கப்போகிறது..."

செம்மணிப் புதைகுழி தொடர்பாக அரச தரப்பு கூறிய பல உத்தரவாதங்கள் தலைப்புச் செய்திகளாக பத்திரிகைகளில் இடம்பெற்றிருந்தன. ஆனால் இன்றுவரை அவற்றில் ஒன்றுதானும் நிறைவேற்றப்பட்டதில்லை.

அரசு, படைகள், தமிழ்க் கட்சிகள் ஆகிய மூன்று தரப்புக்களும் செம்மணி புதைகுழி விவகாரத்தில் உண்மைகள் மறைக்கப்படுவதையே உள்ளூர விரும்புகின்றன.

எனவே, புதைகுழி விவகாரத்தை அமுக்குவதற்கு ஆட்சியாளர்கள் போதிய கால அவகாசம் பெற்று வருவதை தமிழ்க் கட்சிகள் அம்பலப்படுத்த முன்வரவில்லை.

'நாம் அடிப்பது போல அடிப்போம், நீங்கள் அழுவதுபோல அழுங்கள்' என்பது போன்றனவே செம்மணி விவகாரத்தில் தமிழ்க் கட்சிகள் விடும் சம்பிரதாய அறிக்கைகளும் விசாரணை கோரல்களுக்குமாகும்.

அரசின் கால இழுத்தடிப்பில் சந்தேகம்

செம்மணிப் பகுதியில் இரவு நேரத்தில் சந்தேகத்துக்கிடமான வாகன நடமாட்டங்களை காணக்கூடியதாக இருந்ததாகவும், வாகன வெளிச்சங்கள் காணப்பட்டதாகவும் மக்கள் கூறியதாக அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

அந்த அறிக்கை தேசிய சமாதானப் பேரவைப் பணிப்பாளர் ஜெகான் பெர்ணாண்டோவுக்கும் அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

முரசுக்கு வந்துள்ள கடிதம் ஒன்றில், "இதுவரை தோண்டி எடுத்து எரித்த எலும்புக்கூடுகள் போக, மேலும் பல எலும்புக்கூடுகள் செம்மணிப் பகுதியில் ஆங்காங்கே புதைக்கப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகம் தோண்டியவர்களுக்கு இருக்கிறது. அதனால்தான் கால அவகாசம் எடுத்து இரவிரவாக தோண்டித் தோண்டித் தேடுகிறார்கள் வாகன வெளிச்சத்தில்தான் தோண்டித் தேடுதல் தொடர்கிறது" என்று கூறியுள்ளது


இன்னொரு கடிதத்தில், "இரவோடு இரவாக தோண்டியெடுத்த எலும்புக்கூடுகளை பிறிதொரு இடத்திற்கு கொண்டுசென்று எரித்துவிட்டனர். புகைமூட்டம் தெரிந்தது. காற்றில் கெட்ட வாசனை அடித்தது. தோண்டிய அடையாளம் தெரியாமல் இருக்க தண்ணீர் பாய்ச்சப்பட்டு தடயங்கள் மறைக்கப்பட்டுள்ளன!" என்று திடுக்கிடும் தகவல் தெரிவிக்கப்பட்டுள்ளது.

10.08.98 அன்று கொழும்பில் பத்திரிகையாளர் மாநாடு நடந்தது. அதில் புதைகுழி விவகாரம் தொடர்பாக இராணுவ பேச்சாளரிடம் பத்திரிகையாளர்கள் கேள்வி தொடுத்திருந்தனர். "விசாரணைக்குழு விரைவில் அங்கு செல்லும். ஆனால் எப்போது செல்லும் என்று தெரியாது" எனப் பதில் கூறப்பட்டது.

"யாழில் மழைக்காலம் ஆரம்பமாகப் போகிறதே, என்ன செய்யப்போகிறீர்கள்?" என்று கேட்கப்பட்டபோது, எவ்வித பதிலும் கூறப்படாமலேயே 'பத்திரிகையாளர் மாநாடு இத்தோடு முடிந்தது' என்று கூறிவிட்டுப் போய்விட்டனர்.

செம்மணியில் புதைகுழிகளுக்குள் எலும்புக்கூடுகள் கண்டெடுக்கப்பட்டால், அதன்பின்னர் ஜனாதிபதி சந்திரிக்கா அரசின் மனித உரிமை, சமாதான முழக்கங்கள் எவ்விதத்திலும் எடுபடவே மாட்டாது.

யாழில் காணாமல்போன 600ற்கு மேற்பட்டோர் படையினரால்



புதைகுழி விவகாரம் படைத்தரப்பைவிட ஆட்சியாளருக்கே மிகப் பாதகமானதாகும். சூரியகந்தை புதைகுழி, பட்டலந்த வதைமுகாம் என்று படையினர் தொடர்பாக இன்றைய ஆட்சியாளரே ஏராளமான புகார்களை கூறியுள்ளனர்.

எனவே, ஆட்சியாளரது நோக்கம் படையினரை பாதுகாப்பதல்ல. தமது ஆட்சியில் படையினர் ஒழுங்காகத்தான் நடந்துள்ளனர் என்று உலகை நம்பவைத்து தமது இமேஜை காத்துக்கொள்வதும், போரில் ஈடுபட்டுள்ள படையினரை உற்சாகம் குறையாமல் வைத்திருந்து தமது நலன் சார்ந்த யுத்தத்தில் வெற்றி பெறுவதுமேயாகும்.

இந்த அரசு பதவிக்கு வந்த சூட்டோடு பொல்கொட வாவியில் தமிழ் இளைஞர்களது பிணங்கள் மிதந்தன. தென்னிலங்கையின் சில பகுதிகளில் தமிழ் இளைஞர்களது உடல்கள் எரிக்கப்பட்ட நிலையில் கிடந்தன.

இது தொடர்பாக விசேஷ அதிரடிப்படையைச் சேர்ந்த கப்டன் முனாஸ் உட்பட பலர் கைதுசெய்யப்பட்டனர்.

அக்கைது தொடர்பாக பத்திரிகையாளர் மாநாடுகள் நடத்தி, மனித உரிமைகள்மீது நாட்டமுள்ள அரசு என்ற பெயரையும் தட்டிக்கொண்டனர் ஆட்சியாளர்கள்.

ஐ.தே.கட்சிக்கு சார்பான அதிரடிப்படையினரின் செயல் போலவும் அதனைச் சித்தரித்தனர்.

குறிப்பிட்ட சம்பவத்தில் கைதானவர்கள் தற்போது விடுதலையாகிவிட்டனர். வழக்கும் தொடுக்கப்படவில்லை. உலகம் அறிய கைது செய்துவிட்டு, காதும் காதும் வைத்ததுபோல் விடுதலை செய்துவிட்டனர்.

ஜே.வி.பி. கால பட்டலந்த வதைமுகாம் தொடர்பாக இப்போதும் பேசிவரும் ஆட்சியாளர்கள், சமீபத்தில் சில பொலிஸ் அதிகாரிகள்மீதும் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்கிவருகின்றன.

களுத்துறை சிறைப்படுகொலைகள், கிழக்கில் கோணேஸ்வரி என்னும் தாய்க்கு நிகழ்ந்த கொடூரம், மற்றும் யாழில் நடந்த பாலியல் வல்லுறவுச் சம்பவங்களும் கொலைகளும்.... என்று வெளியே தெரிந்த பலவற்றுக்குக்கூட இதுவரை உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

கிருஷாந்தி விடயத்தில் எடுத்த நடவடிக்கையை கூறி ஏனைய சகல அநீதிகளையும் வெள்ளையடித்து மறைக்கவே முயற்சிக்கப்பட்டது.

புதைகுழி விவகாரத்தில் மட்டுமல்ல, யாழில் கண்ணிவெடிகளை அகற்றும் நடவடிக்கையில்கூட ஆட்சியாளர்கள் போதிய ஒத்துழைப்பு வழங்கவில்லை. ஐக்கிய நாடுகள் சபையின் அபிவிருத்திக்கான நிறுவனத்தைச் சேர்ந்தோர் யாழில் கண்ணிவெடிகளை அகற்றுவதற்காக காத்திருந்து களைத்துப்போனார்கள்.

இறுதியில் பொறுமை இழந்து அரசுமீது நேரடியாக குற்றம் சாட்டியும் இருந்தனர்.

கண்ணிவெடிகளால் யாழில் பலர் அவயவங்களை இழந்துள்ளனர். சில பகுதிகளில் மக்கள் நடமாடவே அஞ்சுகின்றனர். கால்நடைகளும் பலியாகியுள்ளன.

மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த இப்பிரச்சனையில், அரசாங்கம் தானாக அக்கறைகாட்டத் தவறியிருந்தது.

மீளக் குடியேறவருமாறு மக்களை அழைத்த அரசாங்கத்திற்கு, அங்கு மக்கள் மாளக்காரணமான சூழல்களை இல்லாதொழிக்கும் கடப்பாடு இருக்கிறது.

எனினும் அரசு அலட்சியம் செய்த மேற்படி விடயத்தில் ஐ.நா.சபை நிறுவனம் தாமாக முன்வந்து உதவியும்கூட, அனுமதி

# எலும்புகள் எரிகிறதா?

இவ்வாறான நடவடிக்கை படையினர் தரப்பில் பலத்த அதிருப்திகளை தோற்றுவிக்கும். ஆட்சியாளர்மீது கசப்புணர்வு திரும்புவதற்கு வழியமைத்தும் விடலாம்.

கிணறு வெட்டப் பூதம் கிளம்பியது என்ற கதை பொய்யாக இருக்கலாம். ஆனால் செம்மணியில் புதைகுழியை நியாயமான முறையில் ஆட்சியாளர் உடனே தோண்டியிருந்தால், பல்வேறு பூதங்கள் கிளம்பி ஆட்சியாளரது கனவுகளையே ஆட்டம் காணச் செய்திருக்கும்.

எனவே, சர்வதேச அரங்கில் இன்றைய ஆட்சியாளரின் 'இமேஜ்', உள்நாட்டில் இராணுவத்தீர்வு முனைப்புக்கு சமாதான சாயம் பூசும் முயற்சி ஆகிய இரண்டுக்கும் சவாலாக மாறியுள்ளது செம்மணிப் புதைகுழி.

இத்தனை சூட்சுமங்கள் இருக்கக்கூடியதாக, 'ஒன்றும் தெரியாத பாப்பா உள்ளே போட்டாளாம் தாழ்ப்பா' என்ற கதையாக தமிழ்க் கட்சிகள் அரசிடம் கோரிக்கை விடுத்து வருகின்றன.

செம்மணி விவகாரத்தில் ராஜபக்ஷ கூறியது பொய் என்று நிரூபிக்கவே ஆட்சியாளர்கள் ஆர்வம் காட்டுவர். அந்த ஆர்வம் எத்தகைய வழிகளில் வெளிப்படும் என்பதையே உற்று நோக்க வேண்டும்.

கொழும்பு புல்லர்ஸ் வீதியில் இருந்த விசேஷ அதிரடிப்படை முகாம் தமிழ் இளைஞர்களை விசாரித்து தீர்த்துக்கட்டும் வதைமுகாமாக இருந்துவந்தது.

தாம் ஆட்சிக்கு வராதபோது இருந்த பட்டலந்த முகாம் தொடர்பான தகவல்களை தோண்டியெடுத்து துரித நடவடிக்கை எடுத்துவரும் ஆட்சியாளர், தாம் ஆட்சிக்கு வந்தபின்னரும் தொடர்ந்து புல்லர்ஸ்வீதி முகாம் தொடர்பாக நடவடிக்கை எடுக்கத் தவறியுள்ளனர்.

எனவே, பொல்கொட வாவி கொலைகள், புல்லர்ஸ் வீதி வதைமுகாம் விவகாரங்கள் மறைக்கப்பட்ட நிலையில், அவற்றைவிட பல மடங்கு பாரதூரமான செம்மணி புதைகுழி விடயத்தில் நீதியான நடவடிக்கையை எதிர்பார்ப்பது இயலாத ஒன்றேயாகும்.

பொல்காட வாவி கொலைகளில் சம்பந்தப்பட்டதாக கைதானவர்களுக்கு என்ன நேர்ந்தது? குறிப்பிட்ட கொடூரங்களுக்கு எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன? போன்ற விபரங்களைமிட்டு கேள்வி எழுப்ப எந்தவொரு தமிழ்க் கட்சியோ, மனித உரிமை அமைப்புக்களோ முன்வரவில்லை.

இவ்வாறான மௌனங்கள்தான் தொடர் மூடிமறைப்புக்களுக்கான தைரியத்தை

கொடுக்காமல் இழுத்தடிப்பு நிகழ்ந்துள்ளது. இதற்கு பாதுகாப்பு காரணத்தையோ, வேறு காரணங்களையோ கூறி நியாயப்படுத்தவும் முடியாது. அலட்சியப்போக்கு மட்டுமே காரணமாகும்.

எனவே, தமிழ் மக்கள் மீதான மனித உரிமை மீறல்கள் விடயங்களில் இன்றைய ஆட்சியாளர்கள் நம்பிக்கைதரத்தக்க நடிவடிக்கைகள் எதனையும் இதுவரை எடுக்கத் தவறியுள்ளனர். அதேசமயம் அவற்றை 'ஆறின கஞ்சி பழம் கஞ்சி' என்றாக்கி, கைகழுவும் அணுகுமுறைகளை காண்பித்தும் உள்ளனர்.

இத்தகைய நிலையில் செம்மணி புதைகுழி தொடர்பாக வெளியாகும் தகவல்கள் சந்தேகங்களை தோற்றுவிக்கின்றன. கூடவே இனி குழிகளை தோண்டுவதால் பயன் இருக்குமா? என்ற கேள்வியும் எழுகிறது.

பகிரங்கமாக தோண்டிப் பார்க்கையில் எதுவும் இல்லையென்றால் அதுவும் அரசுக்குத்தான் சாதகம். "பார்த்தீர்களா, இப்படித்தான் அபாண்டமாக பழிபோடுகிறார்கள். எங்கள் ஆட்சியில் புதைகுழியாவது, கிடையவே கிடையாது. அறுநூறு பேர் காணாமல்போன விவகாரமும் இப்படித்தான்" என்று கூறிவிடலாம்.

## சந்திக்கு வராத சங்கதிகள் — நக்கீரன்

யாழ் மாநகர சபை ஆணையாளராக இருந்தவர் சிவஞானம்.

மாநகரசபையில் ஊழல் என்று இவரை ஒபரேய் தேவன் சுட்டார். இவர் தப்பிக் கொண்டதால், 'எச்சரிக்கை செய்யவே சுட்டோம்' என்று ஒபரேய் தேவன் கூறியது வேறு விஷயம்.

வடக்கு-கிழக்கு மாகாணசபை இடைக்கால நிர்வாகத்திற்கு இவரது பெயரையே முதல் பெயராக போட்டனர் புலிகள்.

இவர் ஜே. ஆருக்கும் மறைமுகமாக நெருக்கமானவர் என்பதை கண்டுபிடித்த பிரபாகரன், இவரது பெயரை மாற்றி வேறு பெயர் கொடுக்க, ஜே. ஆர். மறுக்க இடைக்கால நிர்வாக சபையே இறுதியில் இல்லாமல் போனது.

ஈ.பி. ஆர்.எல்.எ஼ப். இவரை வேட்டையாட துரத்த, அதிலிருந்தும் தப்பினார். ஈ.பி. ஆர். எல்.எ஼ப். இயக்கத்தின் இன்றைய அறிக்கைகளின்படி நோக்கினால் அன்று ஈ.பி. ஆர்.எல்.எ஼ப். செய்ததும் மிலேச்சத்தனம்தான். அது போகட்டும்.

தற்போது புலிகளுக்கு சில வழிகளில் உதவியபடி, மறுபக்கத்தால் சீருடைத்தரப்போடும், தமிழ்க் கட்சிகளோடும் நெருக்கமாக உள்ளாராம்.

'மக்கள் சக்தி இயக்கம்' என்ற பெயரில் இவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்று சமீபத்தில் வெளியானது.

'தனக்கிடா உத்தியோகம் தன்பிடரிக்கு சேதம்' என்பர். இவர் காரியமும் அ஼தே.

செம்மணிப் பகுதியை வீடியோ படம்பிடித்துப் போய் ராஜபக்ஷவிடம் காட்டவேண்டுமாம். அதில் அவர் அடையாளம் காட்டும் பகுதிகளை தோண்டலாமாம்.

### தேவையில்லாத உத்தியோகம்

ச்சா.. என்னவொரு அருமையான யோசனை. இரவோடு இரவாக குழிகளை தோண்டுவதாக சந்தேகம் கிளம்பியிருக்கிறது. குழிகள் எங்கெங்கே இருக்கின்றன என்று தெரியாமல் தடுமாறினால்கூட, இந்த யோசனைப்படி சுலபமாக கண்டுபிடித்து தோண்டி முடித்துவிடலாம். இப்படியான அபாரமான யோசனைகளை எங்கு களஞ்சியப்படுத்தி வைத்திருக்கிறார்?!

இன்னொரு விடயம்; செம்மணி போன்ற வெட்ட வெளி நிலப்பகுதியை வீடியோ படம் பிடித்து அடையாளம் காண்பதுகூட சூப்பர் கற்பனை. அப்படிச் செய்யவே முடியாது. எல்லா நிலமும் ஒரே மாதிரியாகவே தெரியும்.

ஏதோ ராஜபக்ஷவை யாழ் கொண்டுவர கஷ்டம் இருப்பதுபோல மக்களை நம்பவைக்க சிவஞானத்தாரின் அறிக்கை உதவும். ராஜபக்ஷவை யாழ் அழைத்துச் செல்ல அரசு தாமதிப்பது காரணத்தோடுதான். அந்த காரணத்தை மக்கள் ஊகிக்காமல் தடுக்கும்விதமான யோசனைகளால் யாருக்கு பலன்? மீனுக்கு வாலும், பாம்புக்கு தலையும் காட்டுகிறார்கள்!

***

ஐ. தே.கட்சி கூட்டும் மாநாடு தொடர்பாக தமிழ்க் கட்சிகள் சில சனத் ஜெயசூரியாவின் பாணியில் விளாசியிருந்தன.

சனத் ஜெயசூர்யா பந்து போட்டால்தான் விளாசுவார். தமிழ்க் கட்சிகளுக்கு பந்து போடத் தேவையில்லை. வெறும் காற்றிலேயே துடுப்பு வீசக்கூடிய சூரர்கள்.

ஐ.தே.க.மாநாட்டில் கலந்து கொள்ளமாட்டோம் என்று சில கட்சிகள் கூறுயபோது, மாநாட்டு அழைப்புக்கூட அவற்றுக்கு கிடைத்திருக்கவில்லையாம். அழைப்பே இல்லை. நிராகரிப்பு ஏன்?

•••

ஈ. பி.ஆர்.எல்.எ஼ப் இயக்கம் பிரார்த்தனை நடத்த மக்களை அழைத்தது தொடர்பாக இப்பகுதியில் விமர்சனம் பண்ணியிருந்தோம்.

வானொலி நிகழ்ச்சியான வாரம் ஒரு வலம் நிகழ்ச்சியில் அதுபற்றி ஈ.பி. ஆர்.எல்.எ஼ப். சுரேசிடம் கேட்டிருந்தனர்.

பிரார்த்தனை செய்வதில் என்னதவறு? என்று சுரேஸ் கேட்டிருப்பாரேயானால் பாராட்டியிருக்கலாம். தாம் செய்யும் காரியங்களில் தெளிவு உள்ளவர்கள் அதற்கான விளைவுகளையும் நேராக சந்திக்க அஞ்சமாட்டார்கள்!

ஆனால் ஈ.பி. ஆர்.எல்.எ஼ப்.புக்கு தெளிவு கிடையாது. அடுத்தவர்மீது பழிபோடுவதும், கூட்டணிப் பாணியில் 'விஷமத்தனமான பிரசாரம்' என்று கூறவும்தான் முடியும்.

வாஜ்பேய் இலங்கைப் பிரச்சனையில் தலையிட வேண்டும் என்று பிரார்த்தனை நடத்த மக்களை அழைத்ததுக்கு காரணம், அப்படி அழைத்தால்தான் வருவார்கள் என்கிறார் சுரேஸ். அப்படியும் ஐம்பது பேரை தாண்டவில்லையே. மக்களுக்கு பிரார்த்தனையிலும் நம்பிக்கை இல்லையென்று கூறப்போகிறார்களோ?

இவர்கள் போராடாமல் இருப்பதற்கும் கும்பிடு கட்சிகளாக மாறியதற்கும் இவர்கள் கூறும் காரணம் என்ன? மக்கள் போராட வரமாட்டார்கள் என்பது ஒரு காரணம். தாம் அழைத்தாலும் புலிகளுக்கு பயந்து வரமாட்டார்கள் என்பது இரண்டாவது காரணம்.

இரண்டுமே வலுவில்லாத காரணங்கள். புலிகளுக்கு பயந்து இவர்கள் அழைப்புக்கு செவி மடுக்காதவர்கள், பிரார்த்தனைக்கு இவர்கள் அழைத்தால் மட்டும் எப்படி வருவார்கள்?

சிங்களக் கமிஷனின் அறிக்கையை எதிர்த்து மட்டக்களப்பிலும், வவுனியாவிலும் ஈ.பி. ஆர். எல்.எ஼ப். ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடத்தியது. குறிப்பாக வவுனியாவில் பெருமளவான மக்கள் கலந்துகொண்டதும் உண்மை.

பிரார்த்தனைக்கு என்று அழைக்காமல், போராட்டம் என்று அழைத்துத்தானே அத்தனைபேரும் வந்தனர்.

யாழ் குடாநாட்டில் நிவாரணவெட்டை எதிர்த்து நான்கு கட்சிகள் யாழ் அரச செயலக வளாகத்திற்குள் புகுந்து நடத்திய போராட்டத்திலும் மக்கள் கலந்து கொண்டனர். நான்கில் ஒரு கட்சி ஈ.பி. ஆர்.எல்.எ஼ப்.

மேற்கண்டவற்றில் கலந்து கொண்டவர்களை விட பிரார்த்தனைக்கு அழைத்து கலந்துகொண்டவர்களின் எண்ணிக்கை மிகச் சொற்பம்.

பிரார்த்தனை, நேர்த்திக்கடன் என்பவற்றை மக்களுக்கு கற்றுக்கொடுக்க எந்தக் கட்சியும் தேவையில்லை. மக்கள் தாமாக செய்துகொண்டுதான் இருக்கின்றனர்.

"ஆண்டவா! இந்த தமிழ்க் கட்சிகளுக்கு நல்ல புத்தி கொடு!" என்பதும் மக்களது பிரார்த்தனைகளில் ஒன்று.

தமது உறுப்பினர்களை ஆயுதம் ஏந்திப் போராடப் பழக்கிய இலட்சணம் ஒன்று போதாதா? ஆலயம் செல்ல இவர்கள்தான் பழக்கவேண்டுமாக்கும்!


படிப்பகம்

www.padippakam.com

உண்மைத் தொடர்

# அதிர் இடி 27

கடந்தவாரம்

**இஸ்ரேலுடன் நட்பு வைத்திருந்த இடி அமீன் அந்த உறவை கத்தரித்து, லிபியாவுடன் உறவு கொண்டான். இஸ்ரேலை கண்டித்தான். அதனால் அமீனுக்கு பாடம் புகட்ட இஸ்ரேலிய மொசாட் திட்டம் தீட்டியது. அழகி ஒருத்தியை தயார் படுத்தியது... இனி....**

# இடி அமீன்

“இடி அமீன் ஒரு துரோகி. மிக மோசமான துரோகி!” என்று மேசையில் ஓங்கிக் குத்தினான் மொசாட் பொறுப்பதிகாரி.

அவன் முன்பாக அமர்ந்திருந்த அழகி மிகப் பணிவாக ஆனால் மிகக் கவர்ச்சியாக அமர்ந்திருந்தாள்.

“உனக்குக் கொடுக்கப்பட்டுள்ள பொறுப்பின் பெறுமதியை நீ உணர்கிறாயா பெண்ணே?” என்றான் அதிகாரி.

“ஆம், உணர்வேன். இடி அமீன் எங்கள் நாட்டை ஏமாற்றிவிட்டான். நாங்கள் அவனை நட்புப் பாராட்ட, அவன் எக்காரணமும் இல்லாமல் எங்களை கத்தரித்து விட்டான்” என்றாள்.

“ஆம், ஆம், நீ சொல்வது நூறுசத வீதம் நிஜம்!” என்று உறுமினான் அதிகாரி.

பின்னர் கேட்டான்; “இதனால் எங்கள் தாய்நாட்டுக்கு ஏற்பட்ட நஷ்டம் அறிவாயா?”

“ஆம், அவமானம்! எங்களை பகைத்தது மட்டுமல்லாமல், எங்கள் பரமவைரியான லிபியாவுடன் சேர்ந்து எங்கள் நாட்டை இகழ்ந்தது இரண்டு மடங்கு அவமானம்!”

“குட்!” என்றான் அவள் விளக்கத்தால் பூரண திருப்தியடைந்த அதிகாரி.

“மொசாட் என்பது இஸ்ரேலின் ஒற்றுப் படை என்றுதான் எல்லோரும் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இஸ்ரேலின் இரண்டு கண்களில் ஒன்றுதான் மொசாட். இன்னொரு கண் எது தெரியுமா?”

“தெரியும்! இராணுவ பலம்!” என்றாள். “சபாஷ்! நீ நாட்டுப் பற்றுடன், நாலும் அறிந்தவள்” என்று பாராட்டினான்.

“பலம், ஆம் பலம்தான் யூதர்களை இன்று உலகமே திரும்பிப் பார்க்க வைத்திருக்கிறது. பலம், ஆம், பலம்தான், எங்கள் தன்மானத்தை உலகறிய பறை சாற்றியிருக்கிறது. பலம் இல்லாத இனம், அது மனித இனமோ, மிருக இனமோ வாழத்தகுதியற்றது! பெண்ணே! பலம் இல்லாதிருந்தால், யூதர்களுக்கு என்று ஒரு நாடு இல்லாதிருந்தால் இன்று யூதர்கள் என்ன செய்து கொண்டிருப்பார்கள் தெரியுமா?”

“தெரியும்! உலகெங்கும் நாடோடிகளாக...” என்று நிறுத்தி தயங்க? அதிகாரி “பிச்சையெடுத்துக் கொண்டிருப்பார்கள் அதைத்தானே சொல்லவந்தாய். அதற்கு ஏன் தயங்கவேண்டும். சரி விடு, நாளையே, புறப்படுகிறாய், இடி அமீன் ஒரு நரி. எச்சரிக்கையாக இரு!”

“ஆம்! இப்போது முதல் என் உயிர் என் தாய் நாட்டுக்கு சொந்தமானது. ஆகவே விலைமதிப்பற்றது. ஆகவே, என் பணியை பூர்த்தி செய்வதில்தான் என் உயிர் போகவேண்டும். அதுதான் பெருமை.”

அழகி புறப்பட்டாள்.

சில நாட்களில் உகண்டாவில் அமீனின் முன்பாக இருந்தாள்.

முழங்கால்களுக்கு மேலேயே நின்றுவிட்ட மினிஸ்கேட்டின் உபயத்தில் கால்களின் திரட்சியும், மினுமினுப்பும் அமீனை வதைத்தன.

பிரிட்டனில் இருந்து வருவதுபோல தயார் செய்யப்பட்ட ஆவணங்களுடன்தான் அவள் உகண்டா வந்திருந்தாள்.

உகண்டாவில் அவளது நடமாட்டங்கள் அனைத்தும், அங்கிருந்த மொசாட் ஒற்றர்களால் கண்காணிக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

உகண்டாவில் தொழில் தொடங்குவதற்கு வந்த இஸ்ரேலிய நிறுவனங்களில் சில மொசாட்டின் நிறுவனங்கள்.

அந்த நிறுவனங்களில் பாதிப்பேர் மொசாட் ஒற்றர்கள். ஆனால் ஒருவருக்கொருவர் அறிமுகம் கிடையாது.

ஒருவர் சிக்கிக்கொண்டால்கூட அடுத்தவரை பற்றிய தகவல் போக வாய்ப்பே இல்லாத ஏற்பாடு.

பிரிட்டனில் உள்ள பிரபல பத்திரிகை ஒன்றின் நிருபராக தன்னை அறிமுகம் செய்து கொண்டாள் அழகி.

“‘இடி அமீனுடன் ஒருவாரம்’ என்ற தலைப்பில் பேட்டிக் கட்டுரை எழுதப் போகிறேன், உங்கள் ஒத்துழைப்புத் தேவை என்றாள், பேசும்போதே சிவந்த நாவால் தன் உதடுகளை வருடிவிட்டுக் கொண்டாள். அந்த செயற்பாடு இடி அமீனை புரட்டி எடுத்தது.

பேசும்போது அவள் கால்மேல் கால் போட்டு அமர்ந்திருந்தாள். அடிக்கடி கால்களை மாற்றி மாற்றி போட்டுக் கொண்டாள்.

தன் எதிரில் கால்மேல் கால் போட்டுக் கொண்டு வேறு யாராவது அமர்ந்திருந்தால், அந்தக் கால்களையே முறித்து கறியாக்கி இருப்பான் அமீன்.

அழகான பெண், அதுவும் மினிஸ்கேட்டுடன் கால்மேல் கால்போட்டு அமர்ந்திருப்பதில் தனக்குள்ள இரசனையான சௌகரியம் கருதி பொறுத்துக் கொண்டான்.

அவள் கால்களை மாற்றிப்போட்டுக் கொண்ட தருணங்களில் மிகவும் அவஸ்தைப்பட்டான். அதனை அவள் கீழ்க்கண்களால் அவதானிப்புச் செய்தாள்.

இத்தனை பெரிய சர்வாதிகாரியை தன் அழகு மயக்கியதில் உள்ளூரக் கர்வமும் கொண்டாள்.

**“ஒருவாரமும் என்கூடவே நீ இருந்தாக வேண்டும். நீதான் ஒத்துழைக்கவும் வேண்டியிருக்கும்!”** என்றான் அமீன்.

விஷமச் சிரிப்பொன்றையும் உதிர்த்தான்.

“அதற்காகத்தானே வந்திருக்கிறேன்!” என்றாள். கிறங்கடிக்கும் பார்வையை வீசினாள்.

அன்று இரவே அவளைக் கட்டிலில் சந்தித்தான் அமீன்.

அவளது கழுத்தை தன் கரத்தால் இறுகப்பற்றிக்கொண்டு, அவளது தாடையை கடித்துக்கொண்டு கால்களால் இறுக்கினான்.

அவளுக்கு மூச்சுத் திணறியது. சற்றுப் பயமும் ஏற்பட்டது. ஏதோ விபரீதமாக உறுத்தியது.

அமீனின் ஒரு கரம் வேகமாக இலாவகமாக இயங்கி அவளது ஆடைகளுக்கு விடுதலை கொடுத்தது.



அவள் விடுபட முயன்றாள், அமீன் அதற்கு இடமளியாமல் முழுவதுமாய், ஆக்கிரமித்தான். அவள் கழுத்தை இறுக்கிய கரம் மட்டும் அகலாமல் இருந்தது.

அமீன் வியர்த்திருந்தான். அவள் இளமையால் வியந்திருந்தான். அப்போதும் கழுத்தை நெரித்திருந்தான்.

அவளது தலையணைக்கு அடியில் பிஸ்டல் இருந்தது.

இடி அமீன் மெய்மறந்து இருக்கையில் பிஸ்டலால் அவனது நெற்றியில் சின்னதாக பொட்டு வைக்கும் திட்டம் மனதில் பத்திரமாக இருந்தது.

ஆனால், அமீன் நடந்துகொண்ட முறை, ஒரு இராட்சத மிருகத்திடம் மாட்டிக்கொண்டு விட்ட திகிலைக் கொடுத்தது.

அமீனை தள்ளிவிட முயன்றாள். கழுத்தை விடுவிக்க எத்தனித்தாள். அமீனின் செயற்பாட்டால் உடல் களைத்துப் போயிருந்தது. அதனால் பலம் கொண்டு அவனை புரட்டித் தள்ள முடியாதிருந்தது.

திடீரென்று இடியாகச் சிரித்த அமீன், கழுத்தை பிடித்த பிடியை தளர்த்தினான்.

**“பயந்துபோனாயா, எனக்கு இப்படித்தான் பிடிக்கும். உன் கட்டுரையில் இதனையும் எழுதுவாயா?”** என்று கண்ணடித்தான்.

அவள் தனது கழுத்தை தடவிவிட்டுக் கொண்டு, அவனை பயத்தோடு பார்த்தாள். ‘பயந்தால் கடமை என்னாவது?’ என்று மனதுக்குள் உறுத்தியது. மிக மிகக் கஷ்டப்பட்டு செயற்கையாக சிரித்துகொண்டு அமீனின் கழுத்தை தன் கைகளால் கோர்த்து தன்னை நோக்கி சரித்து அவன் உதடுகளை தன் நாவால் இடமும், வலமுமாக வருடினாள்.

சரியான தருணம் ஒன்றுக்காக, அமீன் கிறங்கி தன் நிலை மறக்கும் தருணத்திற்காக அவனை தூண்ட அவளுக்கு சில வித்தைகள் சொல்லித்தரப்பட்டிருந்தன.

கட்டிலில் ஒரு ஆளை புத்திபேதலிக்கச் செய்வது எப்படி? என்பதை மொசாட்டின் பெண் உயரதிகாரி ஒருவர் சொல்லித்தந்திருந்தார்.

“நாட்டுக்காக எதுவும் செய்யலாம். நம்மையே கொடுக்கலாம். அதனால் துணிந்து அவனை வசப்படுத்து! அந்த நரியை சவக்கிடங்குக்கு அனுப்பு!” என்றான் அந்த உயரதிகாரி.

அந்த வித்தைகளை கையாளத் தொடங்கினாள். அமீனுக்கு அவை புதிதாக இருந்தன. கண்களை மூடிக்கொண்டான். அவளிடமிருந்து சரிந்து மல்லாந்து கொண்டான்.


ஒரு கரத்தால் அவனது நெஞ்சை நீவிவிட்டுக்கொண்டே, மறு கரத்தால் தலையணைக்கு அடியில் உள்ள பிஸ்டலை எடுக்க கைகளால் தேடினாள்.

அங்கே- பிஸ்டலைக் காணவில்லை.

‘திடுக்’ என்றது மனது.

அமீனுக்கு சந்தேகம் வரக்கூடாதே என்று அவனை தன் வித்தையால் கவனித்தபடியே பிஸ்டல் எங்கே போனது? என்று சிந்தித்துக் கொண்டிருக்க, எல்லாம் முடிந்ததும் அமீன் எழுந்து, தன்னை சீருடைக்குள் திணித்துக் கொண்டான்.

“நிபுணியாக இருக்கிறாய், நான்தான் கற்றுக் கொடுத்திருக்கிறேன் பல பெண்களுக்கு! இன்றுதான் முதல் முறையாக ஒரு பெண்ணிடம் படித்திருக்கிறேன்” என்று சிரித்துவிட்டு, “உனக்கு பரிசு தந்தேயாக வேண்டும். இந்தா!” என்று அவன் நீட்டிய பொருளைக்



## தருவது ரசிகன்

கண்டதும் மொசாட் அழகிக்கு இதயத்துடிப்பே நின்றுவிடும்போல இருந்தது.

அமீனைச் சுடுவதற்காக அவள் கொண்டு வந்து தலையணைக்கு கீழே வைத்திருந்த பிஸ்டல் இப்போது அமீனின் கையில் அடக்க ஒடுக்கமாக குந்தியிருந்தது.

இடி அமீன் அவளது முகம் வெளிறிப் போனதை இரசித்தான்.

**“இந்தா முத்தம் கொடு!”** என்று அவள் உதட்டுக்கு நேரே பிஸ்டலை நீட்டினான். அவள் தயங்க, தானே ஒற்றியெடுத்தான்.

எப்படி பொய் சொல்லாம்? என்று எதிர்பாராத திருப்பத்துக்கு ஏற்ற பொய்யை அவள் தேடிக்கொண்டிருக்க, அமீனின் உதடுகள் ஒவ்வொரு வார்த்தையாய் உதிர்த்தன.

**“தற்பாதுகாப்புக்காக வைத்திருந்தேன் என்று நீ சொல்லப்போகும் பொய்யை நம்புவதாக இருந்தால், ஜனாதிபதியாக இருக்க நான் தகுதியற்றவன்! என்னை நீ சந்திக்க வர முன்னரே உன்னைப் பற்றிய வரலாறு தீர ஆராயப் பட்டுவிட்டது. சரி, தானாக வந்து மடியில் விழும் கனியை நாமாக மறுப்பானேன் என்றுதான் விளையாடிப்பார்த்தேன்.”** என்று அமீன் சிரித்த சிரிப்புக்கு அழகி பயத்தில் உறைந்திருந்தாள்.

அவளது மணிக்கட்டைப் பிடித்து நேரம் பார்த்த இடி அமீன், **“இரவு 11.35. இது எனக்கு நல்ல நேரம். உனக்கு கெட்ட நேரம். உனது விருந்துக்கு நன்றி. நன்றி, நன்றி”** என்று மூன்றாவது முறையாக சொன்னபோது பிஸ்டல் வெடித்தது.

அவளது நெற்றியின் மையத்தில் ரவை துளை போட்டு குடைந்தது.

கட்டிலில் செத்துப்போனாள் மொசாட் உளவழகி. யாருமறியாமல் அவளது பிணம் எரிக்கப்பட்டது.

இடி அமீன் சொன்னான்; **“அவளது சாம்பலை இஸ்ரேல் மீதுதான் தூவியிருக்க வேண்டும்!”**

(இடி தொடரும்)

# மோனிகா, மோனிகா

அமெரிக்காவில் இன்று வி.வி.ஐ.பி. கிளின்ரன் அல்ல. அந்தக் கிளின்ரனை காந்தமாகக் கவர்ந்த மோனிகா லெவின்ஸ்கிதான்.



மோனிகா தன் காதலருடன்

தொலைபேசியில் காதல் மொழி பேசி பணம் கறக்கும் நிறுவனம் ஒன்று மோனிகாவை அணுகியிருக்கிறது.

நிமிடத்துக்கு 500 ரூபாய் என்ற கணக்கில் ஊதியம் தரலாம் என்று பேரம் பேசினார்கள்.

உலகெங்கும் இருந்து வரும் அழைப்புக்களுடன் சில நிமிஷங்கள் ஜாலியாகப் பேசவேண்டும். வேலை சுலபம், சம்பளம் அதிகத்திலும் அதிகம்.

ஆனால் மோனிகா மறுத்து விட்டார். அதைவிட பெரிய வாய்ப்புக்கள் எல்லாம் கூரையைப் பிய்த்துக் கொண்டு கொட்டும்போது நிமிஷத்துக்கு 500 ரூபாய் பெரிய பணமா?!

“உங்கள் சுயசரிதையைக் கூறுங்கள். பில்கிளின்ரனுடன் எப்படி பழகினீர்கள், அவர் எப்படியெல்லாம் உங்களை உபயோகித்தார் என்று கூறுங்கள். அதனை புத்தகமாக்கி வெளியிடுகிறோம்.” என்று பிரபல வெளியீட்டு நிறுவனம் ஒன்று மோனிகாவை துரத்துகிறது.

சுயசரிதைக்கு அந்த நிறுவனம் கொடுக்க உள்ள பணம் எவ்வளவு தெரியுமா? 9 கோடி ரூபாய்!

இதற்கிடையே மோனிகாவின் கடந்த காலத்தையும் சில பத்திரிகைகள் துருவியுள்ளன. சுவாரசியமான தகவல்கள் சுடச்சுட ஆவிபறக்க வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

தனது கல்லூரி பேராசிரியருடன் மோனிகாவுக்கு தொடர்பு இருந்ததாம். அந்தப் பேராசிரியரே தமது காதல் கதையைக் கூறி பத்திரிகைகளிடமும், தொலைக்காட்சிகளிடமும் பணம் சம்பாதிக்கிறார்.

மோனிகாவுக்கு ஏகப்பட்ட காதலர்கள். அதற்கு ஆதாரமான புகைப்படங்களுடன் செய்திகள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

வெள்ளை மாளிகையில் மோனிகாவுக்கு வேலை கிடைத்ததுகூட திறமையால் அல்ல, அங்குள்ள ஜொள்ளு அதிகாரிகளது சபலத்தால்தானாம்.

கழுத்து ஆழமாக வெட்டப்பட்ட சட்டை அணிந்து தேர்வுக்கு போனாராம். வெள்ளை மாளிகை பொறுப்பாளர் மயங்கிவிட்டார். மோனிகாவுக்கு வேலை கிடைத்தது.

“எங்கே போனாலும் ஏனையோர் தன்னையே பார்க்க வேண்டும். தன்னிடம் மயங்க வேண்டும் என்பதுதான் மோனிகாவின் இலட்சியம்” என்கிறார் அவரது காதலர்களில் ஒருவரான ஆடம்.

இவ்வாறு புதுபுது தகவல்கள் வெளியாகிக் கொண்டிருக்கின்றன. எப்படியோ கிளின்ரனுக்கு மோனிகா ஜாடிக்கேத்த மூடிதான்.

# இன்னொரு கொக்கி

நம்நாட்டில் எம்.ரி.வி. யிலும் ஒளிபரப்பாகும் தொடர் ‘பே வாட்ச்’ உலகப் புகழ் பெற்ற ஜொள்ளுத் தொடர் என்றும் கூறலாம்.

தளதளவென்று அழகிகளை கடற்கரையில் நீச்சல் உடையுடன் அலையவிட்டிருப்பார்கள். பிரபல அழகி பமீலாவும் இதில் நடித்தார். அவரது ஏராளமான தாராளம் காண்பதற்கே தொலைக்காட்சி முன்னால் ஏராளமான ரசிகர்கள் குவிந்து விடுவர்.



இப்போது இன்னொருபடி முன்னேற திட்டமிடுகின்றனர் ‘பே வாட்ச்’ தயாரிப்பாளர்கள்.

ஆண்களை தூண்டில் போட்டு இழுப்பதுபோல பெண்களுக்கும் கொக்கிபோட கவர்ச்சிகரமான ஆண்களை நடிக்க வைக்கப்போகிறார்கள்.

தேர்வுகள் பல நடத்தியும், பெண்களை ஜொள்ளுவிட வைக்கக்கூடிய ஆண்கள் கிடைக்கவில்லை என்று தயாரிப்பாளர்கள் அழாக் குறையில் இருக்கின்றனர்.

# கிளின்ரனின் நாடகம்

நீதிமன்றத்தில் இரசித்து இரசித்து பொய் கூறிவிட்டு, பின்னர் மாட்டிக்கொள்ளும் கட்டத்தில் மன்னிப்பு கேட்டவர் கிளின்ரன்.

மன்னிப்புக் கேட்டால் பிரச்சனை தீர்ந்து போகும் என்று நினைத்தார் கிளின்ரன். ஆனால் பிரச்சனை பூதாகரமாக வளர்கிறது.

சட்டத்தரணி கெனத் ஸ்டார் சமர்பித்த 443 பக்க அறிக்கை இன்டர் நெட்டில் வெளியாகி உலகப் பிரசித்தம் பெற்றுள்ளது.

443 பக்கங்களில் 280 பக்கங்களில் கிளின்ரன், மோனிகா உறவு விலாவாரியாக விபரிக்கப்பட்டுள்ளது.

கிளின்ரனுடன் மொத்தம். பத்து முறை உறவு வைத்துக் கொண்டதாக மோனிகா கூறியுள்ளார். இதில் எட்டு முறை வெள்ளை மாளிகையில் நடந்ததாம்.



உறவு வைத்துக் கொள்வது மட்டுமல்லாமல், தொலைபேசியில் நீண்ட நேரம் நள்ளிரவில் உரையாடியது ஒருவரை ஒருவர் அடிக்கடி தழுவிக் கொள்ளுவது, கட்டிப் பிடிக்கும் முன்னர் தன் நெற்றியில் புரளும் மயிர்க்கற்றைகளை கிளின்ரன் எப்படி ஒதுக்கிவிடுவார்? போன்ற பல விபரங்களை விலாவாரியாக விபரித்துள்ளார் மோனிகா.

இதேவேளை மோனிகா விவகாரம் தம்மை எவ்வகையிலும் பாதிக்காதது மாதிரி கிளின்ரனும் அவர் குடும்பத்தினரும் நாடகம் ஆடுகின்றனர்.

சுற்றுப் பயணங்கள் செய்வது, பொது நிகழ்ச்சியில் மனைவியுடன் ஜோக்கடித்து சிரிப்பது, மகளுடன் அன்பாக நடந்து கொள்வது என்று அரிதாரம் பூசாமலேயே நடித்துக் கொண்டிருக்கிறார் கிளின்ரன்.

# தர்ம அடி

பாகிஸ்தானின் தெற்கு பகுதியில் உள்ளது காயர்பூர் என்ற பகுதி. இங்கு பொது மக்களுக்கு தொல்லை கொடுத்து வந்தனர் பொலிசார்.

மேலதிகாரிகளிடம் மக்கள் முறையிட்டனர். பயன் கிட்டவில்லை. தம்கையே தமக்குதவி என்று செயலில் இறங்கினர்.

ஊருக்குள் வந்து அட்டகாசம் புரிந்த இரண்டு பொலிஸ்காரரின் மீசைகளை சுத்தமாக வழித்துவிட்டனர். மரத்தில் கட்டிவைத்து தர்ம அடியும் தரப்பட்டது.

பொலிசாரின் தொல்லைகள் தொடர்ந்தால் தர்ம அடியும் தொடரும் என்றும் எச்சரித்துள்ளனர்.

# பிரட்மன்–சச்சின்



கிரிக்கெட் உலக பிதாமகர் என்று கூறப்படுபவர் பிரட்மன். நம்நாட்டில் கூட பலருக்கு பிரட்மன் என்று பெயர் உண்டு. பிரட்மனின் ரசிகர்கள் தங்கள் பிள்ளைகளுக்கும் அவரது பெயரைச் சூட்டினார்கள்.

பிரட்மரின் 90வது பிறந்தநாள் விழாவில் சச்சின் டெண்டுல்கரும் கலந்து கொண்டார்.

பிரட்மனையும், சச்சின் டெண்டுல்கரையும் ஒப்பிட்டு பலரும் பேசிவருகின்றனர். ‘அப்படி ஒப்பிடவேண்டாம்’ என்று டெண்டுல்கர் கூறியிருக்கிறார்.


இதேவேளை இந்திய பத்திரிகை ஒன்று பின்வருமாறு ஒப்பிட்டுள்ளது: “பிரட்மன் ரன்களை மட்டும் குவித்தார். சச்சின் கோடிகளையும் குவிக்கிறார்!”



படிப்பகம்

www.padippakam.com

## லபக் லபக்



↑ மலைவிழுங்கி மகாதேவன் ரகம்தான் இவரும். ஆட்டுக்கறியை சிறு சிறு துண்டுகளாக்கி வறுத்து குச்சிகளில் மாட்டி சாப்பிடுவது மலேசியர்களுக்கு பிடிக்கும். இதனை சதாய் என்று அழைப்பர்.

சதாய் சாப்பிடும்போட்டி ஆண்டுதோறும் மலேசியாவில் காஜங் நகரில் நடைபெறும் அப்போட்டியில் இம்முறை சதாய்களை லபக் லபக் என்று விழுங்கி வெற்றி பெற்ற சாப்பாட்டு ராமர் இவர்தான். 5 நிமிடத்தில் 36 குச்சி சதாய்களை சாப்பிட்டு முடித்து ஏப்பம் விட்டாராம். சதாய் உண்டு ஜமாய்த்துவிட்டார். இவரது எடை 138 கிலோ, (இருக்காதா பின்னே) பெயர் அன்வர் மினாத். டிரைவராக இருக்கிறாராம்.

## உணவுக் கொள்ளை

↘ இது சூடானில் எடுக்கப்பட்ட படம். பதினைந்து ஆண்டுகால சூடான் உள்நாட்டுப் போரினால் பட்டினியும், பட்டினிச்சாவுகளும் தலைவிரித்தாடுகின்றன.


சூடானில் இஸ்லாமிய தீவிரவாத ஆட்சியை எதிர்த்து சூடான் மக்கள் விடுதலைப் படை போராடி வருகிறது. தெற்கு சூடானில்தான் மோதல்கள் பெருமளவில் தலைதூக்கியுள்ளன.

போராளிகளுக்கும் மக்களுக்கும் இடையே விரோதத்தை உருவாக்க அரச படைகள் தானியங்களை கொள்ளையடிக்கின்றனர். ஆடு மாடுகளை திருடுகின்றனர். போராளிகள்மீது பழியைப் போடுகின்றனர்.

ஆனால் மக்களுக்கு உண்மை தெரியாமல் இல்லை. இந்த பட்டினியால் எலும்புக் கூடுகளாக பலர் மாறியபோதும் போராளிகளுக்கு தொடர்ந்து ஆதரவு கொடுக்கின்றனர்.

ஐ.நா.சபை உணவுப் பொருட்களை விநியோகிக்க தொடங்கிய பின்னர் பட்டினிச் சாவுகள் பெருமளவு குறைந்தன.

உணவை பறித்து, பட்டினி போட்டு மக்களை மண்டியிட வைக்கலாம் என்று நினைக்கிறது கொடுங்கோல் அரசு. அந்த கொடுங்கோல் செய்த நாசத்தை இந்த குழிவிழுந்த குடிமகனின் கோலம் காட்டுகிறதல்லவா.





## இவரைக் கொள்ளையிட்டால்

↓ இந்த அழகி அணிந்திருக்கும் நகைகளின் மதிப்புத் தெரிந்தால், இவரது இதயத்தை, மனதை என்று பகுதி பகுதியாக கொள்ளையடிக்காமல் ஒட்டுமொத்தமாக இவரையே கொள்ளையடித்துவிடுவார்கள்.

இவர் அணிந்துள்ள நகைகளை பட்டியல் போட்டால் அசந்து போவீர்கள். காதில் மாட்டியுள்ள வைரத்தோடு 6 இலட்சம் டொலர். இயற்கை முத்துக்கள் இணைக்கப்பட்ட வைர நெக்கலஸ் 3 இலட்சம் டொலர். பாம்பு வடிவ கைக்காப்பு 33 ஆயிரம் டொலர். மொத்தம் 9 இலட்சத்து 33 ஆயிரம் டொலர். நம்மூர் பெறுமதியில் 6 கோடியே 6 இலட்சத்து 5 ஆயிரம் ரூபாய்கள்.



ஜெனிவாவில் உள்ள சேத்தி நிறுவனக் கிளையில் இவை ஏலத்தில் விடப்பட்டன. அதற்காக அவற்றை அணிந்து போஸ் கொடுத்து பீஸ் வாங்கினார் இந்த அழகி.

மற்றப்படி இதிலே இவருக்கு சொந்தமான நகை புன்னகை மட்டுமே.

## குண்டு அழகிப் போட்டி

↑ அழகுராணிப் போட்டிகளில் பங்குபற்ற முன்வருவோரின் அங்க அமைப்புக்களுக்குத்தான் முக்கியத்துவம் தரப்படுகிறது. குறிப்பாக மார்பின் அளவு, இடையின் அளவு போன்ற உறுப்புக்களின் அளவுகளுக்கே தனி மரியாதை. முக்கியமாக கொடி போன்ற அமைப்புள்ளவர்கள்தான் அழகிகளாகத் தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள்.

இஸ்ரேல் நாட்டில் முற்றிலும் மாறுபட்ட முறையில் அழகிப்போட்டி இடம்பெற்றது. இங்கு உடலமைப்பிலும் எடையிலும் கூடிய பெண்களுக்கான அழகுராணிப் போட்டி அண்மையில் நடந்தது. படத்தில் வலப்புறத்திலிருந்து இரண்டாவதாக காணப்படும் கசோசா கனியாசிவ் என்ற 27 வயதான வாட்டசாட்டமான பெண்மணிதான் அழகுராணிக்கான முடியைச் சூடிக்கொண்டார்.


இப்போட்டியில் பங்குபற்றத் தகுதியுடையவர்கள் ஆகக்குறைந்தது 12 1/2 ஸ்டோன் (175 இறாத்தல்) எடையுள்ள குண்டுமேனியராக இருக்க வேண்டும் என்பது நிபந்தனை. கசோசா கனியாசிவின் எடை 182 இறாத்தல்! மேடை அதிரத் தோன்றி வென்றார். காணக் கண் போதவில்லையாம். அத்தனை விஸ்தீரணம்! போட்டியில் பங்கேற்ற ஏனைய போட்டி அழகிகள் அழகுராணியைச் சூழ்ந்து காணப்படுகின்றனர். கொடி இடையழகிகள் மட்டுமல்ல எடை உடல் அழகிகளும் இனி போட்டியில் குதிக்கலாம்.

## பாரிஸ் மாடி

↓ ஃபிரான்ஸ் நாட்டில் பிரபலமானது ஈஃபில் டவர். அதற்கடுத்து தற்போது அங்கு பிரபலம் இந்த அடுக்கு மாடிக்கட்டடம்தான்.

கேக்துண்டுபோல கட்டடத்தின் உச்சியில் காணப்படுவதுதான் மொட்டை மாடி. மொத்தம் 56 மாடிகள் இதில் உண்டு. இதன் உயரம் 195 மீட்டர்.ஃபிரான்ஸ் தலைநகரான பாரிசில்தான் இதுவும் இருக்கிறது. மொட்டைமாடியில் நின்று பார்த்தால் பாரிஸ் நகரின் 40 கிலோ மீட்டர் தூரத்தை பார்க்கலாம். விமானத்தில் இருந்து பார்ப்பதுபோல இருக்கும்.

இந்தக் கட்டடத்தில் சூப்பர் மார்க்கெட்டும் உள்ளது. ஊசி முதல் உல்லாச விமானம் வரை வாங்கலாம். உலக நாகரிகத்தின் நுழைவாயில் என்று கூறப்படும் பாரிஸ் நகரில் உல்லாசப் பயணிகளை கவரும் இடமாக மாறியுள்ளது இந்த உயர்ந்த மாடி.



## தகவல் பெட்டி

### சிங்காசனம்

→ நாற்காலி ஆசை மனிதனுக்கு மட்டும்தானா? என்ன ஜோராக அமர்ந்திருக்கிறார் பாருங்கள்.

சிம்மாசனத்தை சிங்காசனம் என்றும் கூறுவர். அது இங்குதான் கச்சிதமாகப் பொருந்துகிறது.





படிப்பகம்

# "கட்டியணைத்தபோது சிரித்துவிட்டேன்"

திரையுலக மறுபக்கம் 70

## ரோஜாவின் பரபரப்பான பேட்டி

பார்த்திபன் கதாநாயகனாக நடிக்கும் 'புதுமைப்பித்தன்' படத்தில் ரோஜாவின் பாத்திரம் சர்ச்சைக்குரியது. விலைமாதாக நடிக்கிறார். இமேஜ் பற்றி கவலைப்படாத உதட்டழகி ரோஜாவின் பரபரப்பான பேட்டி இது.

கேள்வி: 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' படத்தில் கவர்ச்சியில்லாமல் குணசித்திரமாக நடிக்கவைத்துள்ளார் விக்ரமன். இனிமேல் கவர்ச்சியாக நடிப்பீர்களா?

ரோஜா: அதுதான் எனக்கு இப்போதுள்ள பெரிய குழப்பம். என் கதாபாத்திரத்திற்கு முக்கியத்துவம் இருந்தால் மட்டுமே கிளாமர் காட்டலாம் என்று முடிவு செய்திருக்கிறேன்.

கே: உங்களிடமுள்ள திறமையை வெளிக்கொண்டுவர ஒரு விக்ரமனால் மட்டுமே முடிந்தது. ஏன் இயக்குநர் செல்வமணி (காதலர்) அதற்கு முயற்சி செய்யவில்லை?

ரோ: செல்வமணி எனக்காக ஒரு நல்ல படம்கூட எடுக்கவில்லையே என்ற வருத்தம் எனக்கும் இருக்கிறது. என்னை நம்புவதைவிட என் சதையை நம்பியிருக்கிறார் என்று தோன்றுகிறது.

கே: செல்வமணி தவிர வேறு யாராவது உங்களிடம் ஐ லவ் யூ சொல்லியிருக்கிறார்களா?

ரோ: நிறைய தெலுங்கு தயாரிப்பாளர்கள் சொல்லியிருக்கிறார்கள். அவர்கள் சீரியஸாக சொன்னார்களா, சும்மா தமாஷாக சொன்னார்களா என்று தெரியவில்லை. நான் செல்வமணியைக் காதலிப்பது இண்டஸ்ட்ரியில் எல்லா நடிகர்களுக்கும் தெரியும். அதனால் எந்த நடிகரும் என்னிடம் ஐ லவ் யூ சொன்னதில்லை.

கே: புதுமைப்பித்தனில் விலைமாதாக நடிக்கிறீர்களாமே, இமேஜ் பாதிக்காதா?

ரோ: எப்படிப் பாதிக்கும்? இரத்தக் கண்ணீர் படத்தில் எம்.ஆர்.ராதா குஷ்டரோகியாக நடித்ததால் அவர் இமேஜ் பாதித்ததா? வாழ்வே மாயம் படத்தில் ஸ்ரீப்ரியா விலைமாதாக நடித்தார். அதனால் அவர் இமேஜ் பாதித்ததா? இல்லையே.

### எது அழகு?

கே: உங்களிடம் உள்ள அழகை வரிசைப்படுத்துங்கள்?

ரோ: கண்: ரொம்ப அழகு. காரணம், எல்லா உணர்ச்சிகளையும் என் கண்கள் அழகாக வெளிப்படுத்தும்.

மூக்கு: ராயல் ஃபேமிலியில் உள்ள பெண்களுக்கு இருப்பது போல ரொம்ப ஷாப்.

உதடுகள்: 'உங்க உதடு ரொம்ப செக்ஸியாக இருக்கிறது. அப்படியே கிஸ் அடிக்கலாம்போலிருக்கிறது' என்று மற்றவர்கள் வர்ணித்து, வர்ணித்து அடிக்கடி என் உதடுகளை ஆசையாக வருடிப் பார்ப்பேன்.

கே: கட்டிப்பிடித்து நடிப்பதில் ஒவ்வொரு நடிகையும் தங்களுக்கு பிடித்த ஹீரோவோடு எல்லை மீறி விடுவதும் உண்டு. உங்களுக்குப் பிடித்த ஹீரோவுடன் அப்படி கட்டிப் பிடித்து நடித்திருக்கிறீர்களா?

ரோ: அந்த மாதிரி வட்டத்திற்குள் நான் சிக்கிக்கொள்ள விரும்புவதில்லை. 'வீரா' படத்தில் ரஜினியோடு கட்டிப் பிடித்து உணர்ச்சிவசப்படும் காட்சியில் நான் நாலைந்து முறை சிரித்துவிட்டேன். உடனே ரஜினி இயக்குநரிடம், "சீக்கிரமா எடுங்க. இந்தப் பொண்ணோட தொல்லை தாங்கமுடியலே" என்றார். 'என்னம்மா ஆம்பிளை கணக்கா இருக்கியே' என்று கார்த்திக் கொமண்ட் அடிப்பார்.

கே: அடிக்கடி உபயோகப்படுத்தும் கெட்ட வார்த்தை?

ரோ: ஆண்களா இருந்தால் போடா நாயி. பெண்களாக இருந்தால் போடி நாயி.

ரோஜா தமிழக சஞ்சிகை ஒன்றுக்கு அளித்திருந்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு பரபரப்பான பதில்களை கூறியிருந்தார்.

தமிழ்ப்பட நடிகைகள் பதிலளிக்க மறுக்கும் கேள்விகளுக்கு ரோஜா துணிந்து பதில் கொடுத்திருந்தார்.

முகப்பில்

## கைவந்த கலை

தங்களுக்கு பிடித்த ஹீரோக்களை வசப்படுத்த நெருக்கமான காட்சிகளை பயன்படுத்திக் கொள்வது சில நடிகைகளுக்கு கைவந்த கலை. அதுபோல நடிகர்களுக்கும் தாங்கள் ஆசைப்படும் நடிகைகளை பாடல் காட்சிகளில் பிழிந்தெடுத்துவிடுவர்.

மன்மத நடிகராக பெயர் எடுத்த நடிகருக்கும் ஒரு நடிகைக்கும் சிறு ஊடல். நடிகரின் விருப்பத்தை நடிகை பூர்த்தி செய்ய மறுத்ததுதான் ஊடலுக்கு காரணம்.

படப்பிடிப்பு ஆரம்பமானது. பாடல்காட்சி படமாகிக்கொ... தது. மழையில் நனையும் கதாநாயகியை நடிகர் ஆசையோடு அ... போன்ற காட்சி. நடிகையை பழிவாங்க இதுதான் சந்தர்ப்... நினைத்த நடிகர் சரியாக ஒத்துழைக்காமல் குறிப்பிட்ட... பலமுறை எடுக்கவைத்தார். அதனால் பலதடவைகள் ... இறுகத் தழுவும் வாய்ப்பு நடிகருக்கு கிடைத்தது.

நடிகர் திட்டமிட்டு பழிவாங்குகிறார் என்பது நடிகைக்கும் ...தது. பிரபல இயக்குநரின் படம் என்பதால் பல்லைக் கடித்து சகித்... டார். அந்த நடிகை பின்னர் ஹிந்திப் படவுலகில் கொடிகட்டிப்...



ரகுமான்-ரசிகா
படம்: உறவுக்கு மரியாதை



"தட்டுத் தடுமாறி நெஞ்சம் — கை தொட்டு விளையாடக் கொஞ்சும் சிட்டு முகம் காதல் கொள்ளும் — கை பட்டு மலர்மேனி துள்ளும்!"

விஜய காந்த்-குஷ்பு
படம்: வீரம் வெளைஞ்ச மண்ணு

## கவிதை கேளுங்கள்

பிரகாஷ்ராஜ் நடிகர் மட்டுமல்ல, கவிதையும் எழுதக்கூடியவர். கருணாநிதியின் குடும்ப இதழான 'குங்குமம்' இவரது கவிதைகளைப் பிரசுரித்துள்ளது. படப்பிடிப்புக்கு செல்லும்போது நோட்டுப் புத்தகத்துடன் சென்று ஓய்வு நேரத்தில் எழுதிக் குவிக்கிறார். சமயத்தில் தான் எழுதிய கவிதையை சக நடிகர்களிடம் வாசித்துக்காட்டுகிறார். இதனால் சக நடிகர்கள் பாடு திண்டாட்டமாகியுள்ளதாம்.

## மகேஸ்வரியின் நிர்வாகம்

அடிக்கடி காதலர்களை மாற்றும் மகேஸ்வரி, தன் மனேஜர்களையும் மாற்றிக் கொண்டிருக்கிறார்.

சிம்ரானிடம் மனேஜராக இருந்த முனுசாமி அங்கிருந்து கழன்றுவிட்டார். இப்போது மகேஸ்வரியின் நிர்வாகத்தை கவனிக்கிறார். சிம்ரானை கவிழ்க்க முனுசாமியிடமே யோசனை கேட்டுள்ளாராம் மகேஸ்வரி. மகேஸ்வரிக்கு கெடு புத்தி ஏன்?

## சன் டி.வி. மோதல்

சன்.டி.வியின் திரை விமர்சனத்... 'கல்யாண கலாட்டா' படத்தில் கிழி... யென்று கிழித்துவிட்டார் சத்யராஜ். அதன... 'கல்யாண கலாட்டா' படத்தை திட்டி... சன்.டி.வி. அதுபற்றி சத்யராஜ் கூறுகி...

"நான் அந்தப்படத்தில் சன்.டி.வி எ... வார்த்தையை எங்கும் பயன்படுத்தவில்... அது தங்களை தாக்குவதாக அவர்... புரிந்துகொள்ளுமளவுக்கு அவர்களு... அறிவு குறைவானது என்று நான் நினை... வில்லை.

டி.விக்காரங்க சினிமாவை ரொ... அட்டாக் பண்ணக்கூடாது. ஏன்னா அவங்க சினிமாவைத்தான் நம்பியிருக்காங்க!"



"பூத்துச் சிரிக்கின்ற புன்னகையை — நான் பார்த்துப் பசியாற வேண்டும்!"

முரளி-ரோஜா
படம்: என் ஆச ராசாவே

## துணிச்சலான வாக்குமூலம்

'தேரே மேரே சப்னே' ஹிந்திப்படம் மூலம் திரையுலகில் புகுந்தவர் மிங்க் சிங். அவர் சமீபத்தில் விடுத்துள்ள அதிரடி வாக்குமூலம் இது:

"நான் நினைத்ததுபோல இல்லை சினிமா! ஆயிரம் கனவுகளோடு சினிமாவுக்குள் நுழைந்தேன். எல்லாம் ஒரு நொடியில் நொறுங்கிப் போய்விட்டது.

என் திறமையை வெளிப்படுத்த வாய்ப்பு தரவேண்டும் என்று நினைப்பவர்களைவிட படுக்கையை பகிர்ந்து கொள்ளத் துடிப்பவர்கள்தான் அதிகம். திறமையான நடிகைகளுக்கு ஏன் வாய்ப்பு இல்லை என்பது இப்போதுதான் புரிகிறது!" என்று கூறியுள்ளார் மிங்க் சிங்.

## உறவும் தொடருமா?

அஜித்குமாருடன் காய்விட்டுப் பிரிந்த ஹீரா அவரது ஜோடியாக நடிக்கிறார். 'காதல்தான் முறிந்தது. தொழில்ரீதியான உறவு தொடரும்' என்று ஹீரா கூறியிருந்தார். அதனால் தானோ என்னவோ படத்திற்கும் 'தொடரும்' என்று பெயர் சூட்டியுள்ளனர்.

இப்படப்பிடிப்பில் ஏற்படும் நெருக்கம் மறுபடி அஜித், ஹீரா உறவை தழைக்கச் செய்யலாம்.

'தொடரும்' படத்தை இயக்குவது ரமேஷ்கண்ணா. இவர் 'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' படத்தில் கார்த்திக்கின் நண்பராக நடித்திருந்தார். இப்போது இயக்குநராக களம் காண்கிறார்.

படத்தில் இன்னொரு நாயகியும் உண்டு. தேவயானி. மற்றும் ஜெமினிகணேசன், மணிவண்ணன், வடிவேலு, விவேக் ஆகியோரும் நடிக்கின்றனர். இசை: இளையராஜா.

## தர்மாவுக்கு அடி

விஜயகாந்த், ப்ரீதா விஜயகுமார் நடித்து வெளியாகியுள்ள 'தர்மா' எதிர் பார்த்தபடி கலக்கவில்லை. வசூலில் அடிவாங்கியுள்ளது.

தற்போதைய ஹிட் படங்களின் கதைப்பாணியை புறக்கணித்து, அடி தடி, கொலை என்று படம் முழுக்க கொடுத்ததால்தான் தோல்வி என்கிறார்கள். விஜயகாந்த் சோரவில்லை. தன் அடுத்த படமான 'கள்ளழகர்' பட வேலைகளில் பிஸியாக இருக்கிறார்.

## மிதுன் உதவி

தமிழில் பெரிய இடம் கிடைக்காத சொர்ணாவுக்கு ஹிந்தியில் 'தோ நம்பரி' படத்தில் மிதுன் சக்கரவர்த்தியுடன் ஜோடி சேரும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. தமிழில் இருந்து செல்லும் நடிகைகளுக்கு எப்போதுமே அன்புக்கரம் நீட்டுபவர் மிதுன்சக்கரவர்த்தி. ஆளும் உயரம், அவர் கையும் நீளம்.

## பெயர் மாற்றம்

பிரபுதேவாவின் காதலுக்கு வீட்டில் எதிர்ப்பு. பிடிவாதமாக நின்று நடனநடிகை ரம்லத்தை மணந்தார் பிரபுதேவா.

சென்னை அண்ணாநகரில் மனைவிக்கு வீடு எடுத்துக் கொடுத்தார். ஒரு ஆண்குழந்தையும் பிறந்தது.

தற்போது பெற்றோரின் கோபம் தீர்ந்துவிட்டதால் மனைவியோடு தன் வீட்டுக்கே வந்துவிட்டார் பிரபுதேவா. ரம்லத் இந்துவாக மதம் மாறி தன் பெயரை 'ரமா' என்று மாற்றிக்கொண்டிருக்கிறார்.

நடிகை ... பாரதிய ஜனதா கட்சி... பிரசாரப் புயலாகிவிட்டார்... தேர்தல் பிரசாரத்தில் கவு... பிரமுகர் ஒருவர் பலமாக சிபார... பதவி கிடைத்திருக்கிறது.

பாரதிய ஜனதா கட்சியின் ... பதவி என்றால் சும்மாவா? அம்... காரர்கள் அவரைச் சுற்றிவரு...

இளைஞரணி செயலாளர... சேர்ட் சகிதம் உலாவருகிறார்... தீவிர அரசியல் ஈடுபாட்டுக்கு... தொழிலதிபரான கணவரு... கொடுக்கவே கவுதமி அரச... என்று கூறப்படுகிறது. அதனை... கவுதமி.



www.padippakam.com

www.padippakam.com

## காதோடு சொல்லுகிறோம்

மணியான இயக்குநரின் படத்தில் இரண்டாவது முறையும் நடித்துள்ளார் மணியான நடிகை. இயக்குநரின் மனதையும் கொய்துவிட்டாராம். அமைதியான அந்த இயக்குநருக்கு கவித்துவமான அழகுகள் என்றால் உயிரோ உயிர். உலக அழகியையும், மணியான நடிகையையும்தான் அவருக்கு பிரமாதமாகப் பிடித்துள்ளதாம். இவ்விடயம் இயக்குநரின் துணைவிக்கும் தெரியும். 'அது அறிவு பூர்வமான நட்பு' என்கிறார் துணைவி.


நீண்ட பெயர்களை படங்களுக்கு சூட்டி பிரபலமானவர் அந்த வில்லன் நடிகர். திரைக்குப் பின்னாலும் வில்லத்தனம் செய்து பொலிசாரிடமும், பொதுமக்களிடமும் தர்ம அடி வாங்கிக் கொண்டிருக்கிறார். இதெல்லாம் தேவையா?' என்று கேட்டால், "இதுவும் நல்ல விளம்பரம்தானே" என்கிறாராம்.

இதுவும் வில்லன் நடிகர் ஒருவர் பற்றிய விவகாரம்தான். பிரகாசமான அந்த வில்லனின் ஜொள்ளும், லொள்ளும் தாங்க முடியவில்லை என்று நடிகைகள் சிலர் புலம்புகிறார்கள். கதாநாயகனாக சில படங்களில் நடித்துவிட்டதால் நடிகைகளை துணிந்து சீண்டுகிறாராம். இரட்டை அர்த்த ஜோக்குகள் விட்டும் லொள்ளுப் பண்ணுகிறாராம்.

மூன்றெழுத்து இளம் நடிகருக்கு இலண்டன் காதலி இருந்த விஷயம் தெரியாமல் கோட்டை கட்டிய நடிகைகளில் ஒருவர் 'சங்க' நடிகை. விஷயம் தெரிந்த பின்னர் நடிகரைப் பற்றி கண்டவிதமாக திட்டித்தீர்த்தாராம். 'எங்கெங்கே மச்சம் இருக்குன்னு எனக்குத் தெரியும். அந்த இலண்டன் பொண்ணுக்கு சொன்னா என்னாகும்?' என்றும் வீறாப்புக் காட்டினராம். பின்னர் என்ன நினைத்தாரோ விஜய்யுடன் சமரசமாகி வாழ்த்தும் கூறிவிட்டார்.

'படப்பிடிப்பில் 'சிம்ம' நடிகை மயங்கி விழுந்ததுதான் கோடம்பாக்கத்தை கலக்கிய செய்தி. ஏன் மயக்கம், உண்டதால் வந்த மயக்கமா? உண்டானதால் ஏற்பட்ட மயக்கமா? என்று மண்டையைப் பிய்த்துக்கொண்டு அலைந்தனர் படவுலகத்தினர். 'சிம்ம' நடிகையின் காதலரான நடன சுந்தர வாலிபரும் செய்தியறிந்து திகைத்துப் போனாராம். முன் எச்சரிக்கையுடன் நடந்து கொண்டும், அதையும் மீறி நடந்துவிட்டதோ என்று பயந்து போனாராம். பின்னர்தான் அது சாதாரண மயக்கம் என்று தெரிந்ததாம். இரவிரவாக காதலருடன் தூக்கமின்றி இருப்பதும், பின்னர் படப்பிடிப்புகளுக்கு செல்வதும்தான் நடிகையின் உடலை பலவீனமாக்கிவிட்டதாம்.

மந்திர நடிகை சத்யமான நடிகரின் அன்புக்கு கட்டுப்பட்டுத்தான் 'கலாட்டாவான' படத்தில் நடித்து முடித்துக் கொடுத்தாராம். இயக்குநருடன் ஏற்பட்ட பிரச்சனையால் முதலில் 'பிகு' பண்ணிக் கொண்டிருந்தார். சத்யமானவர்தான் வழிக்கு கொண்டுவந்தாராம்.



சிரஞ்சீவி-சாக்ஷி
படம்: மாஸ்டர்

## விஜய்-ரம்பா

"ஒ.. தென்றலே
உன் தோளில் சாயவா
காதல் நெஞ்சின்
ஆசையெல்லாம்
உன்னோடு பேசவா..."

என்று தொடங்கும் பாடல் 'என்றென்றும் காதல்' படத்தில் இடம்பெறுகிறது.

இப்பாடல் காட்சியில் விஜய், ரம்பா இணைந்து நடித்தனர். கிரேசிமோகனின் கதை வசனத்தில், மனோஜ் பட்நாகர் இயக்கத்தில் வளர்ந்து வருகிறது 'என்றென்றும் காதல்'. தயாரிப்பு குஞ்சுமோன். ரகுவரன், நிழல்கள் ரவி, பானுப்பிரியா, ராதாரவி, செந்தில், சார்லி, நம்பியார், தாமு உட்பட பலர் நடிக்கின்றனர்.

## முகம் காட்டு

கார்த்திக், ராம்கி இருவரும் முதன் முலாக இணைந்து நடிக்க உள்ள படம்: 'நிலவே முகம் காட்டு'. கதாநாயகிகள் தேர்வு நடந்து வருகிறது.

மணிவண்ணன், வடிவேலு, சரத்பாபு, ராதிகா, சாப்ளின்பாலு ஆகியோரும் நடிக்கின்றனர்.

இசை: இளையராஜா, ஒளிப்பதிவு: அப்துல் ரகுமான்.

## தாயின் மணிக்கொடி

ஆக்ஷன் கிங் அர்ஜுன் நடித்துள்ள படம் தாயின் மணிக்கொடி. மூன்று ஆண்டுகளாக படப்பிடிப்பு இழுத்தடித்து, இப்போது ஒருவிதமாக திரைக்கு வந்திருக்கிறது.

படத்தயாரிப்பாளர் நஷ்டத்தில் திணறியதால், அர்ஜுன் 50 இலட்சம் கடன் வாங்கி கடைசிக் கட்ட வேலைகளை ஒப்பேற்றினார்.

படம் பொழுது போக்குக்கு ஏற்ற விறு விறுப்பாக போகிறது.

## பெயரை மாற்றுக

பிரபல தமிழ் எழுத்தாளர் புதுமைப்பித்தன். வறுமையில் வாடி இறந்துபோனவர். தற்போது பார்த்திபன், ரோஜா நடிக்கும் படத்திற்கு புதுமைப் பித்தன் என்று பெயர் வைத்துள்ளனர். கிறுக்குத்தனமான பாத்திரத்தில் நடிக்கிறார் பார்த்திபன்.

எழுத்தாளர் புதுமைப்பித்தனின் மகள் பார்த்திபனிடம் படப்பெயரை மாற்றுமாறு கேட்டிருக்கிறார்.

## விஜய் செல்லம்

விஜய் தனது காதல் துணைவியான சங்கீதாவை 'சங்கீத்' என்றுதான் செல்லமாக அழைக்கிறார்.

சங்கீதாவின் கலர் புகைப்படம் ஒன்றை தன் பர்சிலேயே வைத்திருக்கிறார். தினம் ஒரு தடவையாவது இலண்டனுக்கு போன் போட்டு சங்கீதாவுடன் கொஞ்சுகிறார்.

சங்கீதா இனிமையாகப் பாடுவாராம். அவர் பாடியதை பதிவு செய்து வைத்து, நேரம் கிடைக்கும் போதெல்லாம் போட்டுக் கேட்கிறார்.

## மோதல்

கவர்ச்சிக் குண்டாக இருந்த குஷ்பு தற்போது எந்த வேடமானாலும் செய்யத் தயாராக இருக்கிறார். அதனால் ஏராளமான படங்கள் கைவசம் உள்ளன.

சமீபத்தில் குஷ்புவும் அம்பிகாவும் மோதிக்கொண்டனர். மம்முட்டியுடன் அம்பிகா நடிக்க இருந்த பாத்திரத்தில் குஷ்பு நடிக்கிறார்.

தன் பிழைப்பை கெடுத்ததால் குஷ்புவை பிடித்து கன்னா பின்னாவென்று திட்டி விட்டாராம் அம்பிகா.

## இன்னொரு புது நடிகை

அர்ஜுன் நடிக்கும் படம் சூர்யபார்வை. இப்படத்தின் கதாநாயகிக்கு பதினைந்து வயது. இவர் நடிகை ஜெயசுதாவின் தங்கையான சுபாஷினியின் மகள். பூஜா என்று பெயர் வைத்துள்ளனர்.

சினிமா உலக வக்கிரங்களால் மனநிலை பாதிக்கப்பட்டவர் நடிகை நிவேதிதா. 'தாயின் மணிக்கொடி' படத்தில் நடித்தபோது அவருக்கும் பதினைந்து வயது. அவருக்கும் அர்ஜுனுக்கும் இடையே இருந்த உறவு பற்றி ஏகப்பட்ட கதைகள் உலாவின.

நிவேதிதாவை மருத்துவமனைக்கு சென்று பார்த்தார். அப்போது நிவேதிதா முகத்தை திருப்பிக்கொண்டார்.

தற்போது அர்ஜுனுடன் கிசுகிசுக்கப்படுகிறார் பூஜா. இளம் வயதில் திரை உலகுக்கு வரும் நடிகைகள் நிலை பரிதாபமானது. அனுசரித்துப் போகக்கூடியவர்கள் பிழைத்துக்கொள்வர். ஏனையோர் நிலை கவலைக்கிடம்தான்.






கார்த்திக்-ரோஜா
படம்: உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்

## கமல் ஏற்பாடு

மருதநாயகம் படப்பிடிப்பு எங்கெல்லாம் நடக்கிறதோ அங்கெல்லாம் கராத்தே வீரர் ஹுசைனியின் பரிவாரங்கள் ஆஜராகி விடுகின்றன.

படப்பிடிப்பு நடக்கும் பகுதிக்குள் பத்திரிகையாளர்கள் உட்பட வெளியார் யாராவது புகமுற்பட்டால் ஆய் ஊய் என்று தாக்கி முட்டியை பெயர்ப்பது இவர்கள் பணி. அதற்காக சம்பளம் கொடுக்கிறார் கமல்.

கட்டுக்காவல் போட்டும் படச்செய்திகள் சில வெளியே கசிவதைத்தான் கமலால் ஜீரணிக்க முடியவில்லை.

## 'காதல் கவிதை'

'காதல் கோட்டை' அகத்தியன் அடுத்து இயக்கும் படத்திற்கு 'அதிசயம்' என்று பெயரிட்டார்.

ஜீன்ஸ் படப் பாடல் ஒன்றில் அதிசயம், அதிசயம் என்று வரிகள் வருகின்றன. எனவே ஷங்கர் படப் பாடலை பெயராக வைத்தால் உங்கள் மதிப்பு என்னாவது? என்றனராம் நண்பர்கள்.

அகத்தியனுக்கும் அது சரியென்று பட்டதால் படப் பெயரை 'காதல் கவிதை' என்று மாற்றிவிட்டார். 'இது இன்னொரு 'காதல் கோட்டை' என்கிறார்.

## கவுதமிப் புயல்

தமி... சேர்ந்து ...

...மிடம் மயங்கிய கட்சிப் ...செய்ததால், கவுதமிக்கு ...ளைஞரணி செயலாளர் ...அம்மா என்று கட்சிக் ...ர்கள்.

இருந்தாலும் ஜீன்ஸ், கவுதமியின் கணவரும் ...டைபோடவில்லையாம். ...சலுகைகள் பெற்றுக் ...யில் குதித்திருக்கிறார் ...ன்மையாக மறுக்கிறார்

## கவர்ச்சி ரோஜா

'உன்னிடத்தில் என்னைக் கொடுத்தேன்' படத்தின் பின்னர் கார்த்திக், ரோஜா இருவரும் நெருக்கமாக நடிக்கும் படம் சின்னராஜா. இதில் ரோஜாவின் தாராளமான கவர்ச்சி உண்டு.

## ரஜினியுடன் சௌந்தர்யா

ரஜினி படத்தில் நடிக்கப் போவதாக வெளியே சொன்னதால் தேவயாணி நீக்கப்பட்டது தெரிந்ததே. இப்போது அந்த வாய்ப்பு சௌந்தர்யாவுக்கு போயிருக்கிறதாம்.

இரண்டு கதாநாயகிகளில் இன்னொருவர் ரம்யா கிருஷ்ணன். ஐஸ்வர்யாராயை முதலில் கேட்டனர். ஊதியமாக எட்டு இலட்சம் கேட்டாராம். அவர் வேண்டாம் என்று ரஜினியே கூறிவிட்டாராம்.

ஜனவரி 1ல் படப்பிடிப்பு ஆரம்பமாகும். ஏப்ரல் 14ல் வெளிவரும்.

இசை: ஏ.ஆர்.ரகுமான். இயக்கம் கே.எஸ்.ரவிக்குமார் என்று தகவல்கள் வெளியாகி உள்ளன.

## உதறிய படம்

புதிய இயக்குநரான சசி புகுந்து விளையாடியுள்ள படம் 'சொல்லாமலே'. இப்படத்தில் நடிக்க முதலில் பிரபுதேவாவை அணுகினார் சசி.

கதையைக் கேட்டதும் கடுப்பாகிவிட்டார் பிரபுதேவா. 'காதலா காதலா' படத்தில் திக்குவாயனாக நடித்தேன் என்பதால் இதில் ஊமையாக நடிக்கச் சொல்லுகிறீர்களா? முடியாது, நடையைக் கட்டுங்கள்" என்று விட்டார்.

இப்போது படம் சூப்பர்ஹிட். நடிக்காமல் விட்டதற்காக வருத்தப்படுகிறாராம் பிரபுதேவா.

www.padippakam.com

## சொந்தமாகாத வசந்தம்

இரவின் நிசப்தத்தில்
மணிக்கூடு
ஓடும் சத்தங்கள் கூட
'கடார்' 'திமிர்' என்று
என்னைக்
கொல்லவரும்.
•
உன் இமையடிவாரத்தில்
காதல்
மொழிபேசிய
காலங்கள்
மனத்திரையில்
வந்து போகும்.
•
வாழ்க்கையின்
நிலையாமையையும்
வாழ்வதன்
இயலாமையையும்
'கல்லறைகள்'
ஞாபகப்படுத்தும்.
•
தோண்டப்படாத
செம்மணி போல்
உள்ளச் சுமைகள்
தள்ளாடும்.
•
என்
காதல் இராஜ்ஜியத்தில்
இன்னும் நான்
உன் 'கடிதங்களை'
அரசாள்கிறேன
என்பது
யாருக்கும் புரியாது.

மாரிமுத்து யோகராஜன்-
மட்டக்களப்பு.

## தேன்கிண்ணம்

## எப்போது?

இடைவெளிகள்
நீண்டதுதான்
வடக்குக்கும்
தெற்குக்கும்
இடையில்..!
**
அன்று சிந்திய
கண்ணீர்
காயுமுன
மீண்டும் புதிய
ஊற்றுக்கள்...!
**
அதிகாரம் மாறினாலும்
அரக்கத்தனம்
மாறுவதில்லை....
அன்றைய ஜேர்மனின்
தொடர்ச்சிகள்—
இன்றைய
சூரியகந்தை முதல்
செம்மணி வரை...!
**
அங்கு றப்பர் மரங்களுக்கு
உரமாகிய
மனித தசைகள்,
இங்கு
பனைமரங்களுக்கு!
**
எங்களிடையே
எத்தனை வேறுபாடுகள்....
ஆயினும்
இரத்தம
சிகப்புத்தான்!
**
ஆனாலும்,
அன்று ஒலித்த
குரல்களின்
எதிரொலிகள்கூட
அடங்கிப் போனது
ஒன்றும்
அதிசயமில்லைத்தான்!
**
மதமோ
இனமோ
மொழியோ
வேறுபட்டாலும்,
நாங்கள் எல்லோருமே
மனிதர்கள்தான்
என்பதை அவர்கள்
எப்போதுதான்
ஏற்றுக்
கொள்ளப்போகிறார்கள்?
**
தென்இணுவை- உத்திரன்.

## எதிர்பார்ப்பு

நானும் இப்போ
தொழில் தேடும் படைக்குள்
நிர்ப்பந்திக்கப் பட்டுள்ளேன்:
ஆயுதப் படையில்
ஆட்சேர்ப்பு போல்....!
••
காதல் தோல்விகூட
தந்ததில்லை— இந்த
வேதனை எனக்கு:
வேலையின்மையல்லோ
விரக்தியை
தந்ததிப்போ....!
••
சோதனை வைத்து
தந்தார்கள்
'அப்பொய்ன் மென்ட்'
இப்போ....
போதனை செய்து....
கேட்கிறார்கள்
'சம்திங்'
••
சுயதொழில் செய்யும்
சூழ்நிலையும்—எங்களுக்கு
இங்கில்லை—
த(டை)மிழ்
பிரதேசம் என்பதால்...!
••
என்னுடைய உணர்ச்சிகளை,
எதிர்பார்ப்புகளை
அரசுமல்லவா
புரிந்து கொள்ளத்
தவறிவிட்டது—
என் காதலிபோல்....!
••
நாட்டின் போர்முனை
சிப்பாய்போல்:
நானும் இப்போ
விடுபட முடியாமலும்
வெற்றி பெற முடியாதும்
விரக்தியே விளைவென
வீழ்த்தப்பட்டிருக்கிறேன்!
••


சிவசேகரம் சிவகுமார்-
மட்டக்களப்பு.

# இரும்புக்கைகள் என்ன செய்யும்?



வியட்நாம் மக்களின் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்க அமெரிக்கா காட்டிய கோரமுகத்திற்கு சில உதாரணங்கள் இந்தப் பதிவுகள்-

ஆயிரக்கணக்கான படுகொலைகள, புதைகுழிகள், பல்லாயிரக்கணக்கான மக்களின் இடம்பெயர்வுகள், சிறைகள், சித்திரவதைகள், பசி, பட்டினி.. என்று அடக்கு முறை சகல முனைகளாலும் இறுக்கியது.



குண்டுபோட்ட அமெரிக்க விமானங்கள் ஒரு கட்டத்தில் குழந்தைகளுக்கு பொம்மைகளையும் போட்டதுண்டு. அவற்றை வியட்நாம் குழந்தைகள் தீண்டவேயில்லை.

"போராட்டம் என்பது மாலை விருந்தல்ல; காட்டாறுகள் எதிர்ப்படும் தோல்விகள் குறுக்கிடும். வெல்வதற்காக தோற்கிறோம். கௌரவமாக வாழ்வதற்காகப் போராடுகிறோம். நாளை எம் சந்ததி தலைகுனிந்து வாழாதிருக்க இன்று நாம் துயரம் சுமப்பதும் ஒரு சுகம்தான்!!" என்று நிமிர்ந்தனர் வியட்நாம் மக்கள்.

இறுதியில் மாபெரும் வல்லரசின் படைகள் வாலைச் சுருட்டிக் கொண்டு ஓட, வீரவியட்நாமில் விடியல் பூத்தது.

## நெஞ்சும் நானும்

மங்களம் எங்கள் மடியில் தவழ்வதைப்
பார்க்கத் தவமிருந்தேன்—எங்கள்
மண்ணின் மகுட மணியொலி எங்கணும்
கேட்கணும்—நேர்த்தி வைத்தேன்—ஆனால்
செங்களச் சேற்றினில் சிக்கிய தேரென
செய்வதறியாது உள்ளேன்—வெறும்
சீவனைக் காத்தெந்தன் சீவியம் போக்கினால்
போதும்; இன்றெண்ணுகிறேன்!
*
"கேள்விகள் கேட்பது கெட்ட பழக்கமே...."
எங்கள் புதுக்கீதை—அட
கிஞ்சித்தும் காண்பதே சொர்க்கம்; அட தன்
மானமா? ஏன் தேவை?
கூழ் கொடுப்போருக்காய் கொள்கையை— மாற்றலாம்
கூறிற்று நம்பாதை....!
குப்பைக்குள் என்றாலும்
குந்த இடந்தந்தால்
கும்பிடுவோம் பேயை!
*
இராவணன் ஆண்டாலும் இராமனே ஆண்டாலும்
எங்கட்கு இரண்டும் ஒன்று—என்று
"இங்கு திரிவதே வாழ வழி" என்று
எதார்த்தம் உரைக்கும் சிந்து!
"பார்த்தீரோ.." நான்மட்டும் மானம், அறம் சொன்னால்
படைதான் மிஞ்சுமென்று
பட்டறிந்தேன் எனினும் இதா வாழ்வென....
என்னையே கேட்கும் நெஞ்சு!

அருணன்.

## இந்த வாரம் உங்கள் பலன்

(20.09.1998 தொடக்கம் 26.09.1998 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### நவக்கிரக சஞ்சாரம்

சிம்மம் — சூரியன், சுக்கிரன், ராகு, புதன்.
கும்பம் — குரு. (வக்கிரம்)
மேடம் — சனி.
கடகம் — செவ்வாய்.
கும்பம் — கேது.

சந்திரன்- இடபம், மிதுனம், கடகம் ஆகிய இராசிகளில் இவ்வாரம் சஞ்சரிப்பார்.

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- வீண் விரயம், பெரும் நஷ்டம். | காலை | 9 மணி |
| திங்கள்- குடும்ப ஒற்றுமை, திரவிய லாபம். | காலை | 6 மணி |
| செவ்வாய்-இனசன ஒற்றுமை, கௌரவம். | பகல் | 12 மணி |
| புதன்- தொழில் விருத்தி, பெரிய மனிதர்களின் உதவி. | மாலை | 5 மணி |
| வியாழன்- தெய்வானுகூலம், மன மகிழ்ச்சி. | மு.ப. | 10 மணி |
| வெள்ளி- பயனுள்ள செய்தி, பிரயாணம். | காலை | 7 மணி |
| சனி- நண்பர்கள் மூலம் நற்செய்தி, மகிழ்ச்சி. | மாலை | 6 மணி |

அதிஷ்டநாள்- புதன், அதிஷ்ட இலக்கம்-5

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி, மிருகசீரிடத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- காரிய சித்தி, பண வரவு. | காலை | 8 மணி |
| திங்கள்- வீண்பழி கேட்டல், மனச் சோர்வு. | காலை | 6 மணி |
| செவ்வாய்- பிரயாண அனுகூலம், சந்தோஷம். | பகல் | 11 மணி |
| புதன்- தொழில் விருத்தி, புதிய முயற்சி. | பி.ப. | 3 மணி |
| வியாழன்- வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை | 9 மணி |
| வெள்ளி- பெரியோர் சந்திப்பு, உதவி. | பி.ப. | 1 மணி |
| சனி- காரிய சித்தி, அனுகூலம். | மாலை | 6 மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- இனசன நன்மை, பெரியோர் உதவி. | காலை | 8 மணி |
| திங்கள்- காரியானுகூலம், பலவித பேறு. | மு.ப. | 10 மணி |
| செவ்வாய்- தொழில் சிறப்பு, பெரியோர் உதவி. | காலை | 6 மணி |
| புதன்- மனக் கலக்கம், தொழில் முயற்சி. | பகல் | 11 மணி |
| வியாழன்- பயனுள்ள செயல், முயற்சி. | காலை | 6 மணி |
| வெள்ளி- பெரும் துயரம், வீண் விரயம். | மாலை | 5 மணி |
| சனி- தெய்வானுகூலம், மகிழ்ச்சி. | மாலை | 4 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-6

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- வெளியூர் பிரயாணம், புதிய முயற்சி. | மாலை | 6 மணி |
| திங்கள்- உடல்நலக் குறைவு, மனச் சோர்வு. | காலை | 7 மணி |
| செவ்வாய்- வீண் விரயம், அலைச்சல் மிகுதி. | மு.ப. | 10 மணி |
| புதன்- பொருள் வரவு, மகிழ்ச்சி. | மாலை | 5 மணி |
| வியாழன்- குடும்பத்தில் குழப்பம், வீண் விரயம். | மாலை | 6 மணி |
| வெள்ளி- கௌரவம், தொழில் விருத்தி, | காலை | 8 மணி |
| சனி- அதிக செலவு, முன்கோபம். | காலை | 7 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-3

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- காரியத் தடங்கல், பொருள் விரயம். | காலை | 8 மணி |
| திங்கள்- காரியக்கேடு, மனச் சோர்வு. | காலை | 6 மணி |
| செவ்வாய்- பெரியோர் உதவி, மகிழ்ச்சி. | மாலை | 5 மணி |
| புதன்- இனசன ஒற்றுமை, வீண் விரயம். | மு.ப. | 10 மணி |
| வியாழன்- நற்செய்தி, மன மகிழ்ச்சி. | பகல் | 11 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, பணவரவு குன்றும். | காலை | 6 மணி |
| சனி- உடல் நலக்குறைவு, கௌரவம். | மாலை | 6 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-6

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- காரிய சித்தி, மன மகிழ்ச்சி. | மு.ப. | 9 மணி |
| திங்கள்- இனசன ஒற்றுமை, பொருள் விரயம். | காலை | 6 மணி |
| செவ்வாய்- வீண் குறை கேட்டல், மனக் கலக்கம். | பகல் | 12 மணி |
| புதன்- தொழில் கஷ்டம், அந்நியர் நட்பு. | மாலை | 5 மணி |
| வியாழன்- பொருள் நஷ்டம், வீண் பழி கேட்டல். | மாலை | 4 மணி |
| வெள்ளி- பிரயாணம், மன மகிழ்ச்சி. | காலை | 8 மணி |
| சனி- தெய்வானுகூலம், பிரயாணம். | பகல் | 12 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-7

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- வீண் விரயம், புதிய முயற்சி பலிதம். | மு.ப. | 9 மணி |
| திங்கள்- இனசன ஒற்றுமை, தொழில் முன்னேற்றம். | மாலை | 5 மணி |
| செவ்வாய்- வாக்குப் பலிதம், காரியக் கேடு. | காலை | 7 மணி |
| புதன்- உறவினர் நற்செய்தி, சிந்தனை. | மு.ப. | 10 மணி |
| வியாழன்- பலவித பேறு, பிரயாணம். | பகல் | 11 மணி |
| வெள்ளி- அதிக செலவு, மனச் சோர்வு. | காலை | 8 மணி |
| சனி- பயனுள்ள செயல், உறவினர் உதவி. | மாலை | 6 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-2

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- செலவு அதிகம், ஆடம்பர வாழ்க்கை. | மு.ப. | 9 மணி |
| திங்கள்- தொழில் மந்தம், மனச் சஞ்சலம். | மு.ப. | 10 மணி |
| செவ்வாய்- வெளியூர் பிரயாணம், காரியானுகூலம். | மாலை | 6 மணி |
| புதன்- புதிய முயற்சி, கௌரவம். | காலை | 7 மணி |
| வியாழன்- பெரியோர் உதவி, செலவு. | மு.ப. | 10 மணி |
| வெள்ளி- தெய்வானுகூலம், காரியம் தாமதம். | காலை | 6 மணி |
| சனி- இனசன ஒற்றுமை, மகிழ்ச்சி. | மாலை | 4 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-1

### தனு : சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, அந்நியர் சகவாசம். | மு.ப. | 9 மணி |
| திங்கள்- தொழில் சிறப்பு, கௌரவம் மிகுதி. | காலை | 7 மணி |
| செவ்வாய்- இனசன நன்மை, வாக்கு பலிதம். | மு.ப. | 10 மணி |
| புதன்- பலவித பேறு, உயர்ந்த நிலை. | மாலை | 4 மணி |
| வியாழன்- அதிக லாபம், முயற்சி பலிதம். | மாலை | 5 மணி |
| வெள்ளி- தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | காலை | 8 மணி |
| சனி- வெளியிடப் பிரயாணம், கௌரவம். | காலை | 6 மணி |

அதிஷ்டநாள்-ஞாயிறு, அதிஷ்ட இலக்கம்-4

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- செலவு மிகுதி, வீண் அலைச்சல். | மு.ப. | 10 மணி |
| திங்கள்- உடல் நலக்குறைவு, முயற்சி பலிதம். | பகல் | 11 மணி |
| செவ்வாய்- தொழில் உயர்வு, தொழில் விருத்தி. | மாலை | 7 மணி |
| புதன்- வெளியிட வாழ்க்கை, உறவினர் வரவு. | மு.ப. | 9 மணி |
| வியாழன்- கடன் தொல்லை, கவலை மிகுதி. | மாலை | 4 மணி |
| வெள்ளி- புதிய முயற்சி, மன மகிழ்ச்சி. | மாலை | 5 மணி |
| சனி- உயர்ந்த நிலை, தொழில் சிறப்பு. | காலை | 6 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-5

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- கடன் படுதல், பெரியோர் உதவி. | காலை | 8 மணி |
| திங்கள்- புதிய முயற்சி, ஆரம்பம் வெகுமதி. | காலை | 6 மணி |
| செவ்வாய்- வீண் விரயம், அலைச்சல் மிகுதி. | மாலை | 5 மணி |
| புதன்- இனசன ஒற்றுமை, வாக்கு பலிதம். | மாலை | 7 மணி |
| வியாழன்- தொழில் சிறப்பு, மனச் சந்தோஷம். | மு.ப. | 9 மணி |
| வெள்ளி- பெரிய மனிதர் சகவாசம், கௌரவம். | காலை | 8 மணி |
| சனி- வீண்குறை கேட்டல், மனக் கலக்கம். | பகல் | 11 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-3

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- பெரியோர் பகை, துயர் மிகுதி. | மு.ப. | 9 மணி |
| திங்கள்- வெளியிடப் பயணம், வர்த்தக விருத்தி. | மு.ப. | 10 மணி |
| செவ்வாய்- கடன் தொல்லை, அந்நியர் நட்பு. | மாலை | 6 மணி |
| புதன்- பயனுள்ள செயல், பண வரவு. | மாலை | 7 மணி |
| வியாழன்- தொழில் முன்னேற்றம், மகிழ்ச்சி. | பகல் | 12 மணி |
| வெள்ளி- இனசன நன்மை, காரியானுகூலம். | காலை | 7 மணி |
| சனி- தெய்வானுகூலம், உயர்ந்த நிலை. | மாலை | 4 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4



படிப்பகம்

# முகம் பொலிவுறும்



உடல் அழகுக்கு எலுமிச்சம் பழமும் கைகொடுக்கிறது. எப்படி?

✤ எலுமிச்சம் பழச்சாறும், தேங்காய் எண்ணெயும் சம அளவு சேர்த்துத் தலையில் தேய்த்துக் குளித்தால் பொடுகு நீங்கும்.

✤ எலுமிச்சம்பழச்சாறு, கஸ்தூரி மஞ்சள், கடலைமாவு ஆகிய மூன்றையும் ஒன்றாக்கி தினமும் முகத்தில் தேய்த்தால் முகப் பொலிவு தோன்றும்.

✤ முகத்தில் வறண்ட சருமம் இருந்தால் பாலாடையையும் எலுமிச்சம் பழச்சாறையும் கலந்து தடவினால் முகம் புதுப் பொலிவு பெறும்.

✤ சிலதுளி எலுமிச்சம்பழச்சாறு கலந்த நீரில் முகம் கழுவினால் முகம் புத்துணர்ச்சிபெறும்.

✤ கொதிக்கும் நீரில் சிலதுளி எலுமிச்சம் பழச்சாறு சேர்த்து ஆவி பிடித்தால் கண்களுக்கு அதிக கவர்ச்சி கிடைக்கும்.

✤ எலுமிச்சம் பழச்சாறும், தோடம் பழச் சாறும் கலந்து கண்ணைச் சுற்றியுள்ள கருவளையத்திற்குப் பூசி வந்தால் விரைவில் மறையும்.

✤ கிளிசரினும், எலுமிச்சம் பழச்சாறும் கலந்து உதடுகளில் தடவினால் உதடுகள் பளபளக்கும்.

✤ எலுமிச்சம் பழச்சாறும் தக்காளிப்பழச் சாறும் கலந்து பின் கழுத்தில் தேய்த்தால், பின் கழுத்து கறுப்பு நிறம் மாறும்.

✤ குளிக்கும் நீரில் எலுமிச்சம்பழச்சாறு சிறிதளவு விட்டுக் குளித்தால் உடலுக்கு உற்சாகம் கிடைக்கும்.

# சமையல்வாயு சிக்கனம்



சமையலுக்கு காஸ் (GAS) அடுப்புக்களைப் பயன்படுத்துபவர்கள் காஸை சிக்கனப்படுத்த பின் வரும் முறைகளைக் கடைப் பிடியுங்கள்.

❑ காய்கறிகளை நறுக்கி முடித்து, சாமான்களை அருகில் வைத்துக்கொண்டு பிறகு அடுப்பைப் பற்றவையுங்கள்.

❑ சமையலில் பிரஷர் குக்கரை பயன்படுத்தினால் 30 வீதம் காஸை மிச்சப்படுத்தலாம்.

❑ எரியும் தணலின் நிறம் எப்போதும் தளிர்ப்பச்சையுடன் கூடிய நீலநிறத்தில் இருக்க வேண்டும். மஞ்சள் நிறத் தணலாக இருந்தால் காஸ் அதிகம் செலவாகும். அத்துடன் பாத்திரங்களிலும் கரி பிடிக்கும்.

❑ தண்ணீரின் அளவு அதிகமில்லாமல் பார்த்துக் கொள்ளுங்கள். சிறிய பாத்திரமானால் சிறிய அடுப்புக் குமிழைப் பயன்படுத்துங்கள்.

❑ குளிர்சாதனப்பெட்டியில் இருந்து எடுத்து சமைக்க வேண்டுமானால் அந்தப் பொருட்களை உடனே சமைக்காமல் அறையின் வெப்பநிலை அளவுக்கு வைத்திருந்து பிறகு சமையுங்கள்.

❑ பாத்திரங்கள் மூடியபடி இருப்பது நல்லது. பருப்பு போன்ற தானிய வகைகளை நன்றாக ஊறவைத்து பிறகு சமைப்பதன் மூலம் கணிசமான காஸ் மிச்சமாகும்.

❑ புளி, வெண்ணெய் கலந்த மஞ்சள், தக்காளி, திரிந்த பால் ஆகியவை அமில குணமுடையவை, அவைபட்டால் உடனடியாக உலர்ந்த துணியால் அடுப்பைத் துடைக்கவும்.

❑ அடுப்பு சூடு ஆறிய பிறகு சவர்க்கார நீரினால் கழுவி உலர விட்டாலே போதும். சாதாரண துணியால் சலவைச் சோடா போட்டுக் கழுவலாம்.

# நரைக்குப் போடலாமா திரை?



பொதுவாக வயதானவர்களுக்கும், சில நடுத்தர வயதினருக்கும் தலைமுடி நரைப்பது இயல்பே. முடியில் இயற்கையாக அமைந்துள்ள கறுப்பு வண்ண நிறமிகள் குறைவதால் முடி நரைக்கிறது.

நடுத்தர வயதினருக்கு தலைமுடியில் சில இடங்களில் நரை ஏற்படும்போது நரையைப் போக்க முற்படுவார்கள். வெள்ளையாக இருக்கும் தலைமுடிக்கு கறுப்புச் சாயம்-டை (HAIR DYE) பூசி வெளிப்பார்வைக்கு அதைக் கறுப்பாக்குவார்கள்.

இப்போது பல்வேறு பெயர்களில் இந்தச் செயற்கைக் கறுப்புச் சாயம் விற்கப்படுகின்றது. இந்தச் சாயத்தில் அடங்கியுள்ளவை அனைத்துமே இரசாயனப் பொருட்கள். கலவையில் உள்ள பல பொருட்களில் ஏதாவது ஒரு இரசாயனப் பொருள் பெரும்பாலானவர்களுக்கு ஒவ்வாமையை ஏற்படுத்துவதாக இருக்கும்.

சிலருக்கு இக்கலவையை முடியில் தடவும்போது, தலையில் எரிச்சல், தலைமுடி உதிர்தல், முடி நுனியில் பிளவு ஏற்படுதல் போன்ற பாதிப்புக்கள் ஏற்படலாம். சிலருக்கு முடியைச் சுற்றி சிறு கொப்புளங்களும் ஏற்படக்கூடும்.

இச்சாயத்தின் வாசனை, தீவிர சளி மற்றும் ஆஸ்துமா போன்ற நோய்களை மேலும் தீவிரப்படுத்தக்கூடியது என்று கண்டறியப் பட்டுள்ளது. அரிதாகச் சிலருக்குப் புற்றுநோய் ஏற்படவும் வாய்ப்புள்ளது. இச் சாயத்தை கண் புருவத்திற்கோ, கண் இமைகளுக்கோ பயன்படுத்தினால் ஆபத்து ஏற்படலாம். சிலவேளைகளில் கண்பார்வையும் போய் விடும்.

பொதுவாக முடிக்குச் சாயம் பூசுவதைத் தவிர்ப்பது மிகவும் நல்லது.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

வாரம் ஒரு பட்டுச் சேலை EK

பெயர்:........................
முகவரி:........................
........................
தொழில்:........................
கையொப்பம்:........................

உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை

பி.கு: அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 26-09-1998

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# கண்ணீரில் கரைந்த இரவுகள்

53

புவனா



**சாள்ஸ்:** "அன்பே! உன்னுடைய பெரு வெற்றி என்னுடைய காதலைச் சம்பாதித்தது. இதற்காக நீ எத்தனையோ சித்திர வதைகளையும், துன்பங்களையும் ஏற்றுக் கொண்டாய்; உன் மதிப்பை இழந்தாய்: கவலைப்படாதே. நான் இருக்கிறேன்!"

**கமீலா:** உங்களுக்காக நான் எவ்வளவு கொடுமைகளையும் ஏற்கக் காத்திருக்கிறேன். அதுதான் காதல்! அதுதான் காதலின் வலிமை!

**சாள்ஸ்:** உன்னுடைய எல்லாமே வலிமைதான்; உன் மனது; உன் உணர்ச்சிகள்; உன் தைரியம்... மேலும் சொல்லவா....?

**கமீலா:** வேண்டாம், வேண்டாம்! நீங்கள் எங்கே போய் முடிப்பீர்கள் என்று எனக்குத் தெரியாதா?

**சாள்ஸ்:** எங்கே முடிக்க வேண்டுமோ. அங்கேதான் முடிப்பேன் (சிரிக்கிறார்)

**கமீலா:** ஆமாம், எனக்குத் தெரியாதா- உங்களுக்கு காரியத்தில் தானே கண்? எப்போது நாம் சந்திப்பது?

**சாள்ஸ்:** ஏன் டியர், தவிப்பாக இருக்கிறதா?

**கமீலா:** என்ன ஒரு கேள்வி இது? நீங்கள் இல்லாதபோது சுவையாகவா இருக்கும்? தலையணைதான் துணை! தலையணையை எங்கே வைத்திருக்கிறேன் தெரியுமா?

**சாள்ஸ்:** எங்கே? எங்கே?

**கமீலா:** நேரில் சொல்கிறேன்..... குட்நைட்.!

**சாள்ஸ்:** குட்நைட்!

கமீலாவும் சாள்ஸும் இந்த உரையாடலை தமது மிக நம்பிக்கைக்குரிய நண்பர் ஒருவரது வீட்டில் இருந்தே நடத்தினார்கள்.

## நண்பரின் துரோகம்

தமது தொலைபேசி உரையாடல்கள் ஒட்டுக்கேட்கப்படும் என்பதால் இருவரும் தொலைபேசி உரையாடலை தவிர்த்தே வந்தனர்.

நீண்ட நாட்களாக கமீலாவை



ஹலோ நலமா?

களின்போது பரிமாறப்பட்ட பரிசுகள் பற்றிய தகவல்கள் பத்திரிகைகளுக்கு எட்டியது எவ்வாறு?

சாள்ஸ்-கமீலா ஆகியோர் எங்கு, எப்பொழுதெல்லாம் சந்தித்தனர் போன்ற தகவல்களும் ஆதாரத்தோடு வெளியாகின.

தமது நண்பர்கள் பலர் பணத்திற்காக துரோகம் செய்துவிட்டனர் என்பதை சாள்ஸும், கமீலாவும் புரிந்து கொண்டனர்.

தங்கள் சந்திப்புக்களுக்கு அவர்கள் ஏற்பாடு செய்ததும் இதற்காகத் தான் என்றும் நினைத்தனர்.

இத்தகவல்களை பத்திரிகைகளில் படித்த மக்கள் சாள்ஸ்மீது கடும் வெறுப்பு கொண்டனர்.

## சோதிடர் கணிப்பு

சோதிடம் பார்ப்பது, சகுனம் பார்ப்பது போன்ற நம்பிக்கைகள் பிரிட்டிஷ்காரர்களிடம் இன்றும் இருக்கிறது.

இத்தகைய மூடத்தனங்களுக்கு நாம் மட்டும்தான் சொந்தக்காரர்கள் என்று உரிமை கொண்டாட முடியாது.

இலண்டனைச் சேர்ந்த பிரபல சோதிடர் ஒருவர் வெளியிட்ட கருத்தை பத்திரிகைகள் பிரசுரித்திருந்தன.

அந்த சோதிடர் டயானாவுக்கும் நெருக்கமானவர். டயானாவின் சாதகம் பார்ப்பவரும் அவர்தான்.

"டயானாவும் கடகராசி, கமீலாவும் கடக ராசி. ராசி ஒற்றுமை இருந்தாலும், ஒரே ராசிக்காரர்கள் இருவரும் விரோதமாகவே இருப்பார்கள். இந்த விரோதம் தீரப்போவதே கிடையாது." என்று கூறிவிட்டார்.

பிரிட்டிஷ் அரச குடும்பத்திற்கும் சோதிடத்தில் நம்பிக்கை உண்டு. அவர்களும் டயானாவின் சோதிடர் கூறிய கருத்தை அறிந்தனர்.

டயானாவா? கமீலாவா? என்பதை சாள்ஸ் முடிவு செய்யவேண்டும். அப்படியானால்தான் இந்தக் குழப்பம் தீரும்.

இனி தலைகீழாக நின்றாலும் சாள்ஸ், டயானா இருவரும் இணைய வாய்ப்பில்லை என்பது மகாராணிக்கும் தெரியும்.

கமீலாவை கைவிட சாள்ஸ் முன்வர மாட்டார். கமீலா தவிர வேறு சில பெண்களுடனும் சாள்ஸுக்குத் தொடர்புகள் இருந்தாலும், டயானா பிற ஆண்களுடன் நெருக்கமாகப் பழகியதை சாள்ஸால் ஜீரணிக்க முடியவில்லை.

அரச குடும்பத்திலும் ஆண்களின் ஒழுக்க மீறல் மறைமுகமாக அங்கீகரிக்கப்பட்டது.

அதன்காரணமாக ஆண்கள் பல பெண்களின் பின்னால் அலைய, அரச குடும்பப் பெண்கள் தனிமையில் புழுங்கினர். தங்கள் தாபத்தைத் தீர்க்க பணியாளர்களையும், பாதுகாப்பாளர்களையும் தங்கள் இரகசியக் காதலர்களாக மாற்றிக்கொண்டனர்.

ஆணுக்கு ஒரு நீதி, பெண்ணுக்கு ஒரு நீதி என்பது இத்தகைய சீரழிவுகளை ஏற்படுத்தியே தீரும்.

## புன்னகை பரிமாற்றம்

சாள்ஸ்-டயானா உறவு முறிந்தது முறிந்ததுதான் என்பது உலகுக்கே தெரிந்து போனது.

"சாள்ஸை இனிமேல் என் கணவராக நினைத்தும் பார்க்கவே முடியாது. ஆனால் அவரை நண்பராக நினைத்து புன்னகைக்கவோ, நலம் விசாரிக்கவோ நான் தயங்கமாட்டேன்," என்று தன் சிநேகிதிகளிடம் கூறினார் டயானா.

சாள்ஸும், டயானாவும் பிரிந்திருந்த காலத்தில் மிக அரிதாகவே சந்திப்புக்கள் நிகழ்ந்தன.

தங்கள் பிள்ளைகளது பாடசாலை நிகழ்ச்சிகளின்போது இருவரும் எதிரெதிரே சந்தித்துக் கொண்டனர்.

பெரிய இடத்துப் பிள்ளைகள் படிக்கும் பாடசாலை என்பதால் நிகழ்ச்சிக்கு பெரும் புள்ளிகள் பலர் வந்திருந்தனர்.

அனைவரது கண்களும் சாள்ஸ்-டயானா இருவரும் சந்திக்கும் அந்தக் கணத்தில் இருவரும் எத்தகைய பிரதிபலிப்புக்களைக் காண்பிக்கப்போகிறார்கள் என்பதை அறியும் ஆவலில் விரிந்தன.

யாரும் எதிர்பாராத காட்சி அங்கே அரங்கேறியது.

சாள்ஸை எதிர்கொண்ட டயானா இயல்பான புன்னகையுடன், நலம் விசாரித்தார்.

சாள்ஸ் அதனை எதிர்பார்க்காவிட்டாலும் நொடியில் சுதாகரித்துக்கொண்டு புன்னகைக்க முயற்சித்தார். தானும் நலம் விசாரித்தார்.

இக் காட்சியை நேரில் கண்டவர்கள் மட்டுமன்றி, மறுநாள் பத்திரிகைகளில் புகைப்படமாகப் பார்த்தவர்களும் ஆச்சரியப்பட்டனர்.

சாள்ஸ்- டயானா உறவு மறுபடி மலரப் போகிறதா? இருவரும் தங்கள் தவறுகளை உணர்ந்து அதற்காக வருந்தவும் தொடங்கி விட்டனரா? என்றெல்லாம் வினாக்கள் எழலாயின.

டயானாவின் செயலாளர் மறுப்பறிக்கை விட்டார்.

"டயானா நட்போடு நடந்து கொண்டாரேதவிர அதற்கு வேறு எவ்வித அர்த்தமும் கற்பிக்க வேண்டாம்!" என்று மறுப்பறிக்கை முற்றுப்புள்ளி வைத்தது.

## சந்திப்பும் விசாரிப்பும்

சந்திக்க முடியாத தாபத்தில் தொலைபேசியில் பேசிவிட்டார் சாள்ஸ். பேச்சு சுவாரசியத்தில் தம்மை அறியாமலேயே நீண்ட நேரம் பேசிவிட்டனர்.

சாள்ஸின் நண்பர் துரோகம் செய்து விட்டார். மேற்படி உரையாடலும் பத்திரிகைகளுக்கு கிடைத்து விட்டது.

சாள்ஸின் நண்பரோ, தனக்கு அது பற்றி எதுவுமே தெரியாது. இதுவும் டயானாவின் ஒற்றர்கள் செய்த வேலையாகத்தான் இருக்கும். என்று கூறிவிட்டார்.

அதனைத் தொடர்ந்து சாள்ஸுக்கும், கமீலாவுக்கும் மேலும் பல அதிர்ச்சிகள் காத்திருந்தன.

சாள்ஸ் கமீலாவுக்கு கொடுத்த பரிசுகள் பற்றிய விபரங்களும் பத்திரிகைகளில் வெளியாகின.

நம்பகமான நண்பர்களின் வீடுகளில் நடந்த சந்திப்புக



மொனோக்கோ இளவரசி கிரேஸுடன் டயானா

(அடுத்த வாரமும் வரும்)


## இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை? யாழ்ப்பாணம் வாசகிக்கு அதிஷ்டம்!

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான் — பா. ராதா, அரசடி ஒழுங்கை, திருநெல்வேலி கிழக்கு, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக.வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

## தினமுரசு-அம்மன் ஜுவல்ஸ் இணைந்து வழங்கும் தங்கமாலை பரிசுப் போட்டி

தினமுரசு- அம்மன் ஜுவல்ஸ் பரிசுக் கூப்பன் இல 19

❀ முதல் பரிசுக்குரிய அதிஷ்டசாலிக்கு அம்மன் ஜுவல்ஸ் வழங்கும் தங்கமாலை பரிசாகக் காத்திருக்கிறது. இரண்டாவது அதிஷ்டசாலிக்கு தங்கமோதிரமும் மூன்றாவது அதிஷ்டசாலிக்கு சமையல் அடுப்பும் காத்திருக்கிறது.


❀ 50 அதிஷ்டசாலிகளுக்கு ஆறுதல் பரிசுகள் காத்திருக்கின்றன.

❀ பெண்கள் மட்டுமே பங்குகொள்ள முடியும்.

❀ தொடர்ந்து 25 வாரங்களுக்கு வெளியாகும் பரிசுக் கூப்பன்களை சேகரித்துக் கொள்ளுங்கள். நாம் அனுப்புமாறு கூறும்போது மட்டுமே கூப்பன்களை அனுப்புங்கள்.

www.padippakam.com





> பாருக்குள்ளே சம தன்மை தொடர்
> பற்றுஞ் சகோதரத் தன்மை
> யாருக்கும் தீமைசெய் யாது-புவி
> யெங்கும் விடுதலை செய்யும்!
>
> -சுப்பிரமணிய பாரதியார்.

## பாப்பா முரசு சிறுகதை

# வேண்டாதவர்களின் சேர்க்கை

ஒரு கிராமத்தின் அருகே உள்ள ஏரியில் கொக்கு கூட்டம் ஒன்று வசித்து வந்தது. இவை ஏரியில் உள்ள மீன்களைப் பிடித்துத் தின்னாமல், தினமும் வேறு இடத்திற்கு உல்லாசமாகப் பறந்து சென்று தமது உணவை உண்டுவிட்டு வரும்.

இவற்றையெல்லாம் அந்த ஏரியில் வசித்து வந்த நாரை ஒன்று தினமும் கவனித்து வந்தது. தானும் இந்தக் கொக்குகளுடன் சேர்ந்து உல்லாசமாக வாழ விரும்பியது.

ஒரு நாள் அந்தக் கொக்குக் கூட்டத்தோடு நாரையும் சேர்ந்து கொண்டது.

விவசாயி ஒருவன் தன் வயலில் விதைத்திருந்தான். இதை அந்தக் கொக்குக் கூட்டம் அழித்து வந்தது. இதனால் கோபமடைந்த விவசாயி கொக்குகளைக் கூட்டமாகப் பிடிக்க வலை விரித்திருந்தான்.



இதை அறியாமல் கொக்குக் கூட்டம் அந்த வயலில் இறங்கி வலையில் மாட்டிக் கொண்டது. கொக்குக் கூட்டத்தோடு உல்லாசமாக வாழ விரும்பிய நாரையும் வலையில் அகப்பட்டுக் கொண்டது.

சிறிது நேரத்தில் வயலுக்குள் வந்த விவசாயி, வலையில் அகப்பட்ட ஒவ்வொரு கொக்கையும் பிடித்து அதன் கால்களைக் கட்டிக் கூடையில் போட்டுக் கொண்டிருந்தான்.

அவன் வலையில் இருந்து நாரையை விடுவித்துக் கொண்டிருக்கும்போது, நாரை அவனிடம்,

"ஐயா! நான் கொக்கல்ல; நாரை. 'இந்தக் கொக்குகளோடு சேர்ந்து இருந்தால் உல்லாசமாக வாழலாம்' என்று இவற்றைப் பற்றித் தெரியாமல் இவற்றுடன் சேர்ந்து விட்டேன். இந்த வயலுக்கு இன்றுதான் முதன் முறையாக வந்தேன். வேண்டுமானால் என் சிறகைப்பாருங்கள் நான் நாரை!" என்று கெஞ்சியது.

நாரை கூறியதைக் கேட்டுச் சிரித்த விவசாயி,

"நீ சொல்வது உண்மையாக இருக்கலாம். ஆனால் நீ என் நெல் வயலை நாசம் செய்த கொக்குகளோடு சேர்ந்து வந்துதானே வலையில் அகப்பட்டுக் கொண்டாய். அதனால் அவற்றுக்கு ஏற்பட்ட கதிதான் உனக்கும்!" என்று சொல்லிக் கொண்டே நாரையின் கால்களையும் கட்டி கூடைக்குள் போட்டான்.

'கொக்குகளோடு உல்லாச வாழ்க்கை வாழ ஆசைப்பட்டு வந்ததால் உயிரை இழக்கப்போகிறோமே' என்று வேதனைப்பட்டது நாரை.


'நாரையைப் போல, வேண்டாதவர்களின் வெளிச் செயற்பாடுகளைப் பார்த்து, அவர்களுடன் சிநேகம் கொண்டால் அது எமது உயிருக்கே பேராபத்தை விளைவித்து விடக் கூடும்.'

# அதிசயம் - ஆனால் உண்மை!



### பூகோளப்பூச்சி:

← கிகாடா என்ற இடத்தில் உள்ள பாரல் இன் ஃப்ளாடஸ்' என்னும் ஒரு வகைப்பூச்சி, தனது தோள்களின் மீது பூகோளம் போன்ற உருண்டையைச் சுமந்து செல்கிறது.



### பட்டையில் பூ:

→ 'காலி ஃப்ளோரா' என்ற இச் செடியின் மேற்பட்டை மீதில் இருந்து நேரடியாகவே பூக்கள் பூக்கும்.

### பச்சைத்தேரை:

↓ இந்தத் தேரை வயிற்றால் ஒலி எழுப்பும். இத்தேரையின் ஒலியைக் கொண்டு இதனுடைய எதிரிகள் இது இருக்குமிடத்தைக் கண்டுபிடிக்க முடியாது.



### தண்டனை பெற்ற நகரம்:

↘ ஃபிரான்ஸ் நாட்டில் உள்ள லயன்ஸ் என்ற நகரம் அரச வம்சாவழியை ஆதரித்ததால், இந்நகரத்தை புரட்சி நீதிமன்றம் பூண்டோடு அழிக்க உத்தரவிட்டது. அங்குள்ள கட்டடங்கள் தரைமட்டமாக்கப்பட்டு 35 ஆயிரம் பேர் கொல்லப்பட்டனர்.



# வாரம் ஒரு நாடு

## ஸ்லோவாகியா

| | |
|---|---|
| தலைநகர் | - பிராட்டிஸ்லாவா |
| பரப்பு | - 49,039 சதுரகிலோ மீட்டர் |
| மக்கள் தொகை | - 54 இலட்சம் |
| மொழி | - ஸ்லோவாக், மக்யார் |
| எழுத்தறிவு | - 99% |
| சமயம் | - கிறிஸ்தவம் |
| நாணயம் | - புதிய கொரூனா |
| தனிநபர் வருமானம் | - 1920 டொலர். |

### அமைவிடம்:

வடக்கே போலந்தும்; தெற்கே ஹங்கேரியும்; கிழக்கே உக்ரெய்னும்; மேற்கே செக்குடியரசும்; தென் மேற்கே ஒஸ்ரியாவும் இதன் எல்லைகளாக அமைந்துள்ளன.

### வரலாறு:

மத்திய ஐரோப்பிய நாடான செக்கோஸ்லாவாகியா, 1993 ஜனவரி 1ல் செக் மற்றும் ஸ்லோவாகியா என்று இரு நாடுகளாகப் பிரிந்தன. 1969ம் ஆண்டு சோவியத் யூனியனின்




ஆதரவுடன் கம்யூனிஸ்ட் ஆட்சியின் கீழ இருந்த செக்கோஸ்லாவாகியாவில் 1990ல் கம்யூனில்ட் ஆட்சி நீக்கப்பட்டது. இதன் பின்னர் ஏற்பட்ட கலவரங்களால் நாடு இரண்டாகப் பிரிந்தது.

### பொருளாதாரம்:

தொழில் மற்றும் விவசாயத்தில் தன்னிறைவு கண்டுள்ளது. கோதுமை, பார்லி, உருளைக்கிழங்கு போன்றவை முக்கிய விளைபொருட்கள் ஆகும்.

# சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 26.09.1998.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 263
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

## வர்ணம் தீட்டும் போட்டி இல: 261

**பரிசுக்குரியவர்:**
கீத்தா தவபால்,
நெளுக்குளம், வவுனியா.

**பாராட்டுக்குரியவர்கள்:**

| | |
|---|---|
| பாத்திமா மனூஸா மஹ்ரூப், குருக்குத்தல முஸ்லிம் மகா வித்தியாலயம், கடுகண்ணாவ. | கருப்பையா ஸ்ரீதரன், டீ.எஸ்.சேனாநாயக்க கல்லூரி, கொழும்பு-07. |
| ச. துஷன், றோயல் கல்லூரி, கொழும்பு-07. | பி. இன்சிபா, கே/நாங்கள்ள முஸ்லிம் மகா வித்தியாலயம், துல்ஹிரிய. |
| எம்.என். பாத்திமா சப்னா, அல்-ஹிலால் மத்திய கல்லூரி, நீர்கொழும்பு. | விஜராஜா யோகானந்தி, விக்னேஸ்வரா ம.வி., திருகோணமலை. |
| தியாகமூர்த்தி ரொஸ்கிபிரசாந், டிரேட்டன் த.வி., கொட்டகலை. | டி. தேவேந்திரன், ரோமன் கத்தோலிக்க தமிழ் பாடசாலை, வத்தளை. |
| செல்வி சர்மிளா ராசிக், ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரி, திருகோணமலை. | ச. குணதீபன், நு/நட்போன் தமிழ் வித்தியாலயம், டயகம. |


# கண்டு பிடித்தவர்

அவுட் ரெட் என்பவர் இயல் கணிதத்தில் பெரும் சீர்திருத்தம் செய்தவர். 1575-1660 காலப்பகுதியில் வாழ்ந்த இவர்தான் பெருக்கல் முறையைக் காட்ட 'X' என்ற குறியீட்டையும், விகிதத்தைக் காட்ட ':' என்ற குறியீட்டையும் கண்டுபிடித்துப் பயன்படுத்தினார்.



அதுமட்டுமல்லாமல் இவரே கணிதத்தில் பயன்படும் சைன், கோசைன் என்பவற்றிற்கான சுருக்கங்களையும் வகுத்தார். இவற்றை ஆயிலர் என்ற இன்னொருவர் ஆதரித்த பின்னரே இவை வழக்கத்திற்கு வந்தன.

# சூரிய ஒளி



சூரிய ஒளி 8 நிமிடங்களில் சூரியனில் இருந்து பூமியை வந்து சேர்கிறது. இந்த ஒளியானது விநாடிக்கு 1 இலட்சத்து 86 ஆயிரத்து 400 மைல் வேகத்தில் பிரயாணம் செய்கிறது.

எனவேதான் அது விண்வெளியைக் கிழித்துக்கொண்டு எட்டே நிமிடத்தில் நம்மை அடைந்து விடுகிறது. சூரியனை நாம் பார்க்கும்போது அது அப்போது உண்மையான இடத்தில் இருப்பதில்லை. அது எட்டு நிமிடங்களுக்கு முன்பு இருந்த இடத்தையே நாம் அதைப் பார்க்கிறோம்.

# கடுமையான தண்டனைகள்



முன்பு இங்கிலாந்து அரசாங்கம் சட்டத்தை வகுப்பதிலும், அதை மீறுபவர்களை தண்டிப்பதிலும் கண்டிப்புடன் இருந்தது.

16ம் நூற்றாண்டில் லண்டன் நகரில் வெள்ளிக்கிழமைகளில் மாமிசம் சாப்பிடுவது தடைசெய்யப்பட்டிருந்தது. மீறிச் சாப்பிட்டவர்கள் தூக்கில் தொங்கவிடப்பட்டார்கள்.

14ம் நூற்றாண்டில் இன்னொரு கடுமையான சட்டம். ஒரு நாளைக்கு 3 வேளை உணவருந்துவது பெரும் குற்றமாகக் கருதப்பட்டது. அதேபோல் தாடி வளர்ப்பதற்கு வரி செலுத்த வேண்டியும் இருந்தது.

மனிதர்களுக்கு மட்டும்தான் என்றில்லாமல் வாயில்லாப் பிராணிகளுக்கும் தண்டனை வழங்கும் விநோத சட்டம் கி.பி.1266 முதல் 1692 வரை நடைமுறையில் இருந்தது. சட்டத்தை மீறிய நாய், பூனை, மாடு போன்ற பிராணிகள் சிறைகளுக்குச் சென்று தண்டனையும் பெற்றன. சில மிருகங்கள் தூக்கில் போடப்பட்டன.

நல்லவேளையாக இந்தச் சட்டங்கள் இப்போது நடைமுறையில் இல்லை.

# தேனீர் பிறந்த கதை

மூலிகை மருத்துவத்திற்குப் புகழ் பெற்றது சீனா. சீனாவின் சக்கரவர்த்தியான ஷென் நுங் என்பவர் ஏராளமான செடிகளின் மருத்துவ குணங்களை ஆராய்ந்து கண்டுபிடித்தவர். இதனால் இவரை 'தெய்வீக மருத்துவர்' என்று சீன வரலாற்றில் குறிக்கப்படுகிறார்.

தண்ணீரைக் கொதிக்க வைத்துக் குடிக்க வேண்டும் என்று முதன் முதலில் சொன்னவர் இவர்தான். இவர் ஒருமுறை தமது படைமுகாம் அருகே ஒரு பாத்திரத்தில் தண்ணீரைக் கொதிக்க வைத்தார். அருகில் இருந்த சில செடிகள்தான் விறகாகப் பயன்படுத்தப்பட்டது.



தண்ணீரைக் கொதிக்க வைக்கும் போது அடுப்பில் இருந்த செடிகளில் இருந்த இலைகள் காற்றில் பறந்து பாத்திரத்தினுள் விழுந்தன. தண்ணீர் அசுத்தமாகிவிட்டதே என்று நினைத்த சக்கரவர்த்தி அதைக் கொட்ட முயற்சித்தார்.

ஆனால் பாத்திரத்தில் இருந்து வந்த ஒருவித நறுமணம் அவரைத் தடுத்தது. அந்தத் தண்ணீரையே குடித்தார். அது சுவையாகவும், உடலுக்கு சற்று உற்சாகத்தையும் கொடுத்தது. இதுதான் தேனீர் பிறந்த கதை.

# அதிஷ்டலாபச் சீட்டு

அதிஷ்டலாபச் சீட்டு முதன் முதலாக இத்தாலி நாட்டில்தான் அறிமுகப்படுத்தப்பட்டது. 15ம் நூற்றாண்டில் ரோமாபுரி நகரில் பொதுமக்களிடம் பணம் வசூலித்து, அவர்களின் பெயர்களை எழுதிக் குலுக்கிப் போட்டு அதிஷ்டசாலிகளைத் தேர்ந்தெடுத்தார்கள்.

இவ்வாறு தேர்ந்தெடுக்கப்படும் அதிஷ்டசாலிகளுக்கு அடிமைகள், கப்பல்கள், வீடுகள் போன்றவை பரிசாக வழங்கும் வழக்கம் இருந்தது. இதுவே பின்னர் பல நாடுகளுக்கும் பரவியது.



மருத்துவமனைகள், பாலங்கள், சத்திரங்கள், வீதிப்பராமரிப்பு போன்ற பொதுநலச் செலவுகளுக்குப் பணம் திரட்ட முதலில் ரஷ்யா, ஜெர்மனி, இங்கிலாந்து, ஸ்பெயின் போன்ற நாடுகள் அதிஷ்டலாபச் சீட்டிழுப்பை நடத்தின.



படிப்பகம்

www.padippakam.com

இரண்டாம் பாகம்

அங்கம் 04



# மேற்கே ஒரு குற்றம்

நடந்து நடந்து ஹாப்ட் பான்ஹாஃப் வரை வந்துவிட்டார்கள். மிகப் பெரிய ரெயில்வே நிலையம். உருவி விட்ட மின்னல்கள் போல் ரெயில் வண்டிகள். ஸ்டே ஷனிலேயே அத்தியாவசியமான அத்தனை சாமான்களும் இருந்தன. பாங்க், சினிமா, டெலி விஷன், ஹொட்டல், கடைகள், தபால், இத்தாலியர்கள், துருக்கியர்கள், நீக்ரோக்கள் என்று பற்பல நாட்டினர் புழங்க, நிமிஷத்துக்கு நிமிஷம் ஒலிபெருக்கி பேசிக்கொண்டே இருக்க, நிமிஷத்துக்கு நிமிஷம் வண்டிகள் புறப்பட்டு பிளாட் பாரத்தைத் தாண்டுவதற்குள் எழுபது மைல் வேகம் பிடித்துவிட சற்று நேரம் அதைப் பராக்குப் பார்த்தார்கள். வசந்த் சொன்ன பீர் ஐடியா உதித்தது!

அந்த ஹொட்டலுக்கு படி இறங்கிக் கீழே செல்ல வேண்டியிருந்தது. இருட்டாக இருந்தது! மேஜையில் உட்கார்ந்ததும் இரண்டு பெண்கள் திடுதிப்பென்று வந்தார்கள்.

"ஹலோ, ஹலோ!"

"என்ன வேண்டும்?" என்றான் வெய்ட்டர்.

"இரண்டு பீர்."

"நான் உங்களருகில் உட்காரட்டுமா?" என்று அந்தப் பெண்கள் ஒரே சமயம் கேட்டார்கள்.

"உட்காரேன். எனக்கு ஒரு பானம் வாங்கித் தருவாயா?"

அந்தப் பெண்கள் சட்டென்று உட்கார, அவர்களிடம் பர்ஃப்யூம் மணம் கணேஷின் மூக்கைத் துளைத்தது. அருகில் இருந்த சிறிய ப்ரொஜக்டர் உயிர்பெற்று எதிரே ஒரு திரையில் ஒரு 'நீலப்படம்' உருவாகியது.

வசந்த் அந்தப் பெண்ணின் தொடை மேல் கை வைத்தான். அவள் சிரித்தாள்.

"அதோ அங்கே போனால் இன்னும் சுதந்திரமாக இருக்கலாம். வருகிறாயா?" என்று ஓரத்தில் மறைவிடத்தைக் காட்டினாள்.

"பாஸ் போலாமா?"

"ஒழிஞ்சு போய்டுவே! சூறையாடிப் பிட்டு அண்டர்வேரோட அனுப்பிடுவா! இருக்கிற காசையெல்லாம் இன்னிக்கே செலவழிக்க உத்தேசமா?"

"உன் பேர் என்ன?" என்றான் கணேஷ்!

"ஜென்னி"

"உன் பேர்?"

"நானும் ஜென்னி!"

"ஜென்னி, சமயம் கிடைக்கையில் வருகிறோம். இப்ப அவசரமாக வேலையிருக்கிறது."

"ஹொட்டலுக்கு போலாமா" என்றாள்

"நாளைக்கு....நாளைக்கு... இப்போது நேரமில்லை!"

"நாங்கள் உங்களுடன் வருகிறோம். நாள் பூரா உடன் இருக்கிறோம்!"

"நாளைக்கு நாளைக்கு!"

அவர்கள் ஜெர்மன் பாஷையில் பேசிக்கொண்டு மறுபடி பார்த்து, "சரி இருபது மார்க் கொடுங்கள்!" என்றார்கள்.

"இருபது மார்க்கு எவ்வளவு ஆறது பாஸ்?"

"எண்பது ரூபாய்!"

"சரிதான், ஒரு நிமிஷம் பக்கத்தில் உட்கார்ந்ததுக்கு எண்பது ரூபாயா? பகல் கொள்ளையா இருக்கே!"

"இருபது மார்க் எதற்கு?" என்றான்.

"கம்பெனிக்கு, படம் பார்த்ததற்கு, நான் சாப்பிட்ட பீருக்கு, நீ சாப்பிட்ட பீருக்கு!"

"ப்ரொப்ரெட்டரைக் கூப்பிடு!"

"அவர் இல்லை இப்பொழுது!"

"பீருக்கு உண்டான பணம்தான் கொடுப்போம்! இருபது மார்க் ஜாஸ்தி!"

"ஷ்மிட்!" என்றாள் ஒருத்தி.

ஷ்மிட் என்கிற கடோத் கஜன் வந்து கணேஷை, "நோ ட்ரபிள் மிஸ்டர்?" என்று சட்டையைப் பிடித்தான்.

கணேஷ் வெகுண்டு உதறினான். அது ஷ்மிட்டின்மேல் பட்டுவிட்டது.

ஷ்மிட் ஆக்ரோஷமாக கணேஷைக் கன்னத்தில் அறைந்தான். 'விண்ண்' என்று வெங்கலப்பானை உருண்டாற்போல் கணேஷுக்குள் சப்தம் கேட்க, வசந்த் அவன் மேல் பாய, ஷ்மிட் வசந்தைப் பந்தாட, கணேஷ் அவன் இடுப்பில் முழங்காலால் உதைக்க, அந்தப் பெண்பீர் பாட்டிலை எடுத்து வசந்தின் தலையில் ஓங்கி அடிப்பதற்குள் அந்த மூன்றாவது மனுஷன் வந்து தடுத்து விலக்கினான். ஷ்மிட்டுடன் ஜெர்மன் பாஷை பேசினான். ஷ்மிட் உடனே பெட்டிப் பாம்பாக அடங்கி கணேஷிடம் வந்து "ஸாரி" என்றான். பெண்கள் காணாமல் போனார்கள்.

"சண்டை போடாதீர்கள். இனி இந்த



மாதிரி இடத்திற்கு வராதீர்கள். உங்கள் அறைக்குச் செல்லுங்கள்." என்றான் புதியவன்.

கணேஷ், "வந்தனம்! தக்க சமயத்தில் வந்து உதவினீர்கள், அநியாயமாகப் பணம் கேட்டார்கள். நீங்கள்...?"

"பொலிஸ், உங்களைத் தொடர்ந்து வந்து கொண்டிருந்தேன். நீங்கள் போகலாம். இனி இந்த மாதிரி இடங்களில் நுழையாதீர்கள்."

இருவரும் வெளியே வந்தார்கள்.

"எல்லாம் உன்னாலே!" என்றான் கணேஷ்.

"நான் பீர் சாப்பிடத்தானே விரும்பினேன்!"

"அந்தப் பெண்களை என்கரேஜ் பண்ணியிருக்கக்கூடாது. வசந்த் இது வேற தேசம், வேற மனுஷங்க, வேற பெண்கள். வேற விதிகள். நாம் கொஞ்சம் ஒதுங்கியே இருக்கணும்!"

"பேசாம அந்த லாவண்யாகிட்ட சிநேகம் பண்ணிக்கிட்டு சுத்தறதுதான் நல்லது. அடிக்கிறானுங்க" வசந்தின் உதடு வீங்கியிருந்தது.

"நல்லவேளை, பொலிஸ் வந்து காப்பாத்தினாங்க."

அவர்கள் ஹொட்டலுக்குத் திரும்பினார்கள். பிரயாணத்தில் இழந்த தூக்கங்களை சரிக்கட்டுவதற்காக அறையில் சற்றுத் தூங்கினார்கள்.

மாலை இரண்டரை மணிக்கு இருவரும் கிளம்பி உபான் என்னும் தரைக்குக் கீழே ஓடும் ரெயிலைப் பிடித்தார்கள். ஸெண்ட் லிங்கர் டார், மரியன் ப்ளாட்ஸ், இஸார்டார் என்று வினோதமான ஸ்டேஷன் பெயர்கள். பளபளப்பான சௌகரியமான பாதாள ரெயில்...

யூனிவர்ஸிடேட் ஸ்டேஷனில் இறங்கி பூமி மட்டத்திற்கு மேல் வந்து நடந்தே அந்த மியூசியத்திற்குச் சென்றார்கள். வசந்த் தன் சிறிய காமிராவில் பல படங்கள் எடுத்தான்.

நெட்டையான ஜன்னல்கள் கொண்ட பழையகாலத்து சிவப்புக் கட்டடம். சுற்றிலும் தாராளமாகப் புல்வெளிகள். ஜெர்மானியர்கள் சுதாரித்த நிலையில் கண்டதைத் தின்று கொண்டும் ஆரோக்கியமான குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டும் அங்கங்கே சிதறியிருக்க, கணேஷும் வசந்தும் டிக்கெட் வாங்கிக்கொண்டு அந்தக் கட்டடத்தின் மாடிப்படிகளில் ஏறிச் சென்றார்கள்.

எழுத்துலக வேந்தன் சுஜாதா

அறை அறையாக சித்திரங்கள். மிகப் பழைய காலத்திலிருந்து தற்காலம் வரை பற்பல சித்திரக்காரர்களின் சித்திரங்கள். அழகாக கலையுணர்வுடன் பிரேம் போடப்பட்டு நல்ல வெளிச்சத்தில் நூற்றுக்கணக்கான சித்திரங்கள்.

ரெம்ப்ராண்டிலிருந்து ஷகால்வரை!

ரெம்ப்ராண்டிற்கு தனி அறையே இருந்தது! அவர் வரைந்த சில அதிகப் பிரசித்தமில்லாத சித்திரங்கள் அந்த அறையில் வைக்கப்பட்டிருந்தன. "என்ன படம் பாஸ்! கொச கொசன்னு. இதெல்லாம் ஆர்ட்டா?"

"உனக்கு ஆர்ட், அந்தக் கடையில் இருந்த படங்கள்தான். இல்லையா?"

"பார்க்கறதுக்கு சுமாராவாவது இருக்க வேண்டாமா?"

"ரெம்ப்ராண்ட் வரைந்த சித்திரம். இந்த சித்திரம் இன்னிக்கு தேதிக்கு வித்தா ஐம்பது லட்சம் போகும்!" வசந்த் அடுத்த அறைக்குச் சென்றான்!

"அப்படியே பேசிக் கொண்டிரு. பின்னால் திரும்பிப்பார்க்காதே!" என்று குரல் கேட்டது கணேஷின் தோளருகில்.

கணேஷ் நின்றான். எதிரே படத்தின் ஃப்ரேம் கண்ணாடியில் அருகில் நின்றவன் மெலிதாகத் தெரிந்தான்.

திரும்பிப் பார்க்க நினைத்தான். "எங்களைப் பார்க்காதே. பார்த்தால் துன்பம் ஏற்படும். துப்பாக்கி இருக்கிறது!"

"சரி பார்க்கவில்லை. சொல்லு!"

"கொண்டு வந்திருக்கிறாயா?"

ஸ்டைன் ஹாஃப் சொன்னது ஞாபகம் வந்தது. 'அவர்களுக்கு நம்பிக்கை தரும்படி நடந்துகொள்.'

"கொண்டு வந்திருக்கிறேன்!"

"சரக்கு எங்கே இருக்கிறது. ஹொட்டலிலா?"

"இருக்கிறது. எங்கே என்று நான் ஏன் சொல்ல வேண்டும்?"

"எப்போது தருகிறாய்?"

"நாளைக்கு மாலை."

"இன்றைக்கு மாலை தரமுடியாதா?"

"முடியாது. நாளை மாலை. அதற்குள் பணம் முழுவதும் வரவேண்டும்!"

"பணமா?"

"ஆம்! பணத்தை வாங்கிக்கொண்டு சரக்கைக் கொடு என்றுதான் பேச்சு."

"சரி நாளைக்கு மாலை!"

"எப்படி? எங்கே வருவது?"

"அந்த விபரங்கள் அப்புறம் தெரிய வரும்."

"எப்படித் தகவல் சொல்வாய்?"

"..............."

கணேஷ் திரும்பிப் பார்த்தான். ஆள் காணாமல் போய்விட்டான். கண்ணாடி வழியாக மெலிதாகத் தெரிந்த அவன் முகம் எப்படி இருந்தது? யோசித்துப் பார்த்தான். சதுரமுகம், அஞ்சடி நாலங்குலம் இருப்பான். ப்ளாண்ட் என்று சொல்லக் கூடிய தலைமயிர். வேறு என்ன ஞாபகமிருக்கிறது?

'சரக்கு!', 'என்ன சரக்கு? இருக்கிறது என்று தாராளமாகச் சொல்லியாகி விட்டது. என்ன இருக்கிறது..? ஒரு ....வும் இல்லை.'

வசந்த் வந்தான்.

"சரியான சமயத்தில் கழண்டுட்டேடா நீ. நீ ஜெர்மனிக்கு வந்து என்ன பிரயோசனம்? முக்கியமான சமயத்தில் அம்பேல் ஆய்டறே?"

"என்ன ஆச்சு பாஸ்?"

"ஒரு ஆள் வந்து என்னை காண்டாக்ட் பண்ணான். சரக்கு கொண்டு வந்திருக்கியான்னு கேட்டான்."

"பார்த்தேன் பாஸ். தூரத்தில் இருந்து பார்த்தேன். நீங்க அவனோட படத்தை பார்த்துண்டே பேசினீங்க இல்லே?"

"நீ இருந்திருந்தா ஆளை யாவது கவனிச்சிருக்கலாம்!"

"நான் சும்மா இல்லை பாஸ்! அங்கிருந்து உங்க ரெண்டு பேரையும் ஒரு 'க்ளிக்' அடிச்சிருக்கேன்." என்று காமிராவைக் காட்டினான்!

"க்ரேட்! முதல் தடவையா ஒரு உருப்படியான காரியம் பண்ணே!"

இருவரும் அந்த மியூசியத்தை விட்டு வெளியே வந்தார்கள். எல்லாமே பிரமிப்பாக இருந்தது!

"என்ன செய்யறது பாஸ்?"

"இதை எப்படியாவது ஸ்டைன் ஹாஃப்க்குத் தெரிவிக்க வேண்டும்."

"எப்படி? அவங்க நம்பர் எதுவும் கொடுக்கலையே!"

"அவுங்களா காண்டாக்ட் பண்ணு வாங்க. ஹொட்டலுக்குப் போயிடலாம்."

ஒரு டாக்ஸி பிடித்தார்கள். "ப்ரஸிடெண்ட் வோற்றம்! என்றார்கள்."

டாக்ஸிக்குள் ரேடியோ இருந்தது. அந்த ரேடியோ சற்று நேரத்தில் உயிர் பெற்று ஏதோ ஜெர்மன் பாஷையில் சொல்ல, டாக்ஸி டிரைவர் திரும்பி,

"யூ ஹெர் கணேஷ்" என்றான்.

"யா" என்றான் கணேஷ்.

"பொலிஸ் காலிங் யூ!"

கணேஷ் ஆச்சரியத்தில் ஆழ்ந்தான். அந்த ரேடியோவில் ஸ்டைன் ஹாஃபின் குரல் ஒலித்தது. "மிஸ்டர் கணேஷ்! அவர்கள் உங்களுடன் தொடர்பு கொண்டார்கள் அல்லவா?"

"ஆம்! இது என்ன ஆச்சரியம்! டாக்ஸிக்குள் எப்படி நீங்கள் பேசுகிறீர்கள்?"

"எல்லா சானலிலும் எங்களுக்குத் தொடர்புகொள்ள வசதி இருக்கிறது. என்ன கேட்டார்கள்?"

"சரக்கு கொண்டு வந்திருக்கிறாயா?" என்று.

"என்ன சொன்னீர்கள்?"

"கொண்டு வந்திருக்கிறேன். நாளை தருகிறேன்," என்று.

(தொடர்ந்து வரும்)

# அமெரிக்க வல்லாதிக்கத்துக்கு பணியாத இரும்பு மனிதர் ஈராக் அதிபர் சதாமின் உண்மைக் கதை

# சதாம் உசேன்

## 07

"புரட்சி பண்ணினவுடனே அந்த ஏஜெண்டுகள் மேல இரக்கம் காட்டாம சுட்டுக் கொன்னு போட்டுருந்தா, இப்படி அவங்க திரும்பவும் ஆட்சிக்கு வந்திருப்பாங்களா?

நீங்க வேணும்னாலும் பாருங்க. நான் படிச்சு முடிச்சுட்டு எங்க மாமா மாதிரி ராணுவத்துல சேரப் போறேன். அவர் செய்யாம விட்டதை நான் செஞ்சு முடிப்பேன். இது என் லட்சியம்!"

சதாமின் குரலில் உறுதி இருந்தது.

இராணுவத்தில் சேர வேண்டும் என்ற எண்ணம் நாளுக்கு நாள் வலுப்பட்டதே தவிர குறையவே இல்லை.

தனது 16-வது வயதில் இடைநிலைப் பள்ளிப் படிப்பை சதாம் முடித்தான். மேலே படிக்க விருப்பம் இல்லை.

இராணுவப் பயிற்சிப் பள்ளியில் சேர விண்ணப்பம் எழுதிப் போட்டான்.

அழைப்பு வருமென்று காத்திருந்தான். இரவில் தூங்கும்போது கூட இராணுவச் சீருடையும் துப்பாக்கியும் அவன் கனவில் வந்து அலைக்கழித்தன.

ஆனால், சதாமின் எண்ணம் ஈடேறவில்லை.

"இராணுவப் பயிற்சிப் பள்ளியில் சேர போதிய மதிப்பெண்கள் வாங்காததால் உனக்கு அட்மிஷன் இல்லை!" என்று பதில் வந்தது.

சதாமுக்கு ஏற்பட்ட ஏமாற்றத்தையும் வருத்தத்தையும் வார்த்தையில் சொல்ல முடியாது.

"இராணுவத்தில் சேர எனக்குத் தகுதி இல்லையா? இராணுவத்துக்கான தகுதி தைரியத்தில் இருக்கா? மார்க்கில் இருக்கா? நாளைக்கு நான் என் திறமையாலே இராணுவத் தளபதியாகி, போருக்கு நானே தலைமை தாங்கி நடத்திட்டுப் போனா, இவங்க முகத்தை எங்கே கொண்டு போய் வச்சுக்குவாங்க?"

ஆவேசப்பட்டான். பொருமினான். மெல்ல மெல்ல மனதைத் தேற்றிக் கொண்டான்.

இராணுவத்தில் சேர முயன்று தோற்ற போதிலும், வெள்ளைக்காரர்களின் ஏஜெண்டுகளான-அரேபியர்களின் விரோதிகளான-ஈராக் ஆட்சியாளர்களை அழிக்க வேண்டும் என்ற லட்சியத்தை சதாம் கைவிடத் தயாராக இல்லை.

லட்சியம் ஈடேற மாற்றுவழி என்ன என்று தேடினான்.

அவன் தேடிய மாற்றுவழி மாமா வீட்டுக்குள்ளேயே இருந்தது...

மாமாவைத் தேடி நிறையப் பேர் வீட்டுக்கு வந்து போவார்கள். அவர்கள் இருட்டிய பிறகுதான் வருவார்கள். அவர்களில் பல புதுமுகங்கள் இருக்கும். சில முகங்கள் மட்டுமே அடிக்கடி வந்து போகும்.

அவர்கள் இரவெல்லாம் விழித்திருந்து மாமாவோடு பேசிக் கொண்டிருப்பார்கள். பேச்சு இரகசியமான குரலில் இருக்கும். பேச்சில் அரசியல் இருக்கும். அடிக்கடி துப்பாக்கியும் அடிபடும். காலையில் விழித்துப் பார்த்தால் அவர்கள் காணாமல் போயிருப்பார்கள்..!

சதாம் சிறுவனாக இருந்தபோது மாமா மற்றும் அவரது நண்பர்களின் நடவடிக்கைகள் புதிராக இருக்கும். புரிபடாமல் இருக்கும். என்ன, ஏது என்று விசாரித்தாலும் விளக்கம் கிடைக்காது.

அவன் வளர வளர விஷயம் புரிந்தது.

அரசாங்கத்தின் அடக்குமுறைக்குப் பயந்து இரகசியமாக இயங்கிக் கொண்டிருக்கும் மறுமலர்ச்சிக் கட்சியில் மாமா உறுப்பினராக இருக்கிறார். அத்துடன் கட்சியில் சிறு பதவியும் அவருக்குத் தரப்பட்டிருக்கிறது. அவரது கட்சித் தோழர்கள்தான் யார் கண்ணிலும் படாமல் இருளில் வந்து, மாமாவுடன் அரசியல் நடவடிக்கைகள் பற்றி ஆலோசனை நடத்திவிட்டு, விடிவதற்குள் வெளியேறிச் சென்று விடுகிறார்கள்.

புதிர் அவிழ்ந்தவுடன், மறுமலர்ச்சி கட்சி பற்றித் தெரிந்து கொள்வதில் அவன் ஆர்வம் காட்டினான்.

இயக்கம் ஏக அரபு தேசக் கொள்கையைப் பின்பற்றுவதால் அது எல்லா அரபு நாடுகளிலும் கிளைகளைத் தோற்றுவித்துள்ளது. பகிரங்கமாகச் செயல்பட உரிமை இல்லாததால், அது தலைமறைவாக இயங்கி வருகிறது. அரசாங்கம் தன்னிடம் பொலிஸ், இராணுவம் போன்ற வன்முறை எந்திரங்களை வைத்திருப்பதால், ஆட்சியாளர்களைத் தூக்கி எறிய வன்முறை வழியில் துப்பாக்கி ஏந்தினால் தான் முடியும் என்பதில் அது அசைக்க முடியாத நம்பிக்கை வைத்திருக்கிறது.

மறுமலர்ச்சிக் கட்சியைப் பற்றி இதெல்லாம் தெரிந்து கொண்டவுடன் அதில் சேர்ந்து, துப்பாக்கி ஏந்திப் போராடி ஈராக் ஆட்சியாளர்களை ஒழிக்க வேண்டும் என்று சதாம் துடித்தான்.



ராஜையா

கட்சியில் சேரும் விருப்பத்தை மாமாவிடம் சொன்னான். மாமா மகிழ்ச்சி அடைந்தார். சதாம் தனது 20வது வயதில் மறுமலர்ச்சிக் கட்சியில் சேர்ந்து இரகசிய அரசியல் நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கினான்.

மாமா அவனுக்கு நிஜத்துப்பாக்கியால் சுடக் கற்றுக் கொடுத்தார். பத்து வயதிலிருந்தே துப்பாக்கி பிடிக்க வேண்டும் என்று துடித்துக் கொண்டிருந்த சதாம் மிக விரைவிலேயே போராயுதங்களைக் கையாளப் பழகிவிட்டான்.

ஈராக் ஆட்சியாளர்களை தன் கைப்பட ஒழித்துக் கட்டும் நாளை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான்...

அவர்கள் ஒழிக்கப்படும் நாளும் வந்தது... ஆனால்......

ஒழித்துக் கட்டும் பாக்கியம்தான் அவனுக்குக் கிடைக்காமல் போய்விட்டது.

•••

கூண்டுக்குள் அடைபட்ட புலிபோல் குறுக்கும் நெடுக்கும் நடந்து கொண்டிருந்தான் சதாம். இரத்தம் கொதித்தது அவனுக்கு.

'இது பச்சைத் துரோகம்' என்று உதடுகள் முணுமுணுக்க, முஷ்டியை மடக்கி மேஜையில் ஓங்கிக் குத்தினான்.

சதாமின் ஆத்திரத்தில் நியாயம்இருந்தது.

எகிப்து, சிரியா ஆகிய இரு நாடுகளும் சமீபத்தில் ஒரே நாடாக இணைந்தபோது அதை வரவேற்றவன் அவன்.

வெள்ளைக்காரர்களின் சதியால் சிதறடிக்கப்பட்டிருக்கும் அரபு நாடுகளெல்லாம் ஒரே தேசமாக இணைய இது ஒரு முன்னோடி என்று அதைக் கொண்டாடியவன் அவன். ஆனால், எகிப்து-சிரியா இணைப்பு இன்னொரு 'ஏகாதிபத்திய எதிர்ப்பு' மையமாக வலுப்பட்டு வரும் என்று அஞ்சிய இங்கிலாந்தும், அமெரிக்காவும் அந்த இணைப்பை உடைத்தெறிய அடாவடித்தனமாய் இராணுவத்தை அனுப்பி வைத்தன. அதைத்தான் சதாமினால் தாங்கிக்கொள்ள முடியவில்லை.

எரிகிற நெருப்பில் எண்ணை ஊற்றுவது போல, "எகிப்து-சிரியா கூட்டைத் தகர்க்க, ஆங்கில-அமெரிக்கப் படைகளுக்கு துணையாக ஈராக் இராணுவம் அனுப்பிவைக்கப்படும்!" என்று கூறி ஈராக் அரசு தன் எஜமான விசுவாசத்தைக் காட்டிக்கொள்ள முனைந்தபோது சதாம் கொந்தளித்து விட்டான்.

(தொடர்ந்து வரும்)



படிப்பகம்

www.padippakam.com

# முள் நிலவு 13

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார் எழுதியுள்ள 'விறு விறு காதல்கதை.... உங்கள் இதயத்தில் இந்தக் கதையின் நாயகி 'நிலா'வுக்கும் இடம் ஒதுக்கியே தீரவேண்டும்!**

அந்த விடிகாலை நேரத்தில் ஏர்போர்ட் ஏதோ ஒரு வி.ஐ.பி.யின் கல்யாணம் நடக்கும் மண்டபம் போல் களை கட்டியிருந்தது.

லௌஞ்சில் போடப்பட்டிருந்த நூற்றுக்கணக்கான பாலிவினைல் ஈஸ்ட்மென் கலர் நாற்காலிகளில் பயணிகள் நிரம்பி வழிய மறைவாய் ஒளிந்திருந்த ஸ்பீக்கர்கள்-பறக்கப் போகும், இறங்கப் போகும் விமானங்களைப் பற்றிச் சொல்லிக்கொண்டிருந்தன. ஒரு விமானம் 'டேக்-ஆஃப்'பிற்காக ரன் வேயில் தவம் செய்தது. ஒரு சபேடேரியாவின் பக்கத்தில் நின்றுகொண்டிருந்தார்கள்



வெ..டேஷ்வரன், சிவராஜன், சௌந்தரம், நிலா. கைகளில் அட்டை டம்ளர்களில் காப்பி புகைந்துகொண்டிருந்தது.

சிவராஜன் கேட்டார்:

"ஃப்ளைட் சரியான நேரத்துக்கு வந்துடுமா..?"

"இண்டிகேஷன் சைன் போர்டில் 'ரைட் டைம்'ன்னு போட்டிருக்கான். எப்படியும் அரைமணி நேரம் லேட்டாயிடும்..."

"இப்ப கரெக்ட் டைம் என்ன?"

"ஆறு இருபது."

"இன்னும் நாற்பது நிமிஷம் இருக்கே..."

"லௌன்ஞ்சுக்கு போய் உட்கார்ந்து கல்யாணத்தைப் பத்திப்பேச ஆரம்பிச்சா... அந்த நாற்பது நிமிஷமும் காணாமே போயிடும்..."

"உங்க மனைவியும் ஏர்போர்ட்டுக்கு வந்திருந்தா எங்களுக்கு ரொம்பவும் சந்தோஷமாயிருந்திருக்கும்... நாங்க வீட்டுக்கு வந்து சமாதானம் பண்ணியிருந்தா ஒருவேளை அவங்க ஏர்போர்ட் வந்திருக்கலாம்..."

வெங்கடேஷ்வரன் சொன்னதைக் கேட்டு சிவராஜன் புன்னகைத்தார்.

"நிலாவோட அம்மா ஒரு 'அடமண்ட்'டைப். நாம கெஞ்சினா மிஞ்சற ரகம். பட்டும் படாம விட்டுட்டா தானாக வழிக்கு வந்துடுவா... ரெண்டு நாளைக்கு முன்னாடி நிலாவோட பேச்சை எடுத்தாலே 'ஹிஸ்டீரியா' பேஷண்ட்மாதிரி கத்திட்டிருந்தா! இன்னிக்குக் காலையில அந்தக் கத்தல் இல்லை... பேச்சு ஒரு நிதானத்துக்கு வந்திருந்தது. ஆனா ஒரு வீம்புக்காக பிடிவாதம் பிடிச்சிட்டிருக்கா... அந்தப் பிடிவாதமும் ரெண்டு நாள்ல சரியா போயிடும்..."

"கல்யாணத்துக்கு வருவாங்கள்ள..?"

"கண்டிப்பா...!" சிரித்த சிவராஜன்,... "ஒருவேளை இன்னிக்கு சாயந்தரமே மாப்பிள்ளையைப் பார்க்க உங்க வீட்டுக்கு வந்தாலும் வரலாம்..." என்றார்.

"வந்தா... அதைவிட ஒரு பெரிய சந்தோஷம் எங்களுக்கு எதுவுமே இருக்கமுடியாது..."

காப்பி வயிற்றுக்குள் போயிருக்க அட்டை டம்ளர்கள் நசுக்கப்பட்டு 'வேஸ்ட் பின்'னுக்கு போயின.

லௌன்ச் ஜனநெரிசலில் மெதுவாய் நடந்து காலியாய் இருந்த பாலிவினைல் நாற்காலிகளுக்கு வந்து சாய்ந்தார்கள்.

நேரம் 6.45ஐத் தொட்டிருந்தபோது ஸ்பீக்கரில் அந்த குலாப் ஜாமூன் குரல் ஆங்கிலத்தில் ரகசியம் பேசுவது போல் கேட்டது:

"விமானம் ஈ.ஏ. எய்ட் செவன் நைன் குறிப்பிட்ட நேரமான ஏழு மணிக்கு விமான நிலையம் வந்து சேரும்."

வெங்கடேஷ்வரன் நிலாவைப் பார்த்து கண்சிமிட்டினார். "நிலா! நீ என்னோட பையனை மணவறையில்தான் முதல் முதலா பார்ப்பேன்னு சொல்லிட்டிருந்தே...! இன்னிக்கு அதுக்கு முன்னாடியே இந்த ஏர்போர்டிலேயே பார்க்கப் போறே..! பார்த்துட்டு மாப்பிள்ளையைப் பிடிக்கலேன்னு சொல்லிடாதே..."

"மாமா! என்னோட கவலையே இப்போ வேற."

"என்ன...?"

"அவரும் என்னைப் பார்க்கலைதானே...?"

"ஆமா..."

"ஒருவேளை இன்னிக்கு அவர் என்னைப் பார்த்துட்டு கல்யாணம் கான்சல்ன்னு சொல்லிட்டா...?"

"சும்மா ஒரு பேச்சுக்காகக் கூட அப்படிச் சொல்லாதேம்மா... நீ எங்க குடும்பத்துக்குக் கிடைச்ச அபூர்வ வைரம். உன்னோட பேர்க் கேத்த மாதிரி நிஜமாவே நீ, நிலாதான்...!"

"அய்யோ மாமா...! காலங்கார்த்தாலே இப்படி குளிர் அடிக்கிற வேளையில ஒரு பெரிய 'ஐஸ் பார்'ஐ தூக்கி என் தலையில வைச்சா என் கதி என்னாகறது...?"

நிலா சொல்லி எல்லோரும் சிரித்துக் கொண்டிருக்கும்போதே.

லௌஞ்சில் உட்கார்ந்திருந்தவர்களில் சிலபேர் கைகளைக் காட்டிக்கொண்டே பரபரப்புடன் எழுந்தார்கள்.

"ப்ளைட் ஈஸ் அப்பியரிங்..."

கீழ்த்திசை வானத்தில்- சூரியனின் ஆரஞ்சு நிற வெளிச்சத்தில் EA-879 விமானம் ஒரு வெள்ளிப் பறவையாய்த் தெரிந்தது.

நிலாவின் உடம்பு முழுவதும் ஒரு அவசரப் பிரகடனம் செய்யப்பட்ட தேசம் மாதிரியான ஒரு பரபரப்புக்கு உட்பட்டது. இரத்தம் தறிகெட்டு ஓட- வியர்வைச் சுரப்பிகள் அத்தனையும் விழித்துக்கொண்டு செயல்பட-நெற்றி, பிடரி, கழுத்து எண்ணெய் பூசியது போல் மினுமினுத்தது.

'பொறு! மனமே பொறு!'

'எதுக்காக இந்த பயலாஜிகல் ஆர்ப்பாட்டம்?'

'இயல்பாய் இரு...'

'இப்படி என்னை அவஸ்தை படுத்தாதே....!'

இடது உள்ளங்கையில் வைத்திருந்த பவுடர் தெளித்த கர்ச்சீப்பால் முகத்தை ஒற்றிக்கொண்டு பார்வையை வளைத்துக் கொண்டு போனாள்.

அந்த வெள்ளிப்பறவை இப்போது கொஞ்சம் புஷ்டியாய் தெரிந்தது.

நிலாவின் இதயத்துடிப்பு இப்போது உச்சத்துக்குப் போயிற்று.

'அவரைப் பார்த்ததும் முதலில் என்ன பேசுவது?'

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஸ்குமார்**

'முதலில் அவர் பேசட்டும். அவர் என்ன பேசுகிறார் என்று பார்த்துக்கொண்டு நாம் வாயைத் திறக்கலாம்...'

ஆகாயத்தை அரைக்கிற மாதிரியான சத்தத்தோடு விமானம் இப்போது பார்வைக்குக் கிடைத்தது.

சரியாய் ஏழு மணிக்கெல்லாம் ரன்வேயை மோப்பம் பிடித்தது விமானம்.

நிலாவின் கால்கள் பிழிந்த துணியாய்த் துவண்டன.

நிலா பார்த்துக்கொண்டிருக்கும்போதே ரன்வேயின் கோடியில் கால் பதிக்க முயன்ற விமானம் மறுபடியும் உயரே எம்பியது. உயரத்தைக் கொஞ்சம் கொஞ்சமாய் அதிகரித்து பின் கண்ட்ரோல் டவருக்கு மேலே பறந்தது. லௌஞ்சில் இருந்தவர்கள் எல்லோருமே குழப்ப முகங்களோடு ஒருத்தரையொருத்தர் பார்த்துக் கொண்டார்கள்.

"என்னாச்சு..? ப்ளைட் ஏன் லேண்ட் ஆகலை...?"

"ஏதாவது டெக்னிகல் ப்ராப்ளமா...?"

"கண்ட்ரோல் டவர் சிக்னல் பிராப்பரா கிடைச்சிருக்காது..."

"ஸ்பீக்கர்ல ஏதோ அநௌன்ஸ்மெண்ட் வருது. என்ன சொல்றாங்கன்னு கேட்போம்..."

ஸ்பீக்கரில் ஒரு குயில் ஆங்கிலத்தில் கூவியது.

"EA 879 விமானம் கீழே இறங்குவதில் ஒரு சின்ன சிக்கல் ஏற்பட்டுள்ளது. விமானம் இறங்குவதற்கு உபயோகப்படும் சக்கரங்கள் வெளியே வருவதில் டெக்னிகல் ப்ராப்ளம். விமானத்தை சில நிமிஷங்கள் வானத்தில் பறக்க வைத்து சரி செய்து விடுவார்கள். பயணிகளை வரவேற்க் வந்திருப்பவர்கள் கலவரப்படாமல் இருக்கும்படி விமான நிலைய நிர்வாகம் கேட்டுக்கொள்கிறது."

சௌந்தரம் வெங்கடேஷ்வரனிடம் பதறினாள்.

"ஐயையோ...! என்னங்க...இது...?"

"பதற்றப்படாதே சௌந்தரம்...! விமானம் கீழே இறங்கி ரன்வேயில் பதியும்போது சக்கரங்கள் வெளியே வரணும். வரலை. இது பெரும்பாலும் ஏற்படற கோளாறுதான். கொஞ்ச நேரத்துல சரிப்படுத்திக்கிட்டு கீழே இறங்கிடுவாங்க... கவலைப்பட ஒண்ணுமில்லை..."

"நம்ம பையன் வர்ற ஃபிளைட்டுக்கா இப்படி ஒரு சிக்கல் வரணும்...?"

கண்ட்ரோல் டவர்க்கு அப்பால் பறந்து போன விமானம் சாவகாசமாய் ஒரு அரை வட்டம் அடித்துக்கொண்டு விமான நிலையத்தை நோக்கி வந்தது.

ஸ்பீக்கரில் இன்னமும் அந்த அறிவிப்பு கேட்டுக் கொண்டிருந்தது. "கோளாறு சரி செய்யப்பட்டுவிடும். பயணிகளை வீரவேற்க வந்தவர்கள் கலவரப்படாமல் இருக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்...."

நிலா உயர்த்திய தலையைத் தாழ்த்தாமல் பதை பதைக்கிற இதயத்தோடு அந்த விமானத்தையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

ஆணியடித்த மாதிரியான பார்வை!

பக்கத்தில் நின்றிருந்த சிவராஜன் நிலாவின் தோளைத் தொட்டார்.

"பயப்படாதேம்மா...! ஃப்ளைட் சேஃப்பா லேண்டாயிடும். இது சாதாரண டெக்னிக்கல் எரர். கொஞ்ச நேரத்துல சரி பண்ணிடுவாங்க."

"அப்பா..."

"என்னம்மா...?"

"நீங்க என்னதான் சொன்னாலும் மனசுக்குள்ளே 'திக் திக்'ன்னு இருக்கப்பா..."

"நல்ல பொண்ணும்மா... நீ..? படிச்ச நீயே இப்படி கலவரப்பட்டா எப்படி...?"

சௌந்தரம் அப்போதுதான் வெடி குண்டைப் பற்ற வைத்த மாதிரியான அந்த வாக்கியத்தைப் பிரயோகித்தாள். "இந்தக் கல்யாணப் பேச்சை எந்த நேரத்துல ஆரம்பிச்சு தொலைச்சோமோ தெரியலை...? எதையோ மடியில கட்டிக்கிட்டு சகுனம் பார்க்கப்போன கதையா..."

"சும்மா இரு! சௌந்தரம்..." வெங்கடேஷ்வரன் கண் ஜாடை காட்டி அதட்ட, அதை அவள் பொருட்படுத்தாமல் பேசிக்கொண்டே போனாள்.

"எதுக்குமே ஒரு அமைப்பு வேணும். கால்பட்ட இடம் துலங்கணும்... இப்படியா எந்தக் காரியத்துக்குப் போனாலும் விளங்காத துக்கரியாட்டம்...!"

"சௌந்தரம் நீ பேசாமே இருக்க மாட்டே...! எதுக்கோ எதையோ முடிபோட்டு பேசறது கொஞ்சம்கூட சரியில்லை...! ஃப்ளைட்ல ஏற்பட்ட கோளாறுக்கு யார் யாரை என்ன சொல்ல முடியும்?"

சௌந்தரம் கண்களில் நீருடன் கணவரை ஏறிட்டாள். "எனக்கென்னமோ இந்தக் கல்யாணம் சரியாப் படலைங்க... பேச்சை ஆரம்பிச்ச தினத்திலிருந்தே ஏதேதோ பிரச்சனைகள். இவ ஜாதகம் நல்ல ஜாதகமா இருக்காதுங்க..."

"அத்தே...!"

"நீ பேசாதே..."

நிலா விதிர்த்துப்போய்ப் பார்க்க, சிவராஜன் சௌந்தரத்தை ஏறிட்டார்.

"வார்த்தைகளைக் கொட்டறதுக்கு முந்தி கொஞ்சம் யோசனை பண்ணுங்கம்மா. வார்த்தைகளைக் கொட்டிட்டா அப்புறம் எடுக்க முடியாது. உங்களுக்கு மட்டும்தான் பேசத் தெரியும்ன்னு நினைச்சு பேசிட்டிருக்காதீங்க... ஃப்ளைட்ல ஏதோ கோளாறு. அது கொஞ்ச நேரத்துல சரியாகி ஃப்ளைட்டும் பத்திரமா கீழே இறங்கப் போகுது. அதுக்குள்ளே எம் பொண்ணை துக்கிரி அது இதுன்னு பேசறது கொஞ்சம் கூடச் சரியில்லை..."

வெங்கடேஷ்வரன் சமாதானப் படுத்தினார். "சிவராஜன்! தயவு பண்ணி என்னோட ஒய்ஃப் பேசினதை தப்பா எடுத்துக்காதீங்க. அவ கொஞ்சம் எமோஷனல் டைப்.. ப்ளீஸ் வார்த்தைக்கு வார்த்தை பேசிட்டிருந்தா அது வேண்டாத விபரீதத்துல போய் முடியலாம். பேசாமே இருங்க..."

நிலா நொறுங்கிப்போய் வானத்தில் வட்டமடித்துக் கொண்டிருக்கும் விமானத்தையே பார்த்துக்கொண்டிருக்க- சௌந்தரம் முகத்தைத் திருப்பிக்கொண்டு நின்றாள்.

பத்து நிமிஷ நேர வேண்டாத மௌனத்திற்குப் பிறகு- ஸ்பீக்கரில் அந்த அறிவிப்புக் கேட்டது.

(அடுத்தவாரமும் நிலவு வரும்)

---

# கவியரசுவின் சுயசரிதை 15

**கவியரசு கண்ணதாசன் எழுதிய—அவரது சுயசரிதத்தின் முக்கிய பக்கங்கள் உங்கள் முன் விரிகின்றன. 'எப்படி வாழ வேண்டும் என்பதற்காக அல்ல; எப்படி வாழக்கூடாது என்பதற்கான வழிகாட்டிகள்' இவை....**

சிறையிலிருக்கும் வீரர்களுக்குத் தினமும் பணியாரம் செய்து அனுப்பும் திருச்சி நகரப் பிரமுகர்கள், ஒவ்வொருவேளைச் சாப்பாட்டிற்கும் அவனை ஆலாய்ப் பறக்க வைத்தார்கள்.

இரண்டு நாட்களுக்கு ஒருமுறை வழக்கு நடந்துகொண்டே இருந்ததால் அவன் அடைந்த துன்பங்கள் அதிகம்.

ஒவ்வொரு வேளையும் யாரிடமாவது சென்று கையேந்தி நிற்கவேண்டி வந்து விட்டது.

அவனுடன் சேர்ந்த மற்றக் கைதிகளுக்கோ அதுவுமில்லை.

இந்த நிலையில் திருச்சியில் பத்திரிகை நடத்திக்கொண்டிருந்த சி.பி. சிற்றரசு, 'கல்லக்குடி வழக்கு நிதி' என்ற பெயரில் ஒரு நிதியைத் தன் பத்திரிகை வாயிலாகச் சேர்த்து வந்தார்.

அந்த நிதியில் காலணாகூட வழக்கு நடத்தவோ, கைதிகளின் பசியைத் தீர்க்கவோ பயன்படவில்லை.

அங்கேயும் காத்துக்கிடந்து அவன் அலுத்தான்.

தனது கஷ்ட நிலையிலும் அன்பில் தர்மலிங்கம் ஓரளவு அவனுக்கு உதவினார்.

அந்த நான்கு மாதங்கள்- எழுத்திலே சுருங்கிவிட்ட அந்த நான்கு மாதங்கள்- அவன் இதயத்தை வேக வைத்த மாதங்களாகும்.

ஊருக்கு ஊர் தனக்கென்று ஒரு 'ஜால்ராக்' கூட்டத்தைச் சேர்த்துவைத்துக் கொண்டிருந்த குட்டித் தலைவர்கள் சிறையிலும்கூட ஜீவரசம் அருந்திக் கொண்டிருந்தார்கள்.

ஒரு தயிர்சாதப் பொட்டலத்தைப் பிரித்துவைத்துக்கொண்டு, பசியெடுத்த காக்கைபோல் அதை விழுந்து விழுந்து சாப்பிட்டு அவன் அரை வயிற்றைக் காத்துக் கொண்டிருந்தான்.

நிதிப்பணங்கள் எங்கேயோ போய் முடங்கிவிட்டன.

வழக்கறிஞருக்குப் பணம் கொடுக்கப் படவில்லை.

அதனால் சில வாய்தாக்களுக்கு அவர் வரவுமில்லை.

அந்த வழக்கிற்கே சம்மந்தமில்லாத சிலரும் அந்த வழக்கில் மாட்டிக்கொண்டிருந்தார்கள்.

அசல் போராட்ட வீரர்கள் பலர் எங்கோ ஓடி மறைந்து விட்டதால், மாடு விற்கப்போன சூசையையும், வழியிலே போய்க்கொண்டிருந்த பலரையும் பொலிசார் அந்த வழக்கிலே பிணைத்திருந்தார்கள்.

147-வது செக்ஷன்படி சட்ட விரோதமான கூட்டமென்று நிரூபிப்பதற்காக அவர்கள் பலரையும் பிடித்திருந்தார்கள்.

வழக்கறிஞர் கவனிக்காமல் விட்டதாலும் பொலிஸ் தரப்பு சுறுசுறுப்பாக இருந்ததாலும் அப்பாவிகளும் சேர்ந்து தண்டிக்கப்பட்டார்கள்.

பிறந்த வீட்டிலே மனைவி மக்களை விட்டுவிட்டு திருச்சித் தெருக்களிலே அனாதைபோல அலைந்துகொண்டிருந்த அவன், வழக்கு சீக்கிரம் முடிந்துவிடாதா என்று ஏங்கினான்.

வழக்கு மேலும் இரண்டு மாதம் நடக்கும்



என்ற நிலை இருந்தபோது அவன் சேலத்திற்குப் புறப்பட்டுப் போனான்.

அங்கே அவனுக்கு வரவேண்டிய பாக்கி எதுவுமில்லை.

தன் நிலைமையைச் சொல்லி ஒரு ஐநூறு ரூபாயாவது கொடுக்கும்படி டி. ஆர். சுந்தரத்திடம் கெஞ்சினான்.

"நான் பணம் தர முடியாது" என்று அவர் கண்டிப்பாக மறுத்துவிட்டார்.

ஏக்கத்தோடும் கண்ணீரோடும் அன்று மாலையே அவன் ஊருக்குப் புறப்படத் தயாரானான்.

மாலையில் டி. ஆர். சுந்தரம் ஒத்திகை விடுதிக்கு வந்தார்.

அவன் விடைபெற்றுக் கொள்வதற்காக அவரிடம் சென்றான்.

அவனைக் கண்டதும் அவர் மனம் இளகிற்று:

"ஒரு முழுப்படத்துக்கு கதை வசனம் எல்லாம் எழுதுகிறாயா?" என்று அவர் கேட்டார்.

"எழுதுகிறேன்!" என்றான் அவன்.

ஒரு ஐநூறு ரூபாய் கொடுக்கும்படி மேனேஜரிடம் சொன்னார்.

"சேலத்திலேயே தங்க வேண்டும்; வாய்தாவுக்கு மட்டும் போய் வரலாம்!" என்ற நிபந்தனையின் பேரில் அவனை அவர் வழியனுப்பினார்.

மறுநாளே வாய்தாவை முடித்துக் கொண்டு அவன் குடும்பத்தோடு சேலத்துக்கு வந்து சேர்ந்தான்.

இரண்டு மாதங்களில் எட்டுநாள் வாய்தாவிற்காகப் போய்வந்தான்.

'இல்லறஜோதி' என்ற படத்திற்கான கதை-வசனம், பாடல்களை எழுதி முடித்தான்.

வாழ்க்கைக் கவலை குறைந்தாலும் வழக்குக் கவலை அதிகமாகவே இருந்தது.

பல தடவை இரயிலிலே தூங்கி, சேலம் வரவேண்டிய அவன் திருப்பூருக்குப் போயிருக்கிறான்.

இரயிலை விட்டுவிட்டுத் திண்டாடியிருக்கிறான்.

தன்னுடைய அசதி, மறதி, செம்மைப் பாடற்ற தன்மை இவற்றுக்காக அவன் மிகவும் வருந்தினான்.

கடைசியில் தீர்ப்புச் சொல்லுவதற்கு இரண்டுநாள் முன்னதாக குடும்பத்தினரைக் கொண்டுபோய்க் கிராமத்தில் விட்டுவிட்டு, சேலம் வீட்டையும் காலிசெய்துவிட்டு திருச்சிக்கு வந்து சேர்ந்தான்.

அன்று தீர்ப்பு!

சப்-டிவிஷனல் மாஜிஸ்ட்டிரேட் கோர்ட்டின் முன்பு சுமார் 50 போர்தான் கூடியிருந்தார்கள்.

மாலை 5 மணிக்குத்தான் நீதிபதி தீர்ப்பை வாசித்தார்.

அவனுக்கும் அவன் நண்பர்களுக்கும் ஒரே மாதிரியாக ஒன்றரை ஆண்டுக் கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது.

விடுதலையாகி வெளியிலேயே இருந்த பெருந்தலைவர்களில் ஒருவர்கூட அன்று அவர்களை வழியனுப்ப வரவில்லை!

ஒரு பொலிஸ் வேன் அந்த அனாதைகளை ஏற்றிக்கொண்டு திருச்சி மத்திய சிறைக்குப் புறப்பட்டது.

(சரிதம் தொடரும்)



படிப்பகம்

www.padippakam.com

சிவப்பிரகாசம் ஐந்தாறு வருடங்களாகத் தேடி அலைந்த பொருத்தமான வரனின் சாதகத்தை இப்போதான் தரகர் கொடுத்து விட்டுப் போயிருந்தார்.

"சிவகாமி! பொடியன் பாங்கிலை வேலையாம். றோயல் பாங்க் எண்டு பெரிய பாங்க். சாந்தியும் நல்ல வேலை செய்யிற மாப்பிள்ளை வேணுமெண்டு ஒற்றைக் கால்லை நிண்டவள். பொடியன் வாற கிழமை இஞ்சைவந்து தாலி கட்டுவானாம். பிறகு ஸ்பொன்சரிலை கூப்பிடுவானாம்..." என்று மகிழ்ச்சியுடன் மனைவியிடம் விவரத்தைச் சொன்னார் சிவப்பிரகாசம்.

# மயக்கம்



"ஆண்டவா! பிள்ளைக்கு இருபத்தெட்டு வயதாச்சு. ஏதோ நல்லபடி நடந்து முடிஞ்சிடோணும். அது சரி இப்ப யாருக்கும் இது பற்றி மூச்சு விடாதேங்கோ. பொடியன் கனடாவிலை பாங்கிலை வேலை செய்யிறான் எண்டால் எங்கடை சனத்துக்கு பொறுக்குமோ? மாப்பிள்ளையின்ரை தாய் தகப்பனட்டைப் போய் இல்லாத பொல்லாத எதையாவது சொல்லிக் குத்தி விடுங்கள். மாப்பிள்ளை வந்து எல்லாம் சரி எண்டால் பிறகு சொல்லலாம்!" என்று சிவகாமி தன் பங்கில் நியாயமாகப்பட்டதைப் பெருமூச்சுடன் சொல்லிக் கொண்டாள்.

கோட் சூட்டுடன் வாட்டசாட்டமாக மாப்பிள்ளை சுரேஷ் வந்த கோலத்திலேயே சாந்திக்கு அவனைப் பிடித்துவிட்டது. திருமணம் இனிதே முடிந்து சுரேஷ் கனடா போகும் நாள் வந்தது. சாந்தி கண்ணீர் அருவியாகப் பொழிய விம்மிக் கொண்டிருந்தாள்.

"உங்களுடைய பாங்கில், திருமணமென்றாலும் இரண்டு கிழமைதான் லீவா?" என்று சுரேஷை விக்கலூடே கேட்டாள் சாந்தி.

"கனடாவிலை வேலை கிடைக்கிறது எவ்வளவு கஷ்டம் தெரியுமே? இது நான் நாலைந்து வருஷமாத் தொடர்ந்து செய்யிறன்.

**கோட் சூட்டுடன் வாட்டசாட்டமாக மாப்பிள்ளை வந்த கோலத்திலேயே சாந்திக்குப் பிடித்துவிட்டது!**

நான் போகாட்டில் எங்கடை தமிழ்ப் பொடியளே அந்த வேலைக்கு நீ முந்தி நான் முந்தி எண்டு போட்டி போடுங்கள். பிறகு நான் நாயலைச்சல்தான் அலைய வேணும்!" என்று தனது நிலையை விளக்கினான் சுரேஷ்.

"பாங்கிலை வேலை செய்யக்கூடியளவு எல்லாரும் படிச்சிட்டு வேலை இல்லாமல் கஷ்டப்படுகினமா?" என்று அங்கலாய்த்தாள் சாந்தி.

"பாங்கிலை என்ன கிளீனிங் தானே செய்யிறன். அதுக்கேன் பெரிய படிப்பு? அங்கே எங்கடை சனம் எவ்வளவு கஷ்டப்பட்டு முறிஞ்சு முறிஞ்சு வேலை செய்யுதுகள் தெரியுமே? கூட்டுறதெண்டாலென்ன துடைக்கிறதெண்டாலென்ன: எதெண்டாலும் ரெடி எண்டு வேலை செய்து காசனுப்ப இஞ்சை சனம் வெளிநாட்டுக் காசென்று

**அல்வை பிரசன்னா-கனடா**

யோசனையில்லாம சோக்கடிக்குதுகள். வெளிநாட்டுக் காசையும் ஆக்களையும் பாத்திட்டு வெளியே தெரியிற போலியிலை மயங்கிறதை விட்டிட்டு உள்ளே நுழைஞ்சு பார்த்தால்தான் எங்கடை சுயரூபம் எவ்வளவு கஷ்டமானதெண்டு தெரியும்."

சுரேஷ் ஏறக்குறைய ஒரு மேடைப்பேச்சாளன்போல் ஆவேசமாக முழங்கிக் கொண்டிருக்க, சாந்தி ஈனஸ்வரத்தில் 'ஊம்' கொட்டிக்கொண்டிருந்தாள். அவளது இன்பக் கற்பனைகளெல்லாம் டாட்டா காட்டிக்கொண்டு தொலைதூரம் போய்கொண்டிருந்தது.

---

# பந்தம்



பச்சைக் கம்பளம் போர்த்தப்பட்டது போல காட்சியளித்த தேயிலை மலைகளுக்கிடையில் பம்மி பதுங்கி 'கள்ளன், பொலிஸ்' விளையாடும் சிறுவர்களைபோல் காலைக் கதிரவனும் தலையை வெளியே காண்பித்துக் கொண்டிருந்தான்

அதனை அறிவிப்பது போல் ஸ்டோருக்குள் இருந்து சங்கு "ம்..மோ....." என ஊதியடங்கிய பின் ஒவ்வொரு லயங்களில் இருந்தும் சில முக்காடு தலைகள் பீடியை உறிஞ்சிய வண்ணம் வெளிக்கிளம்பிக் கொண்டிருந்தன.

பதினேழு வயது நிரம்பாத 'குண்டு' என்று அழைக்கப்படும் பூபாலனும் இரவு தூங்கும்போது குடித்துவிட்டு மிகுதியாய் வைத்திருந்த பீடித்துண்டொன்றை எடுத்து பற்றவைத்துக் கொண்டவன், அடுத்த வீட்டு 'அய்யாவு'வை கண்டதும்,

"அய்யாவு, எங்க பெறட்டு களத்துக்குத் தானே..? இரு.. இரு நானும் வாறேன்." என்றவன் அய்யாவு கூடவே பெறட்டுகளத்துக்கு சென்றுவிட்டான்.

'பெறட்டுகளம்'- இங்கு தான் தோட்டத்தில் வேலை செய்யும் அனைவருக்கும் தினமும் வேலைகள் பிரித்துக் கொடுக்கப்படும். எல்லோரும் வேலைக்குப் போகும் முன்பாக காலை 6 மணிக்கு பெறட்டு களத்தில் (ஸ்டோர் முன்பாக) வந்து கூட வேண்டும். துரையும், கணக்கப்பிள்ளையும் அங்கு வந்து ஒவ்வொருவருக்கும் என்ன, என்ன வேலைகள் என்று கட்டளை இட்ட பின்னர்தான் ஏழரை அல்லது எட்டு மணிக்கு மீண்டும் வேலைக்குப் போக வேண்டும்.

பீடியை சிரமப்பட்டு உறிஞ்சி, குளிர்ந்த பனியில் விரைத்த உடம்பை இதப்படுத்திக் கொண்டான் குண்டு. 'சே.. இந்த எளவு வேலை எல்லாம் நம்மளோட முடியட்டும். நம்ம தங்கச்சியவாவது ஒழுங்கா படிக்கவச்சி ஒரு வேலக்கி சேத்துப்புடணும்," என்று தோட்டத்து பாடசாலையில் 8ம் ஆண்டு படித்துக் கொண்டிருக்கும் வசந்தாவைப் பற்றி நினைத்துக் கொண்டான்.

கான் வெட்ட பத்து பேர், மருந்து அடிக்க கொஞ்ச பேர், உரம் இட, புல் பிடுங்க என எல்லோரும் பிரித்து அனுப்பப்பட்டார்கள். குண்டுவும், இன்னும் இருவரும் ஸ்டோருக்கு தேயிலைதூள் அரைக்கும் காம்பராவுக்குள் அனுப்பப்பட்டார்கள். 'அய்யாவு'வும், இன்னுமொருவரும் துரையினுடைய மாட்டுக்கு புல் அறுத்துப் போடுவதற்காக அனுப்பப்பட்டனர்.

அய்யாவு மிகுந்த எரிச்சல்பட்டுக் கொண்டான். 'சே..குண்டுக்கு கெடச்ச ஸ்டோர் வேல எனக்கு கெடக்காம போயிரிச்சே... ஒரு ரெண்டு கெலோ அடிச்சிட்டு வந்துட்டம்னா போதும். சம்பளம் போடற வரைக்கும் சமாளிச்சுக்கலாம். ம்.. என்னசெய்ய..? குடுத்து வக்கில..' என்று தனக்குள் பெருமூச்சொன்றை விட்டுக் கொண்டான்.

'ஸ்டோரி'ல் வேலை பார்க்கும் அனைவரும் வீட்டுக்கு வரும்போது ஆளாளுக்குமாக கொஞ்சம் தேயிலைதூள் களவாக எடுத்துக் கொண்டு வருவார்கள். சேலைக்குள் மறைத்துக் கொண்டும், இடுப்பில் மறைத்துக்கொண்டும் எப்படியோ வெளியில் கொண்டுவந்து விடுவார்கள். ஒரு கிலோ தூள் 100 ரூபாவுக்கு மேல் விற்றுவிடலாம். இதில் ஸ்டோருக்குள் பொறுப்பாக இருக்கும் 'டீமேக்கரு'க்கு தெரிந்தும் நடப்பதுண்டு. அதனால்தான் அய்யாவு ஸ்டோர் வேலை தனக்கு கிடைக்கவில்லை என ஆதங்கப்பட்டான்.

அன்றும் அப்படித்தான். மாலை ஐந்து மணிக்கு குண்டு வீடு திரும்பும்போது 'டீமேக்கர்' மெதுவாக அழைத்தார். யாருக்கும் கேட்காத இரகசிய குரலில்,

"டேய்.. குண்டு சாமான் (தூள்) கொஞ்சம் இருக்கு. யாருக்கும் தெரியாம கொண்டு போய் குடுத்துட்டு காசு கொண்டுகிட்டு வா.. இந்தா.. இந்தா.. டக்குன்னு போ.." என்று அவசரப்படுத்தினார்.

குண்டு இதற்கு முன்பும் சில தடவைகள் இப்படி செய்திருக்கிறான். 'டீமேக்கரும்' சம்பந்தப்பட்டிருப்பதால் கொஞ்சம் துணிச்சலாகதான் இருக்கும்.

நாலைந்து கிலோ போல் இரண்டு கடதாசி பைகளில் அடைத்துக்கொண்டு இடுப்பில் அடித்து கொண்டவன் தனது மேலங்கியால் யாருக்கும் தெரியாதவாறு மூடிக் கொண்டவன் ஸ்டோருக்குள்ளிருந்து வெளியேறினான். துரை பங்களாவில் மாட்டுக்கு புல் அறுத்துப் போட்டுவிட்டு வீடு திரும்பிக் கொண்டிருந்த 'அய்யாவு'வும் வந்து விடவே அவனைக் காணாதவாறு ஸ்டோர் காம்பவுண்டை கடந்து போக எத்தனித்தான் குண்டு.

ஆனால் 'அய்யாவு' குண்டுவை நெருங்கி "என்ன குண்டு.. சாமான் போவுது போலருக்கே.. என்னையும் கொஞ்சம் கவனிச்சுக்க.." என்று கிசுகிசுத்தான்.

உண்மையை ஒப்புக் கொண்டால் 'அய்யாவு'வுக்கு பங்கு கொடுக்க வேண்டும் என்று எண்ணிய குண்டு- "அட ஒண்ணுமில்லய்யாவு டீமேக்கர் வேற உள்ள இருக்குது, ... தேத்தண்ணிக்குகூட இப்புட்டுண்டு எடுக்க முடியல. நீ ஒரு பக்கம்....." என்று சமாளித்தவன் காம்பவுண்ட் கேட்டில் காவல் நிற்கும் குமாரசாமி அந்தபக்கமாக போவதைக் கண்டதும் விரைவாக வெளியேறிக் கொண்டிருந்தான்... அய்யாவுவையும் பொருட்படுத்தாமல். அய்யாவுக்கு வயிற்றெரிச்சலாக இருந்தது. 'பாருவே.. எங்கிட்டயே மறைக்கிறது... இருடி.. ஒனக்கு செய்றேன் வேல...' என்று மனதுக்குள் கறுவிக் கொண்டவன் பின்பக்கமாக சென்ற காவல்காரனிடம் சொல்லி விட்டான்- அல்லது பந்தம் பிடித்துவிட்டான்.

தப்பிப்பதற்கே வழியில்லை என்ற நிலையின் குண்டு மாட்டிக் கொண்டான். ஐந்து கிலோ தேயிலை தூளுடன். டீமேக்கர் தான் கொடுத்தார், என்ற உண்மையை

**எம். சண்முகராஜா**

சொல்லியும் பயனில்லை.

விசயமறிந்த குண்டுவின் வயதான தாயும், தங்கை வசந்தாவும் லயத்திலிருந்து பதற்றத்துடன் கதறியபடி பரிதாபமாக ஓடோடிவந்தார்கள். அதற்குள் குண்டுவை ஏற்றிக்கொண்டு கிளம்பிய பொலிஸ் ஜீப் குண்டுவின் தாயையும், தங்கை வசந்தாவையும் கடந்து சென்று கொண்டிருந்தது.

"ஐயோ.. எம்புள்ளக்கி எந்தச் சண்டாளன் பந்தம் பிடிச்சானோ.. தெரியலையே அவன் நாசமா போக.." என்று குண்டுவின் தாய் கதறிக் கொண்டிருந்த சத்தம் மட்டும் அனைவரது காதுகளிலும் எதிரொலித்துக் கொண்டிருந்தது. 'அய்யாவு'வின் காதுகளிலும் தான்.

அதன்பின் குண்டு எப்போதோ ஜெயிலிலிருந்து திரும்பி வந்த போது தங்கை வசந்தா, இடுப்பில் படங்கை கட்டிக் கொண்டு தலையில் கூடையை மாட்டிக் கொண்டு ஐந்தாம் நம்பர் தேயிலை மலைக்கு வேலைக்குப் போகத் தயாராகிக் கொண்டிருந்தாள்.

---

# கண்ணோடு காண்பதெல்லாம்....

வளாகத்தின் கட்டடங்களில் மேகம் மூடிய நிழல் கவிழ்ந்து கொண்டிருந்த மாலை நேரம். தன் பாட்டுக்கு எவர் கதையையும் காது கொடுத்துக் கேளாது நீண்டதானதும் ஆழமானதுமான ஒரு மௌனத்துடன் ஓடிக் கொண்டிருந்தது மகாவலி.

தூரத்தே சஹானாவும் நித்யாவும் வருவதைக் கண்டு விட்டான் வினீத். நெஞ்சுக்



**ஷர்மிளா இஸ்மாயில்**

குள் ஒருவித படபடப்பு எழ சமாளித்துக் கொண்டான். புதிதாய் நேற்று மாலை வாங்கிய கவிதைப் புத்தகத்தை தலைப்பு 'பளிச்'சென்று தெரியும்படி வைத்துக் கொண்டு நின்றான். அவர்கள் நெருங்கியதும் "ஹாய்" என்று புன்னகைத்தான்.

சர்வ அலட்சியமாய் சஹானா அவனைக் கடந்து போய்விட்டாள். ஒரு அடிக்கண் பார்வையாவது..... ம்ஹூம்... இல்லை. நித்யா தான் நின்றாள். ஆனாலும் வினீத்தின் பார்வை சஹானாவைத் தொடர்ந்தே போனது. "கவிதைப் புத்தகமா வினீத்?" நித்யா கேட்டாள். தொடர்ந்து அவளே... "ஓ.. இப்போ கவிதைப் புத்தகமெல்லாம் வாசிக்கிறீங்களா? எப்போதிருந்து இந்த மாற்றம்?" சஹானா தள்ளி நின்று அவனையே முறைத்தாள். வினீத்தின் தொண்டை இறுகிப் போனதாய் உணர்ந்தான். சில அடிகள் முன் வந்து நின்ற சஹானா நித்யாவை 'வா' என் கண்களால் கடுமையாய் அழைத்தாள்.

சஹானாவையே சில கணங்கள் பார்த்தான் வினீத். பின்னர் அவளுக்கும் கேட்கும் படியாக, "கவிதைன்னாலே எனக்கு உயிர் தெரியுமா? என்னை என்ன ரசனையில்லாத ஜடம்னு நெனச்சீங்களா? ஏதோ பொறியியல் துறையில் என் படிப்பு தொடருதுன்னு என்னையும் ஒரு யந்திரமா நெனச்சிடாதீங்க!" என உரத்துக் கூறினான். மின்வெட்டுப் போல் ஒரு பார்வை சஹானாவிடமிருந்து தெறித்து அவன் கண்களில் விழுந்தது. சிரித்துக் கொண்டான்.

"இந்தாங்க நித்யா. படிச்சுட்டு தாங்க. உங்க ப்ரெண்ட்டுக்கும் குடுங்க. நல்ல புத்தகம். இனிமையான கவிதைகள்..." என மெதுவாகக் கூறி கையில் கொடுத்தான். அப்போதும் அவன் பார்வை சஹானாவிடமே சென்றது. கவனித்த நித்யாவுக்குள் ஒரு நெருடல். 'வினீத் சஹானாவை விரும்புகிறானோ?' அப்படித்தானிருக்கும். அவளைக் கண்டதும் அவனுள் ஏற்படும் சடுதியான மாற்றங்களை நித்யா கவனித்தே வருகிறாள். நினைத்த நித்யாவின் மனது வலித்தது.

'சஹானா இன்னொருவனுக்கு நிச்சயிக்கப்பட்ட பெண். தெரிந்தும் வினீத் இப்படிச் செய்கிறானே! வினீத் சஹானாவை நேசிக்கிறானா? அவன் செயல்களும் கண்களும் அப்படித்தான் நினைக்க வைக்கின்றன. ஐயோ.. அப்படியானால் என் காதல்? வினீத்தைக் கண்ட நாள் முதல் என் மனதில் ஏற்பட்ட நேசம்.. காதல் எல்லாம் என்னாவது?' நித்யாவின் நெஞ்சுக் கூட்டினுள் பலத்த அதிர்வுகள். அத்தோடு விடையில்லாத சில வினாக்களும்.

'இயல்பிலேயே கர்வம் பிடித்த அழகி சஹானா. வினீத்தை திரும்பியும் பார்ப்பதில்லை அவள். அவளைப் போய் இப்படி இந்த வினீத் தொடருகிறானே! இது தொடரக் கூடாது. என் காதலை அவனுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.' நித்யா தீர்மானித்தாள். இரவெல்லாம் விழித்து கண்கள் சிவக்க, நெஞ்சம் பதைக்க ஒரு கடிதம் எழுதினாள்.

பெயர் தெரியாத பெரிய மரமொன்று சிவப்பு சிவப்பாய் பூத்துக் குலுங்கியது. நிழலில் நின்றிருந்தான் வினீத். "நித்யா.." அவளைக் கண்டதும் அழைத்தான். நடுக்கத்துடன் நெருங்கினாள். கவிதைப் புத்தகத்தினுள் அவள் கடிதம். வினீத்தின் கையிலும் ஒரு கடிதம். வெறித்துப் பார்த்தாள்.

'எனக்கா? எனக்கே எனக்கா?' அவள் மனம் துடித்தது. "இ.. இந்த லெட்டரை சஹானாக்கிட்ட கொடுத்திடுவீங்களா? ப்ளீஸ்.." உதடுகளை கவர்ச்சியாக வளைத்து சிரித்தான். நெஞ்சம் வெடித்துச் சிதறி கண்களில் இரத்தமாய்க் கசிவது போன்ற உணர்வுடன் வாங்கி நடந்தாள். அவன் அவளையே பார்த்துக் கொண்டிருந்தான்.

"என்னதான் எழுதியிருப்பான்?" சஹானா கேலியுடன் சிரித்து கடிதத்தை விரித்தாள். கவிதைப் புத்தகத்தினுள்ளே உறங்கிய தன் கடிதத்தை கிழித்தாள் நித்யா. வீசினாள். "என் இனியவளே நித்யா," சஹானாவின் குரலை மீறி நித்யாவின் குரல் ஒலித்தது. "தா.. இங்கே.." பாய்ந்து பறித்தாள். படித்தாள்.

"நான் சஹானாவைக் காதலிப்பதாயும் இந்தக் கடிதம் அவளுக்கு எழுதப்பட்டதாயும் நினைத்து நீ கண்ணீர் வடித்துக் கொண்டிருப்பது எனக்குத் தெரியும்..." கடித வரிகள் தொடர்ந்தன. வினீத் அவனது காதலை தெரிவித்து அவளது நேசத்தை யாசித்து எழுதியிருந்தான்.

கடைசி வரிகளில், "நித்தி, உன்னைக் குழப்பி, கொஞ்சம் அழவைத்து வேடிக்கை பார்க்க நினைத்தேன். அதுதான் சஹானாவைத் தொடர்வது போல் நடித்தேன்... ஏமாந்து விட்டாய்.. இன்னும் அழுகிறாயா?" என்று சீண்டின. வாய்விட்டுச் சிரித்தாள் நித்யா. அவளது கடிதம் கிழிக்கப்பட்டாலும் இதயம் முழுமை பெற்றுப் பூரித்தது.

---

இனிமேலும் விட்டு வைக்க மாட்டேன். இன்னிக்கு என் கையாலதான் முடிவு...'

என்ற முடிவோடு தூக்க மாத்திரையின் தயவால் தூங்கிக்கொண்டிருக்கும் தன் கணவனை ஆயுதத்துடன் நெருங்கினாள் சுசீலா...



# என் கையால் தான் முடிவு!

"நீ ஆயிரம்தான் சொன்னாலும் என்னை நான் மாத்திக்கபோவது இல்லை."

"சுரேஷ்! நீங்க கல்யாணம் ஆனவர் இதுக்கு முன்னால அப்படி இப்படி... இருந்தாலும் இப்ப மாற்றியே ஆகணும்..."

"முடியாது!"

"ஒரு நாளா...! ரெண்டு நாளா... நெனைக்கவே அருவருப்பா இருக்கு...ப்ளீஸ்... கெஞ்சிக் கேட்கிறேங்க" குரல் கம்மியது.

"ஒரு மாசத்துக்கு முன்னே நீ சொல்லி ஒரு வருஷமா இருந்ததை நான் மாற்ற விரும்பலை... மாற்றவும் முடியாது."

சடாரென கிளம்பியவனை வெறுப்பாக பார்த்தாள் சுசீலா.

முடிவெடுத்தாள்.

அந்த முடிவில் தான் அவளால் தூக்க மாத்திரை கொடுக்கப்பட்டு, கட்டிலில் ஒரு புறமாய் சாய்ந்து படுத்துக் கிடந்தான் சுரேஷ்.

காலையில் அத்தையும் மாமாவும் கட்டிலில் கிடக்கும் சுரேஷின் அலங்கோல நிலையைப் பார்த்து... கட்டிலை நெருங்கி விட்டாள்.

மெதுவாக குனிந்து சுரேஷின் பின் பக்க கழுத்தில் கத்திரியை வைத்து... எண்ணி

**வி. இளங்கோ**

எண்ணி வெட்டினாள்...கறக்...கறக்..கறக்...

வியர்வை வழிந்த முகத்துடன் கட்டிலில் வந்து படுத்துக் கொண்டாள்.

எவ்வளவு சொல்லியும் வெட்டாமல் வைத்திருந்த 'ரம்போ' என்று சொல்லிக் கொண்டு பின்னால் மட்டும் நீளமாக வளர்த்திருந்த கணவனின் முடியை வெட்டிய திருப்தியில் சுசிலா உறங்கிப்போனாள்...!


படிப்பகம்

www.padippakam.com

## இலக்கிய நயம்

## தருவது ரசிகன்



“உண்ணவும் இல்லை
உறங்கவும் இல்லை
கண்ணே உன்னால்
நிம்மதி இல்லை!

கையணைத்து உன்னை
மெய்மறந்த நாட்கள்
நினைவுக்குள் தொல்லை!

கற்கண்டும் சீனியும்
இரண்டறக் கலந்த
உன் இதழ் சுவையை
பற்கொண்டு அறியாமல்
திருப்தியும் இல்லை!

ஐயோவென்று
மனது துடிக்குதடி!
மெய்யோவென்று
கேலி பண்ணாதே!

பந்தெனத் துள்ளும்
எழில் இரண்டு!
முத்தென மின்னும்
பல் அழகு!
சிந்திடும் தேனை
இதழ் அழகு!
சந்திக்கத் துடிக்குது
என் மனது!

பற்றிப் பிடித்ததும்
துவண்டுவிழும்
சிற்றிடை அசைய
வந்துவிடு!

நெஞ்சைக் குடையுது
நீ தந்த நினைவுகள்!
பஞ்சாய் எரியுது
நீ தொட்ட தேகம்!

எரியும் தீயில்
தேகம் தகிக்கிறது!
என் சீவன் துடிக்க
நெஞ்சுக்குள் அடைக்கிறது!

கண்கள் சிவக்கிறது
மோகத் தீயில்,
நெஞ்சில் ஈரம்
வற்றிப்போகிறது!

இதழ் கொண்டு வா
தாகம் தீர்க்க!
இதழ் கொண்டு வா
தீயை அணைக்க!

வானத்தில் ஒன்றுதான்
வட்டநிலா!
உன் தேகத்தில் இரண்டு
வட்ட நிலா!

கள்ளாய் மயக்கிய
நினைவுகள் -உனைக்
காணாமல் போனதால்
முள்ளாய் குத்துதடி!

எங்கிருக்கிறாய்
என்னவளே?

உனக்குள் என்னை
நீயும்
எனக்குள் உன்னை
நானும்,
இன்னமும் எத்தனை
நாள்தான்
தேடிக் கொண்டிருப்பது?

ஏட்டுச் சுரைக்காய்
கறிக்குதவாது!
மடலில் நீ தரும்
முத்தங்கள்
சுவைக்குதவாது!

பால் பொழியும்
நிலாவில்-உன்
இதழ் பொழியும்
அமுதை-நான்
பருகுவது எப்போது?

ஒருவரில் ஒருவர்
உறங்குவதும்,
பூவும், வண்டுமாய்
முயங்குவதும் எப்போது?

வந்துவிடு விரைவாக
கையணைக்க- இல்லையெனில்
கொன்றுவிடு என்னை
சாவணைக்க!”

மடல் முழுக்க
விரக விரதத்தால்
ஏற்பட்ட தாபம்!

மடலை படித்தவளின்
கண்களில் நீர்த்திரை!

காதலுக்கு சம்மதம்
பெறுவதற்காக
போராடி வென்று விட்டு
தேடிப் போனாள்!

ஆசையை நெஞ்சில்
பதுக்கிக்கொண்டு
ஆர்வத்தை கண்களில்
தேக்கிக்கொண்டு
ஓடிப்போனாள்!

மடல் எழுதியவன்
காணாமல் போயிருந்தான்!

மன்னருக்கு எதிராக
உள்ளூரில் சதி!

சந்தேகம் வந்ததும்
மன்னன் படைகள்
ஊரில் உள்ள
வாலிபப் பயிர்களை
மேய்ந்து முடித்தன!

மேயப்பட்ட பயிர்களில்
அவனும் ஒருவன்!

செய்தி
இடியாக இறங்கியது!

கனவுக் கோட்டைகள்
தூளாக இடிந்தன!

அவள் அழவில்லை!
காற்றுக்கு தெரியும்
கறுத்த இரவுக்கு தெரியும்
அவன் என்னாகினான்
என்பது!

அவன் இரத்தம்
உறைந்த நேரத்தில்
காற்றும் உறைந்திருக்கலாம்!

அவள் அழவில்லை
அவள் துவளவில்லை!

மறுநாள் அவள்
போர்க்கோலம் பூண்டாள்!

“ஏன் இந்தக்கோலம்
என் மகளே!”
அம்மா தடுத்தாள்.

“நீதி கேட்கப்போகிறேன்
சிலம்போடு போனால்
நீதி கிடைக்காது!
முலையறுத்து எறிந்தால்
நகரம் எறியாது!
எல்லாம் வெறும் கதை!

அப்படி எரிவதாயிருந்தால்
எத்தனை நகர்கள்
எரிந்திருக்க வேண்டும்!

வாள்முனை பேசும்
வருகிறேன் தாயே!

நாணம், அச்சம்
மடம், பயிர்ப்பு
என்பது மடமை!
ஞானம், நல்லறம்
வீரம், அன்பு
நாலுமே தேவை!
நற்குணம் அவையே!”

அம்மாவின் கண்ணில்
பெருமிதம் கலந்த சோகம்!

பின்நாளில் ஒருநாளில்
சுப்பிரமணிய பாரதியின்
பாடல் ஒலித்தது:

“நாணும், அச்சமும் நாய்கட்கு
வேண்டுமாம்
ஞான நல்லறம் வீர சுதந்திரம்
பேணு நற்குடிப் பெண்ணின்
குணங்களாம்
பெண்மை தெய்வத்தின் பேச்சுக்கள்
கேட்டீரோ!”

## நாலு குணங்கள்

நினைவுகள்
நீ எறிந்த கற்கள்!
என் மனக்குளத்தை
சலனப்படுத்துதடி!

கனவுகள்
நீ தந்த கண்ணாடி!
அதன் வழியேதான்
தினமும் உன்னை
பார்த்துக் கொண்டிருக்கிறேன்!

இதழ்களால்
நீ ஒற்றித் தந்த
கைக்குட்டையால்
என் வலிகளுக்கு
ஒத்தடம் தருகிறேன்!

நீ எழுதிய
மடல்களுக்குள்
என்னை அடிக்கடி
தொலைத்துவிடும்போது மட்டும்
நிம்மதியாக இருக்கிறேன்.

ஸ்போர்ட்ஸ்

## டெண்டுல்கருக்கு பாராட்டு



கொமன்வெல்த் கிரிக்கெட் போட்டியில் பங்குபற்றும் அன்டிகுவா அணியின் பயிற்சியாளராக இருப்பவர் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் கேப்டனும் 'ரன் குவிக்கும் இயந்திரம்' என அழைக்கப்படுபவருமான விவியன் றிச்சர்ட்ஸ்.

தனது அதிரடி ஆட்டம் மூலம் கிரிக்கெட் உலக இரசிகர்களைக் கவர்ந்த இந்த கறுப்பு நட்சத்திரம், தனக்கு இந்திய அதிரடி வீரர் சச்சின் டெண்டுல்கரின் 'பேட்டிங் ஸ்டைல்' பிடித்துள்ளதாகக் கூறுகிறார்.

கொமன்வெல்த் போட்டிகளின்போது, டெண்டுல்கரைச் சந்தித்து தனது பாராட்டுதல்களைத் தெரிவித்த றிச்சர்ட்ஸ், டெண்டுல்கரைப் பற்றிக் கூறும்போது:

“உலகின் தலை சிறந்த ஆட்டக்காரராக முன்பு பிரட்மன் இருந்தார். தற்போது அந்த வரிசையில் டெண்டுல்கர் இணைந்து விட்டார். தற்போது உலகின் தலைசிறந்த பேட்ஸ்மனாக டெண்டுல்கர் இருக்கிறார். அவரது பேட்டிங் ஸ்டைல் எனக்கு மிகவும் பிடிக்கும்” என்று தெரிவித்துள்ளார்.

## உலக சூப்பர் 8 இரத்து

வருகின்ற அக்டோபர் மாதம் அவுஸ்திரேலியாவில் நடைபெறவிருந்த 'உலக சூப்பர் 8' கிரிக்கெட் போட்டிகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

முக்கியமான சில நாடுகள் இதில் பங்குகொள்ளாததால் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

மேற்கு அவுஸ்திரேலிய கிரிக்கெட் கழகம் முதன் முறையாக நடத்தவிருந்த இப்போட்டியில் 5 இலட்சம் அவுஸ்திரேலிய டொலர் பரிசாக வழங்கப்படவிருந்தது.

அடுத்த வருடம் இப்போட்டியை சிறப்பான முறையில் நடத்தவுள்ளதாக மேற்கு அவுஸ்திரேலிய கிரிக்கெட் சபை தெரிவித்துள்ளது.

## மீண்டும் வருவாரா?

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் உலகப் புகழ்பெற்ற சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ன், தோள்பட்டையில் செய்து கொண்ட அறுவைச் சிகிச்சை காரணமாக தற்போது ஓய்வு எடுத்து வருகிறார்.

கோலாலம்பூரில் நடைபெறும் கொமன்வெல்த் போட்டியில் அவர் இடம்பெறவில்லை. இம்மாதக் கடைசியில் அவுஸ்திரேலிய அணி பாகிஸ்தான் செல்கிறது. அதிலும் ஷேன் வோர்ன் விளையாட மாட்டார் என்று ஏற்கனவே அறிவிக்கப்பட்டு இருந்தது.

தோள்பட்டையில் செய்த அறுவைச் சிகிச்சை காரணமாக மீண்டும் அணியில் இடம்பெறுவது சந்தேகமே என்று சமீபத்தில் ஷேன் வோர்ன் கருத்துத் தெரிவித்திருந்தார்.

இதே வேளையில் இங்கிலாந்து கிரிக்கெட் அணி வருகின்ற நவம்பர் மாதம் அவுஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் செய்து 5 டெஸ்ட்கள் கொண்ட ஆஷஸ் கோப்பைப் போட்டிக்காக அவுஸ்திரேலியாவுடன் மோதவுள்ளது.

இந்தத் தொடரில் ஷேன் வோர்ன் இங்கிலாந்திற்கெதிராக விளையாடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது. கடந்தமுறை நடந்த ஆஷஸ் கோப்பை போட்டியில் வோர்ன்: அடுத்து நடைபெறும் ஆஷஸ் கோப்பைப் போட்டியுடன்தான் கிரிக்கெட்டிற்கு குட்பை சொல்லிவிடப் போவதாகக் கூறியிருந்தார்.

## இப்போதே விற்பனை

அடுத்த வருடம் மே மாதம் 7வது உலகக் கிண்ண கிரிக்கெட் போட்டி நடக்கிறது. இதற்கான டிக்கெட் விற்பனை தற்போது பரபரப்பாக நடந்து வருகிறது. இப்போட்டிகள் தொடங்க இன்னமும் சுமார் 9 மாதங்கள் இருக்கும் வேளையில் இதுவரை 3 இலட்சம் டிக்கெட்டுக்கள் விற்பனை செய்யப்பட்டுள்ளன.

இந்த டிக்கெட் விற்பனையானது போட்டி அமைப்பாளர்களை ஆச்சரியத்தில் ஆழ்த்தி இருக்கிறது. இவற்றில் குறிப்பாக மே 15ல் நடக்கும் இந்தியா-தென்னாபிரிக்கா மற்றும் இங்கிலாந்து-இந்தியா ஆகிய போட்டிகளுக்கான மொத்த டிக்கெட்டுக்களும் விற்றுத் தீர்ந்துவிட்டன. இத்துடன் இங்கிலாந்து-மேற்கிந்தியத்தீவு, இங்கிலாந்து-தென்னாபிரிக்கா ஆகிய போட்டிகளுக்கான டிக்கெட்டுக்களும் விற்று முடிந்துவிட்டன.

இந்தியா-கென்யா, இலங்கை-இந்தியா ஆகிய போட்டிகளுக்கான டிக்கெட்டுக்கள் மட்டும்தான் இன்னமும் முழுமையாக விற்கப்படவில்லை. எனினும் இந்த ஆண்டின் இறுதிக்குள் அனைத்து டிக்கெட்டுக்களும் விற்பனையாகி விடும் என்று போட்டி அமைப்பு இயக்குநர் டெரி பிளக் தெரிவித்துள்ளார்.

## சிந்தியா பதில்கள்

* ஐ.தே.கட்சியின் மாநாடு பற்றி உமது கருத்து என்ன?

சா.சிறீரங்கநாதன், வவுனியா.

கலப்படமில்லாத ஏமாற்று!

* ஜனவரியில் நடக்குமா மாகாணசபைத் தேர்தல்?

கி.ரஷீத், மொரட்டுவ.

அதனை முடிவு செய்யப்போவது கொழும்பல்ல; வன்னி!

* கடன் வாங்கி யுத்தம் செய்வது கட்டுபடியாகுமா?

பெ.தங்கராசா, திருமலை.

நாலுபக்கம் கடன்.....
நடுவில் ஒரு எரியும் தீவு.....
அதன் பெயர்தான் இலங்கை?



வை.கோ.

* வை.கோ.வின் கட்சி விழாவில் இலங்கைத் தமிழர் தொடர்பான கோஷங்கள் நீக்கப்பட்டது ஏன்?

எஸ்.கிருபா, கொழும்பு-12.

நீக்கப்படவில்லை; தவிர்க்கப்பட்டிருக்கிறது! பிரதமர் கலந்துகொள்ளும் விழா என்பதால் இராஜதந்திர சிக்கலை தவிர்க்கும் செயல் அது! தமிழகப் பத்திரிகை ஒன்று அதற்கு காதும் மூக்கும் வைத்து வெளியிட்ட செய்திதான் அப்படியே மாற்றமின்றி சக பத்திரிகைகள் சிலவற்றிலும் வெளியானது!

* நான் ஒரு பெண்ணுடன் நட்பாகப் பழகுகிறேன். என் நண்பர்கள்கூட சந்தேகமாகப் பார்க்கிறார்களே?

கே.றிஸ்வான், மல்வானை.

அரேபிய அறிஞரான சா அதி என்பவரிடம் ஒருவர் கேட்டார்:

“ஐயா! நீங்களும் ஒரு இளம் பெண்ணும் தனியே ஒரு அறையில் இருக்கிறீர்கள்; அறையோ பூட்டப்பட்டிருக்கிறது. உள்ளே எது நடந்தாலும் வெளியே தெரியவே தெரியாது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் உங்களால் உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொண்டு இருக்கமுடியுமா?”

அதற்கு சா அதி சொன்ன பதில்: “முடியும். ஆனால் நான் கட்டுப்பாட்டோடு இருந்தேன் என்பதை யாரும் நம்பப்போவதில்லை. ஏனென்றால் உணர்ச்சியைக் கட்டுப்படுத்துவது எளிது. அதைப்பற்றிய ஊகங்களையும், சந்தேகங்களையும் கட்டுப்படுத்துவது முடியாத காரியம்!”

* பருவத்தில் சிறந்தது எது?

ஆ.பாலாம்பிகை, கண்டி.

இயேசு பெருமானிடம் ஒருவர் கேட்டார்: “இரட்சகரே! எப்படிப்பட்டவர் உமது சொர்க்க சாம்ராஜ்யத்துக்குச் செல்ல முடியும்?”

அதற்கு அவர் சொன்ன பதில்: “யார் குழந்தையைப்போல இருக்கிறாரோ அவர்தான்!”

* இந்தக் காலத்திலும் ஆராய்ச்சி மணி இருந்தால் எப்படி இருக்கும்?

செ.விஜயா, கொழும்பு-15.

அதனை அடிக்கச் செல்லும் தமிழர்கள் சந்தேகத்தின்பேரில் கைதுசெய்யப்படுவார்கள்!

* சிந்தியா! தமிழ் சினிமாவிலும் கம்பியூட்டர் தொழில் நுட்பம் புகுந்துவிட்டது. அப்படியிருந்தும் இன்னமும் ஏன் சதையை நம்பிக் கொண்டிருக்கிறார்கள்?

எஸ்.பர்ஸானா, கருத்துறை.

'காதலுக்கு மரியாதை'போன்ற கதையை நம்பும் படங்கள்தானே தற்போது தூள் கிளப்பிக் கொண்டிருக்கின்றன. இடைக்கிடையே சதையும் கொஞ்சம் காண்பிக்கப்படும்!

* ஜனாதிபதியின் பிள்ளைகளுக்கு தமது இயக்கம் ஆபத்து விளைவிக்காது என்று கூறியுள்ளாராமே தமிழ்ச் செல்வன்?

சி.சில்வஸ்ரர், வத்தளை.

வரவேற்கப்படவேண்டிய கூற்று!

* சிந்தியா! ஜயசிக்குறுய் எந்தளவில் உள்ளது?

பா.இரட்ணராஜா, இலண்டன்.

டிசம்பரில் நடத்தப்போவதாகச் சொன்ன மா.சபைத் தேர்தலை ஜனவரியில் நடத்தலாமா? என்று மேலும் ஒரு மாதம் தள்ளிச் சிந்திக்கும் நிலையில் இருக்கிறது!

* முத்தம் எப்போது திகட்டும்?

கே.ராசு, பதுளை.

இருவரில் ஒருவருக்கு எய்ட்ஸ் இருப்பது தெரியவரும்போது!

* குடியால் அழிவோர் தொகை வறிய நாடுகளில்தான் அதிகமோ?

மேரி றீற்றா, மன்னார்.

அமெரிக்காவில் மட்டும் குடியால் ஐம்பது இலட்சம்பேர் தற்கொலை செய்து கொண்டுள்ளனர் என்று ஒரு புள்ளிவிபரம் கூறுகிறது!

* நடிகைகள் துணிச்சலானவர்கள்தானே? சிம்ரான் குத்துக்கொடுத்து கலக்குகிறாரே, என்ன சொல்கிறீர்?

செல்வி.பி.நேசம்மா, மட்டக்களப்பு.

நடிகை: இப்போது வெளியாகியுள்ள படத்தில் சண்டைக்காட்சிகளில் நான் துணிவோடு நடித்திருக்கிறேன்!

விமர்சகர்: துணியோடும் நடித்திருக்கலாம்!

* யாழ் மக்கள் தந்த கட்டளையை நிறைவேற்றும் கடப்பாடு உண்டு என்கிறாரே ஆனந்தசங்கரி?

பி.நல்லதம்பி, யாழ்ப்பாணம்.

அப்படியானால், வடக்கு-கிழக்கு மக்கள் அனைவரும் 1977ல் வழங்கிய அமோகமான கட்டளையை மட்டும் ஏன் கைவிட்டு ஓடினார்களாம்?!

* குஷ்பு, ரோஜா, மீனா, கௌதமி இவர்களில் இன்றும் ஜொலிப்பவர் யார்?

செல்வி.எஸ்.நாயகி, சிலாபம்.

குஷ்புவின் பூஞ்சிரிப்புக்கு இன்னமும் உயிர் இருக்கிறது!

* சிந்தியா! நீச்சல் உடைக்கு தடை வந்தால் நடிகைகள் என்ன பண்ணுவார்கள்?

இ.சிங்கராசா, கண்டி.

எதிர் நீச்சல் போடக்கூடியவர்கள் மட்டும் நிலைப்பார்கள்.

* ஈ.பி.ஆர்.எல்.எவ். கட்சியினர் ஆயுதம் என்றால் ஏன் வெறுக்கின்றனர்?

கி.சபாரத்னம், வவுனியா.

வெறுப்பதாக யார் சொன்னது? ஊரையெல்லாம் கொத்திய பாம்பு, பல்லை இழந்து களைத்துப் போன நிலையில் அமைதிவழியைப் பற்றிப் போதிப்பது ஏன்?

பாதிக்கப்பட்டவர்கள் தடி எடுத்து தன்னை தாக்கிவிடாமல் இருப்பதற்காகத்தானே! பல் உள்ளபோதே போதித்திருக்கலாமே!

* கண்ணாடி வீட்டில் இருந்து கொண்டு கல்லெறிவது எப்படியிருக்கும்?

பி.நியூட்டன், நீர்கொழும்பு.

இங்கிலாந்தின் பொருளாதாரம் பற்றி பேரறிஞர் பெர்னாட்ஷா பேசிக்கொண்டிருந்தார்.

அந்தக் கூட்டத்தில் செஸ்டர்சன் என்ற அறிஞரும் கலந்து கொண்டார். அவர் எப்போதும் பிறரைக் கேலி செய்யக்கூடியவர்.

பெர்னாட்ஷாவைகேலி செய்வதாக நினைத்துக்கொண்டு, “நம் இங்கிலாந்தின் பொருளாதாரம் பெர்னாட்ஷா போன்று இளைத்துப்போயிருக்கிறது.” என்று கூறினார்.

உடனே பெர்னாட்ஷா: “இந்த நலிவுக்கு என்ன காரணம் என்பதற்கு நண்பர் செஸ்டர்சன் ஓர் உதாரணம்!” என்றார். கூட்டம் கரகோஷம் செய்தது.

காரணம் என்னவென்றால், செஸ்டர்சன் தொந்தியும் தொப்பையுமாக மாமிசமலை போன்று இருப்பாராம்.



'சின்னராஜா' படத்தில் கார்த்திக்-ரோஜா



படிப்பகம்

www.padippakam.com

# திருமறை தரும் பொது நெறி 27

**ஆ**ண்டவர் யோசுவாவுக்கு அறிவித்திருந்தபடி, ஏழு நாட்கள் காத்திருந்து எரிகோ நகரை இஸ்ரயேல் வீரர்கள் கைப்பற்றினர். அந்நகரிலுள்ள எந்தப் பொருட்களையும் மக்கள் தமதுடமையாக்கக் கூடாது என்று கர்த்தர் கட்டளையிட்டிருந்தார். ஆனால் யூத குலத்தைச் சேர்ந்தவனான ஆக்கான் என்பவன் எரிகோ நகரிலிருந்து சில பொருட்களை, எவருக்கும் தெரியாமல், எடுத்து தனது கூடாரத்தில் மறைத்து வைத்துக்கொண்டான்.

## வழிகாட்டிகளும் வழிதவறும் மக்களும்

ஆக்கான் புரிந்த இக்குற்றச்செயலின் விளைவு அடுத்த படையெடுப்பின்போதே பிரதிபலித்தது. எரிகோவைக் கைப்பற்றிய பின்னர் ஆயி என்ற நாட்டைக் கைப்பற்றுவதற்கான திட்டங்கள் வகுக்கப்பட்டன. நாட்டை வேவு பார்க்கச் சென்றவர்கள், அந்நாட்டினைக் கைப்பற்ற மிகச் சிறிய அளவிலான வீரர்களே போதும் என்று யோசுவாவிடம் கூறினர். அதன்படியே மிகச் சொற்பமான வீரர்களே சென்றனர். ஆனால் எதிர்பார்த்தமைக்கு மாறாக இஸ்ரயேல் படைகளில் முப்பத்தாறு பேர் ஆயிநகரப்படைகளால் கொல்லப்பட்டனர். ஏனையோர் புறமுதுகிட்டோடினர்.



"ஆண்டவர் எமக்கு உதவிபுரியாமல் கைவிட்டுவிட்டாரே!" என்று யோசுவாவும் மக்கள் குலத் தலைவர்களும் புலம்பினர். ஆண்டவர் யோசுவாவிடம்: "அழிக்கப்பட வேண்டிய பொருட்களில் சிலவற்றை உங்களில் ஒருவன் அபகரித்துவிட்டான். அதனாலேயே உங்களுக்கான தண்டனைதான் இத் தோல்வி!" என்று தெளிவாகக் கூறினார்.

இஸ்ரயேல் மக்கள் குலத் தலைவர்களை அழைத்து, "கர்த்தரின் கட்டளையை மீறி களவு செய்த பாபியைக் கண்டுபிடியுங்கள்!" என்று யோசுவா கட்டளை பிறப்பித்தார். ஆக்கான் பிடிபட்டான். தான் செய்த தவறை ஒப்புக்கொண்டான். அவனுக்குரிய தண்டனை வழங்கப்பட்டது. ஆண்டவரின் கோபமும் மறைந்தது. ஆயிநாட்டைக் கைப்பற்றும் பணியும் வெற்றிகரமாக முடிந்தது.

### கைப்பற்றப்பட்ட பிரதேசங்கள்

எரிகோ நகரக் கோட்டைக்குள் வாழ்ந்த இராகாபு என்ற பெண்மணி பற்றி கடந்த வாரம் குறிப்பிட்டிருந்தோம். அந்நகருக்கு உளவு பார்க்க வந்திருந்த இஸ்ரயேலர் இருவரை எரிகோ மன்னனின் காவலர்களிடம் பிடிபடாமல் பாதுகாத்து அனுப்பியவள் இராகாபு. எரிகோ நகரம் இஸ்ரயேல் படைகளால் கைப்பற்றப்படும் பட்சத்தில் இராகாபுவையும் அவள் குடும்பத்தினரையும் காப்பாற்றுவதாக இஸ்ரயேல் ஒற்றர்கள் வாக்களித்திருந்தனர். யோசுவாவும் அதற்கு ஒப்புதலளித்திருந்தார். அதன்படி எரிகோ நகரம் அழிக்கப்படுமுன்னர் அப்பெண்மணியும் குடும்பத்தினரும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டு இஸ்ரயேல் மக்களுடன் சேர்ந்து வாழ வகை செய்யப்பட்டது.

யோசுவாவின் வழி நடத்தலில் அணிவகுத்துச் சென்ற இஸ்ரயேல் வீரர்கள், அராபா மலையோடமைந்த பகுதிகள், நேகேபு, இத்தியர், எமோரியர், கானானியர், பெரிசியர், இவ்வியர் மற்றும் எபூசியர் ஆகியோருக்கு உரித்தாகவிருந்த நாடுகளனைத்தையும் கைப்பற்றினர். மொத்தமாக முப்பத்தொரு மன்னர்களை வீழ்த்தி நாடுகளைக் கைப்பற்றினர். கில்காலில் முகாமிட்டிருந்த வண்ணமே யோசுவாவால் இந்நாடுகளுக்கு படையினர் ஏவப்பட்டனர்.

இவ்வாறு கைப்பற்றப்பட்ட பகுதிகளனைத்தையும், ஏற்கனவே மோசே அட்டவணைப்படுத்தி வைத்திருந்தமைக்கமைய-இஸ்ரயேல் மக்கள் சமுதாயத்தினருக்கு யோசுவா பங்கிட்டு வழங்கினார்.

ஆண்டவரின் ஆணைப்படி யோசுவா தனக்குரிய பணிகளைப் பூரணமாக முடித்தார். அப்போது அவருக்கு வயது நூற்றுப்பத்து. தனது இறுதியாத்திரைக்குரிய காலம் நெருங்கியதும் மக்களிடமிருந்து விடைபெற்றார்.

இராஜகுமாரன்

தனக்கு இட்ட பணியை முடித்துவிட்ட திருப்தியுடன் நூனின் மகனும் ஆண்டவரின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவருமான யோசுவா தனது இன்னுயிரைத் துறந்தார். காகசு மலைக்கு வடபாலிருந்த திம்னத் கெரேசு என்ற நிலத்தில் யோசுவாவின் சடலம் அடக்கம் செய்யப்பட்டது.

**யோ**சுவாவின் மறைவோடு, எகிப்திலிருந்து மோசேயுடன் விடுதலைப் பயணத்தை மேற்கொண்ட இஸ்ரயேல் மக்கள் எவரும் உயிருடன் இருந்ததாகத் தெரியவில்லை. அவர்களின் வழி மரபினரே எஞ்சியிருந்தனர். எகிப்தில் அடிமைகளாகவிருந்து இஸ்ரயேல் மக்கள் பட்ட துயரங்களை இப்போதிருந்தவர்கள் அனுபவித்தவர்களல்ல. பழங்கதைகளை தமது மூதாதையர்களிடமிருந்தே அறிந்திருந்தனர். ஆண்டவர் அம்மக்களுக்கு அவ்வப்போது நிகழ்த்திய அருஞ்செயல்களைப் பற்றியும் கதைகளாகவே அறிந்திருந்தனர். ஆகவே ஆண்டவரின் பெருமைகளையும் இவர்கள் உணர்வுபூர்வமாக அனுபவித்தறியாதவர்கள்.

உலகின் கண் வாழும் மக்கள் நல்லொழுக்கமும் நற் பண்புகளும் கொண்டவர்களாக ஒற்றுமையாக, தர்ம நியாயங்களுக்குக் கட்டுப்பட்டு வாழ வேண்டும் என்றுதான் இறைவன் வாழ்க்கை நெறிமுறைகளை ஆதியிலேயே வகுத்துக் கொடுத்தார். ஆனால் மக்களோ ஆண்டவரின் ஆணைகளை உதாசீனம் செய்து தான்தோன்றித்தனமாக வாழ முற்படுகின்றனர்.

மக்கள் வழி தவறும் போதெல்லாம் வழிகாட்டிகளை உருவாக்கியும் இறைதூதர்களை அனுப்பியும் நேரான பாதையில் மக்களை இட்டுச் செல்ல உதவுகிறார். இருப்பினும் மனிதர்கள் மீண்டும் மீண்டும் நேர்வழியைத் தவறி விட்டுத் தடுமாறுகின்றனர்.

ஆண்டவர் மோசேயுடன் செய்து கொண்ட உடன்படிக்கையின் மகிமையையும் பின்வந்த சந்ததியினர் உணர்ந்தவர்களல்ல. இதனால் இம்மக்கள் இறைவனின் உடன்படிக்கைக்கு மாறாகவே- பல சந்தர்ப்பங்களில் நடக்கத் தலைப்பட்டனர். இதன் பயனாக ஆண்டவரும் இஸ்ரயேல் மக்களிடமிருந்து விலகியே இருந்தார். இதன் பயனாக 'இறைவனின் மக்கள்' என்ற பெருமைக்குரியவர்கள், பல துன்ப துயரங்களைச் சந்திக்க வேண்டியவர்களானார்கள்.

### நீதித் தலைவர்கள்

இஸ்ரயேல் மக்களை, உடன்படிக்கையின் பிரகாரம் வழிநடத்துவதற்கு அவ்வப்போது நீதித்தலைவர்களை ஆண்டவரே தெரிவு செய்தார். ஆனால் ஆண்டவரின் பெருமையை உணரமுடியாத மக்கள் தீய வழிகளையே தேர்ந்தெடுத்தனர். இதனால் அவர்கள் வேற்று இனத்தவர்களிடம் அடிமைகளாகவிருந்து பெரும் துயரங்களை அடைந்தனர். துன்ப துயரங்கள் அதிகரிக்கும் போதுதான் அவர்களுக்கு ஆண்டவரின் நினைவு வரும். அப்போதுதான் தங்களை காத்தருளுமாறு கதறி அழுவார்கள். ஆண்டவரும் இப்பாவிகளின் துயரங்களை நீக்குவதற்கு மனதிரங்கி வழி காட்டுவார். வழிகாட்டியாக ஒருவரைத் தேர்ந்தெடுப்பார். அத்தகைய நீதித்தலைவர் சில காலம் பணி புரிந்து விட்டு மறைந்ததும் மீண்டும் பாதை மாறியவர்களாக- உடன்படிக்கைக்கு முற்றிலும் மாறாகச் செயற்படத் தொடங்குவார்கள்.

### அடிமைத்தளையும் விடுதலையும்

மெசப்பொத்தாமிய மன்னன் கூசான் ரிசத்தாய் என்பவனிடம் எட்டு வருடங்கள் அடிமைகளாகவிருந்தனர். ஆண்டவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட கெனாசின் என்பவனின் மகனான ஒத்னியேல் மக்களை ரிசத்தாயிடமிருந்து விடுவித்தான். இதன் பின் நாற்பது ஆண்டுகள் இஸ்ரயேல் மக்கள் சுதந்திரமாக- மகிழ்ச்சியாக வாழ்ந்தனர். ஒத்னியேல் மறைந்ததும் மீண்டும் கர்த்தருக்கு விரோதமான செயல்களைப் புரிந்தார்கள்.

மோவாபின் மன்னன் எக்லோன், இஸ்ரயேல் மக்களை பதினெட்டு ஆண்டுகள் அடிமைகளாக வைத்திருந்தான். தங்கள் குற்றங்களை உணர்ந்து, காத்தருளுமாறு கர்த்தரைத் துதித்தனர் மக்கள். ஆண்டவர் இம்மக்கள்மீது இரங்கி பென்யமின் வழி மரபினனான ஏகூது என்பவனை வழிநடத்துநராக நியமித்தார். ஏகூது-இருபக்கங்களிலும் கூரான ஒரு குத்துவாளினால் எக்லோனின் மார்பில் குத்திக் கொன்றான்.

மோவாபு நாட்டை மீட்டு எண்பது ஆண்டுகாலம் அமைதியாக வாழ்ந்தனர். ஏகூது மாண்டபின்னர் கானானிய அரசனான யாபின் என்பவன் இஸ்ரயேல் மக்களை அடிமைப் படுத்தினான். அவனிடம் தொள்ளாயிரம் இரும்புத் தேர்கள் இருந்தன. இருபது ஆண்டுகள் வரை மக்கள் கானானியர்களின் அடிமைகளாக விருந்தனர்.

இஸ்ரயேலர்களின் அவலக்குரல் கேட்டு இறைவன் இரக்கங்கொண்டு தெபேரா என்ற பெண்மணியை நீதித்தலைவியாக்கினார். தெபேராவின் வழிகாட்டலினால் கானானிய நாட்டை மக்கள் வென்றனர். நாற்பது ஆண்டுகள் நிம்மதியாக வாழ்ந்த மக்கள் மீண்டும் ஆண்டவருக்கு விருப்பமில்லாத செயல்களில் ஈடுபட்டனர். இதனால் மிதியானியரிடம் அடிமைகளானார்கள். மிதியானியரிடமிருந்து ஆண்டவரால் தேர்ந்தெடுக்கப்பட்ட கிதியோன் மக்களைக் காப்பாற்றினார்.

கிதியோனுடன் முந்நூறு போர்வீரர்களை- ஆண்டவரே ஒரு பரிசோதனை மூலம்- தேர்ந்தெடுத்து அனுப்பிவைத்தார். இறைவனால் கூறப்பட்ட முறையிலேயே மிதியானியரைத் தோற்கடித்தனர்.

கிதியோனுக்கு மனைவியர் பலர். இவர்கள் மூலம் மொத்தம் எழுபது பிள்ளைகள் பிறந்தனர். இவருடைய வைப்பாட்டி ஒருத்தி செக்கேமைச் சேர்ந்தவள். இவளுக்கு அபிமெலக்கு என்றோர் மகன் பிறந்தான். செக்கேமிலுள்ள குடிமக்களைத் திரட்டி 'இஸ்ரேல் மக்களின் தலைவன் தானே!' என்று கூக்குரலிட்டான். செக்கேம் மக்களின் ஆதரவும் அவனுக்குக் கிடைத்தது. இவனிடம் சேர்ந்த பணத்தைக் கொண்டு முரடர்கள் பலரைத் தன்னுடன் சேர்த்துக்கொண்டான்.

தனது தந்தையாரான கிதியோனின் புதல்வர்களும் தன்னுடைய சகோதரர்களுமான எழுபது பேரையும் கொலை செய்யத்திட்டமிட்டான். கிதியோனின் இளைய மகனான யோத்தாம் மட்டும் தப்பிக்கொண்டான். ஏனைய அறுபத்தொன்பது சகோதரர்களையும் கொன்றொழித்தான். செக்கேம் மக்களும் பெத்மில்லோவின் மக்களும் அபிமெலக்கைத் தங்கள் மன்னனாக ஏற்றுக்கொண்டனர்.

(தொடர்ந்து வரும்)

**திருமறை 25 விடை** ☛ யோசுவா

**பரிசு பெறுவோர்:**

1. **சரவணமுத்து செல்வி,** மரப்பாலம், கரடியனாறு.
2. **செல்வி என். மாலதி,** 55/57, ஸ்ரேஷன் வீதி, கொட்டகலை.
3. **மைக்கல் மைதிலி,** 39, சோமசுந்தரம் அவனியு, யாழ்ப்பாணம்.
4. **ஏ.ஜி. அறூஸ்,** 11/6, பரீனாஸ் ஒழுங்கை, காத்தான்குடி-06.
5. **எம். தொம்சன் றொசல்,** 52/14, உக்கிளான்குளம், வவுனியா.

**திருமறை 27** வினா:- எரிகோவில் இஸ்ரயேல் ஒற்றர்களைக் காப்பாற்றியவரின் பெயர் என்ன?

செப்டெம்பர் 26க்கு முன்பாக விடைகளை அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:

**திருமறை 27–தினமுரசு வாரமலர், த.பெ.இல–1772, கொழும்பு.**

# செல்வியும் வாஜ்பேயியும்



**வா**ஜ்பேயி அமர்ந்திருக்கிறார். செல்வி அவரைச் சந்திக்க வருகிறார். வாஜ்பேயி முகத்தை திருப்பிக்கொண்டு பாடுகிறார்.

"நாளொரு கண்டிசன்
பொழுதொரு பெட்டிசன்
அதன்பேர் தலைவியல்ல!
நாவில் ஒன்று, நினைவில் ஒன்று
அதன்பேர் உள்ளமல்ல!"

ஜெயா: நிறுத்துங்கள் மிஸ்டர் வாஜ்பேயி. நீங்கள் பெரிய கவிஞராக இருக்கலாம். ஆனால் நான் கலைஞி. நான் ஆடினால் நீங்கள் பாட முடியாது. பார்க்கத் தான் முடியும்! நான் ஆதரவு கொடுத்திராவிட்டால் நீங்கள் ஆட்சியே அமைத்திருக்க முடியாது. மைண்ட் இட்!

வா.பே: (பாடுகிறார்)

கொடுத்ததெல்லாம் கொடுத்தீர்-நீர்
யாருக்காக கொடுத்தீர்?
நல்லதுக்கா கொடுத்தீர்?-இல்லை
வழக்குக்காக கொடுத்தீர்!

ஜெயா: (தொண்டையை சரிப்படுத்திக் கொண்டு பாடுகிறார்)

நான் ஆணையிட்டால்-அது
நடந்துவிட்டால்-இங்கு
பி.ஜே.பி. எழ விடமாட்டார்.

ஒருதவறு செய்தால்-அதைத்
தடுத்து நின்றால்-அது
வாஜ்பேயி என்றாலும்
விடமாட்டேன்!

வா.பே: (புன்னகையுடன் ஃபோனை டயல் செய்கிறார்)

யாரு மிஸ்டர் கருணாநிதியா? என் நாற்பதாண்டு கால நண்பரே நலமா? என்ன, உங்கள் பாணியில் பேசுகிறேனே? அதுதான் நாமெல்லாம் ஒரேபாணியாக சம்மதித்துவிட்டீர்களே? என்ன, செல்வி எப்போ வெளியே போறாரா? இப்போ தானே உள்ளே வந்திருக்கிறார். அது என்ன செல்வி? அப்படியானால் என்னையும் செல்வன் என்று அழைக்கவேண்டியதுதானே? (சிரித்தபடியே ஃபோனை வைக்கிறார்.)

ஜெயா: (முகம் களையிழந்து, சாயம்போன துணிமாதிரியாகிவிட்டது. உருக்கமாக பாடுகிறார்)

"மன்னிக்க வேண்டுகிறேன்! உங்கள்
ஆட்சியை தூண்டுகிறேன்! என்னை
சிந்திக்க வேண்டுகிறேன்- கலைஞரை
நிந்திக்கக் கோருகிறேன்!

சிந்திக்கும் மனம் உமக்கு
என்றென்றும் அது நமக்கு! நாம்
பிரிவென்னும் ஒரு சொல்லை
மறந்தா லென்ன!"

வா.பே: மறப்பது, மன்னிப்பது துறப்பது! ஹாஹாஹா!

எங்கள் கட்சி வளர்கிறது, ஆட்சி தொடர்கிறது. நான் ஏன் மறக்க வேண்டும் உமது மிரட்டலை! எங்கள் கட்சியின் மாநாட்டுக்கு வந்தீரா? அங்கு துள்ளி ஆடி மாவிலைத் தோரணம் கட்டியவர்களுக்கு குளிர்பானம் கொடுத்தீரா? மசூதியை இடித்த எங்கள் கூட்டம் உங்கள் போயஸ் கார்டனையும் பொடிப் பொடியாக்கிவிடும் ஜாக்கிரதை!

ஜெயா: மாநாட்டுக்கு நான் வரவில்லை. அந்தக் குறையைப் போக்கத்தானே உங்களை எங்கள் மாநாட்டுக்கு அழைக்க வந்திருக்கிறேன். சுற்றம் சூழ வந்திருந்து வாழ்த்தியருள வேண்டுகிறேன்!

வா.பே: (பாடுகிறார்)

அருகில் வந்தார், உருகிநின்றார்
சப்போர்ட் தந்தாரே!

அருகில் வந்தார் உருகி நின்றார்
இன்விடேஷன் தந்தாரே!

(நிம்மதியாக புன்னகைக்கிறார்.)

# பழிபோட சில யோசனைகள்



**ம**க்கள் போராடத் தயாரில்லை என்பதால்தான் பிரார்த்தனைக்கு அழைத்ததாக தமிழ்க்கட்சி தலைவர் ஒருவர் (ஈ.பி.ஆர்.எல்.எ.ஃப்.) கூறியிருந்தார். மக்கள்மீது பழி போடத்தக்க மேலும் சில குறிப்புக்களை அவர் போன்றோருக்கு தந்து உதவுகிறோம்.

* மக்கள் உண்ணாவிரதப் போராட்டம் நடத்தத் தயாராக இல்லை. அதனால்தான் உண்ணாவிரதம் இருக்கப் பழக்குவதற்காக வன்னி நிவாரண வெட்டை மறைமுகமாக ஆதரிக்கிறோம்.
* மக்களுக்கு வீதியில் இறங்கிப் போராடத் தெரியவில்லை. நாங்கள் கூப்பிட்டாலும் வரமாட்டார்கள். அதனால்தான் இடம் பெயர்ந்த மக்கள் அவதிப்படுவதை அமைதியாகப் பார்த்துக் கொண்டிருக்கிறோம்.
* மக்களுக்கு சிறை செல்ல விருப்பமில்லை. நாங்கள் அழைத்தாலும் புலிகளுக்கு பயந்து வரமாட்டார்கள் அதனால்தான் காரணமற்ற கைதுகளையும் தடுத்துவைப்புக்களையும் கண்டு இரசித்தபடி, அரசை ஆதரித்து வருகிறோம்.
* தமிழ் மக்கள் எதற்கும் தயாராக இல்லை. அதனால்தான் அவர்களை எல்லாவற்றுக்கும் தயார்படுத்தி தெருவில் நிறுத்தும் நடவடிக்கைகளுக்கு முழு ஆதரவு தந்து வருகிறோம்.

# புதைகுழி தோண்ட யோசனைகள்

## ஆலோசனை: மக்கள் முக்தி இயக்கம்



★ **செ**ம்மணி பகுதியை சற்றலைட்டில் படம்பிடித்து அமெரிக்காவுக்கு அனுப்ப வேண்டும். பின்னர் ராஜபக்ஷவை அமெரிக்காவுக்கு அனுப்பி அந்தப் படங்களில் புள்ளி வைத்து அடையாளம் காட்டுமாறு கோரலாம்.

★ ராஜபக்ஷவை விமானம் ஒன்றில் கொண்டுவந்து செம்மணிக்கு மேலாக வட்டமிட்டபடி அடையாளம் காட்டுமாறு கோரலாம். அவர் அடையாளம் காட்டும் பகுதியில் ஒவ்வொரு குண்டைப் போட்டால் அடையாளம் ஆழமாக பதிந்துவிடும்.

★ டைட்டானிக் படம் எடுத்த ஒளிப்பதிவாளரை அழைத்துவந்து செம்மணி பகுதியை சினிமாஸ் கோப்பில் படமாக்கி, அதனை அகன்ற திரையுள்ள அரங்கில் ராஜபக்ஷவுக்கு காண்பிக்கலாம்.

★செம்மணியைத் தவிர உலகின் எந்த பாகத்துக்கும் ராஜபக்ஷவை அழைத்துச் செல்ல அரசாங்கம் தயங்காது என்பதால், உலகெங்கும் உள்ள புதைகுழிகளை பார்வையிட அனுமதித்து, அவற்றில் எவ்வகையான புதைகுழி செம்மணியில் உள்ளது என்று காட்டுமாறு கோரலாம்.

# பேச்சாளர் பேரம்பலம்



**எ**திர்க்கட்சியை தேசத்துரோகிகள் என்று அம்மையார் தாயுள்ளத்தோடு கண்டித்ததை வைத்துக் கொண்டு, எதிர்க்கட்சி கோபப்படுவது அதன் இனவாத உணர்வையும், இனப்பிரச்சனைத் தீர்வில் அதற்கு அக்கறை இல்லை என்பதையும் காட்டுகின்றன. இப்படியெல்லாம் எதிர்க்கட்சி மக்களை திசை திருப்பாமல் அம்மையாரினினதும், அரசினதும் நல்லெண்ணத்தை புரிந்துகொண்டு, பொதியை தம் மதியால் அளந்து ஆதரிக்குமாறு அண்ணர் பம்மந்தர் கோருவதை அறிந்தால் அவரை ஒரு அரசியல் ஞானி என்று அவரது ஜென்ம விரோதிகளும் ஒப்புக்கொள்வர்.

காதிலை பூ கந்தசாமி



படிப்பகம்




அருள் ஜுவலர்ஸ்

பெண்களின் அழகோ இரகசியம்! அதை எங்களது வண்ண நகைகள்மின்னிப்பேசுகின்றன.

கிளை: 105, காலி வீதி, வெள்ளவத்தை, கொழு-06 580230

3 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

436331


## பயணம்



→ மார்கோ போலோ இத்தாலி நாட்டைச் சேர்ந்த ஒரு கடலோடி. மார்கோவின் தந்தையார் நிக்கொலோ போலோ, நிக்கொலோவின் சகோதரர் மாஃபியோ போலோ ஆகியோரும் பலநாடுகளுக்கும் சென்று வர்த்தகத்திலீடுபடுபவர்கள்.

மார்கோ 17 வயதாக இருக்கும்போது, 1271ல் தனது தந்தையார் அவர் சகோதரர் ஆகியோருடன் கிழக்கு நோக்கிப் பயணம் மேற்கொண்டார். அராபிய பாலைவனங்களை ஒட்டகங்களிலும் ஏனைய பிரதேசங்களைக் குதிரைகளிலும் சவாரி செய்தே கடந்து சீனாவை அடைந்தனர். அப்போது சீனாவை குப்ளை கான் என்ற மன்னன் ஆண்டு வந்தார்.

குப்ளை கான் நிக்கோலோ மற்றும் மாஃபியோ ஆகியோருக்கு ஏற்கனவே அறிமுகமானவர். துணிச்சல் மிக்க இளைஞனும் புத்திசாலியுமான மார்கோவை குப்ளைகானுக்கு நன்றாகப் பிடித்துவிட்டது. தனது உதவியாளர்களுள் ஒருவராக குப்ளை கான், மார்கோவை அமர்த்திக்கொண்டார். 1271ம் ஆண்டில் சீனாவுக்குப் புறப்பட்டுச் சென்ற மார்கோ 1292ம் ஆண்டுதான் தாயகம் புறப்பட்டார். 1295ல் தான் இத்தாலியின் வெனிஸ் நகரத்தை வந்தடைந்தார்.

வெனிஸ் நகரை மார்கோ வந்தடைந்த போது ஜெனீவாப்படைகளால் கைது செய்யப்பட்டு சிறையிலடைக்கப்பட்டார். மூன்று வருடங்கள் சிறை வாசம் அனுபவித்த மார்கோ 1299ல் விடுதலையானார். மொத்தம் 24,000 கிலோமீட்டர் வரை பயணம் செய்த மார்கோ போலோ, சீனாவிலிருந்து அரும்பெரும் அறிவாற்றல் வாய்ந்த சாதனங்களைத் தன்னுடன் கொண்டு வந்து சேர்த்தார்.

சீனாவின் தபால் விநியோக முறை, தாள் காகப்புழக்கம், நிலக்கரி உபயோகம் போன்ற துறைகளை ஐரோப்பிய நாடுகளுக்கு அறிமுகம் செய்தவர் மார்கோ போலோ.

மார்கோவின் தந்தை நிக்கோலோ போலோ, அவருடைய தம்பி மாஃபியோ போலோ ஆகியோருடன் சீனா பயணமாகும் முன்னர் பாப்பாண்டவர் 10வது கிரேகரி ஆண்டகையிடமிருந்து சீன மன்னன் குப்ளைகானுக்கான நற்செய்தியைப் பெறும் காட்சியைச் சித்தரிக்கும் படம் இது. பச்சை வர்ண உடையில்-17 வயதான மார்கோ போலோ காணப்படுகிறார்.

(ஒக்ஸ்ஃபோர்ட் பல்கலைக்கழக வாசிகசாலையிலுள்ள ஒரு நூலின் மூலப்பிரதியிலிருந்து எடுக்கப்பட்ட படம் இது.)




ஸ்ரீ கல்யாணி ஜுவல்ஸ்


SRI KALYANY JEWELLS

புன்னகை சிந்தும் பெண்ணுக்கு மின்னிடும் பொன்னகை பேரழகு

5 SEA STREET, COLOMBO 11
செட்டியார் தெரு, கொழும்பு

323657


## கணித ஓவியம்



↑ 'மினிமாலிஸம்' என்று இத்தகைய ஓவியங்களுக்கு இதனை வரைந்த ஃபிராங்க் ஸ்டெல்லா பெயர் சூட்டியிருக்கிறார். 1960ம் ஆண்டுகளில் இப்பாணியை அறிமுகப்படுத்தினார்.

அமெரிக்க மசாச்சசெட்ஸ் மாநிலத்திலுள்ள மால்டனில் 1936ம் ஆண்டில் பிறந்தவரான ஸ்டெல்லா, 1980களில் இதேவகை ஓவியங்களில் முப்பரிமாணத் தாக்கத்தை ஏற்படுத்தி உலகப்புகழ் பெற்றார். இத்தகைய வடிவங்களுள் பறவைகள், மிருகங்கள் ஒளிந்திருப்பது போன்ற பாவனைகளையும் ஏற்படுத்துகிறார்.

கேத்திர கணித அடிப்படையில் மிகச் சீராக, பிசிறு எதுவும் இல்லாமல் இவ்வாறு வர்ணத்தில் வரைவது லேசுப்பட்ட காரியமல்ல. முடிந்தால் நீங்களும் முயன்றுதான் பாருங்களேன்.

## பட்ட பின்னாலும்



↑ இது நம்மூர் சமாச்சாரம். ஐந்து வருடத்துக்கு முன்னர் வெட்டப்பட்ட பட்ட மரத்தில் இருந்து வேறு ஒரு மரம் வளர்ந்து நிற்கிறது.

நிலத்தில் இருந்து எதுவித உணவோ நீரோ எடுக்காமல் பட்டமரத்தில் வேரை ஊன்றி வளர்கிறது. அதிசயமரம் என்று அழைக்கின்றனர். அம்பாறை மாவட்டம் அக்கரைப்பற்றில் உள்ள சாகமவீதியில் இந்த மரம் இருக்கிறது. படமும், தகவலும்: பா. இராகேஸ்வரன்.

## என்ன இது?



↓ பார்த்ததும் மரக்குத்திபோல தெரிகிறதல்லவா? அல்ல, அல்ல, உயிருள்ள பிராணி.

அவுஸ்திரேலியாவின் தென் மாநிலங்களில் காணப்படும் ஒருவகைப் பல்லியே இதுவாகும். இது 50 சென்டிமீட்டர்வரை வளரும். கடுமஞ்சள், கறுப்பு நிறங்களில் காணப்படும் இப்பிராணி பார்ப்பதற்கு அருவருப்பாக இருக்கும். உருண்டு திரண்டு-அளவை விடப் பாரமாகக் காணப்படும் இவற்றின் மேனி தடிப்பான செதில்களால் மூடப்பட்டிருக்கும்.

இவை வேகமாக ஓட மாட்டா. எதிரிகளைக் கண்டால் ஒருவகை இரைச்சலை எழுப்பி அச்சுறுத்தும். குள்ளமான தடிப்பமான வால்போன்ற பின் அமைப்பு உண்டு.

இப்பிராணி உணவுகூடத் தேடிச் செல்லாமல்- சோம்பேறித்தனத்துடன் பல நாட்கள் மரப்பொறைகளில் படுத்துக் கிடக்கும். அப்போது வாலில் சேகரிக்கப்பட்டிருக்கும் கொழுப்பிலிருந்தே தனது பசியைப் போக்கிக்கொள்ளும்.

கண்ணை நம்பாதே, தீர ஆராய்ந்து முடிவு செய் என்பது இந்தப் பல்லி விடயத்திலும் பொருந்துகிறது பார்த்தீர்களா?

## மலர்வு



← தெற்கு ஐரோப்பிய நாடுகளிலிருந்து வட அமெரிக்காவரை-பயணிகளால் கொண்டு செல்லப்பட்ட இந்த அழகிய பூக்கள் 'சுவர்ப் பூக்கள்' என்றழைக்கப்படுகின்றன.

இவை மஞ்சள், நாவல், பளுப்பு வர்ணங்களில் கொத்துக் கொத்தாகவே பூக்கும். இச் செடி நிலத்தில் வளர்வதில்லை.

சுவர்களிலும் சுண்ணக்கற்பாறைகளிலும் வளரும் இச் செடியின் விதைகளைப் பயன்படுத்திப் பயிரிடலாம்.

இவற்றில் 12 ரகச் செடிகள் இருப்பதாகக் கூறப்படுகிறது. இளவேனிற் காலத்தில் இவை மலர்ந்து மிக அழகாகக் காட்சி தரும். ■

## மூன்றாவது பிறந்த தின வாழ்த்து



### கிஷாந்தி – நிஷாந்தி (24.09.1998)

கொழும்பில் வசிக்கும் ராசயோகம்-மலர்விழி தம்பதியினரின் அருமைக் கண்மணிகள் கிஷாந்தி-நிஷாந்தி இரட்டையர்கள் தமது மூன்றாவது பிறந்ததினத்தைத் தமது இல்லத்தில் கொண்டாடுகிறார்கள். உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் இரு கண்மணிகளும் தமிழும் சுவையும் போல வாழ்வாங்கு வாழ வசந்த வாழ்த்துக்களை வழங்குகிறார்கள்.

## புராதனம்



← உலகப் பிரசித்திபெற்ற 'பிக் பென்' (BIG BEN) மணிக்கூண்டுக் கோபுரம் பிரித்தானியப் பாராளுமன்றக் கட்டடத்தில் அமைந்துள்ளது. இலண்டன் மாநகரின் சில பகுதிகளிலிருந்து பார்த்தால் இம் மணிக்கூட்டைப் பார்த்து நேரத்தை அறிந்து கொள்ளலாம்.

கோபுரத்துள்ளிருக்கும் மணியின் எடை 12 தொன்; உயரம் 2.3 மீட்டர்; விட்டம் 2.7 மீட்டர். எக்காலத்திலும் எத்தகைய பிசகும் இல்லாமல் சரியான மணியைக் காட்டுவதற்கேற்றாற்போல் மணிக்கூடு அமைக்கப்பட்டுள்ளது.

ஒவ்வொரு கால் மணிநேரமும் ஒலி எழுப்பி நேரத்தை அறிவிக்கும் 'பிக் பென்' மணி முதன் முதலில் 1859ம் ஆண்டுதான் ஒலி எழுப்பியது. 1923ம் ஆண்டு புதுவருடப் பிறப்பன்று 'பிக் பென்' மணி ஒலி முதன் முதலாக வானொலியில் ஒலிபரப்பப்பட்டது. தொலைக்காட்சியில் 1949ம் ஆண்டு புதுவருடம் பிறக்கும்போது-நள்ளிரவில் பிக்பென் காட்டப்பட்டதுடன் ஒலியையும் ஒலிபரப்பினார்கள். 1859முதல் இன்று வரை ஓயாமல் இயங்கிக்கொண்டே இருப்பதுதான் மகா அதிசயம். இலண்டன் மாநகரில் பொது வேலைகள் ஆணையாளராகவிருந்த சேர் பெஞ்சமின் ஹோல் என்பவரை 'பிக்பென்' என்று செல்லமாக அழைப்பார்கள். அவருடைய திட்டத்தின் பிரகாரம் அமைக்கப்பட்ட இந்தச் சாதனத்துக்கு அவருடைய செல்லப் பெயரையே சூட்டிவிட்டனர்.

## மட்டக் குதிரை



↑ ஐரோப்பிய நாடுகளில் குறிப்பாக பிரிட்டனில் தனவந்தர்கள் வீட்டுப் பிராணியாக வளர்க்கப்படும் 'ஷெட்லாண்ட் போணி' என்ற இக்குதிரைகள் குள்ளமானவை. பெரும்பாலும் சிறு குழந்தைகளுக்கு குதிரைச் சவாரி பழக்குவதற்கு இக் குள்ளக் குதிரை பயன்படுத்தப்படுகிறது.

ஸ்கொத்லாந்தின் கரையோரமாகவுள்ள தீவுகளில்தான் இக்குள்ளக் குதிரைகள் காணப்பட்டமையினால் அந்தீவுகளில் ஒன்றான ஷெட்லாண்ட் என்ற பெயரே இதற்குச் சூட்டப்பட்டது.

முழுவளர்ச்சி கண்ட குள்ளக்குதிரை 115 சென்டிமீட்டருக்கு மேல் வளர்வதில்லை. ■